1123



# நீலா

சங்கரராம்

கலைமகள் காரியாலயம்

மைலாப்பூர் :: சென்னை-4

முதற்பதிப்பு—மார்ச், 1957

உரிமைபதிவு

விலை ரூபா. 2—4—0

ஞானோதயா பிரஸ், 11, ஆண்டர்சன் தெரு, சென்னை-1.

# நீலா

## 1

“அத்தான்! அத்தான்!” என்று இரைக்க இரைக்கப் பிரேமா, சேஷாத்திரியின் அறைக்கு ஓடி வந்தாள். சேஷாத்திரி, புத்தகங்களை யெல்லாம் மேஜையின்மீது எறிந்துவிட்டு, தான் காகிதத்தால் செய்த ஏரோப்ளேனைப் பறக்க விட்டுக்கொண் டிருந்தான்.

“இதென்ன அத்தான், இதுக்கு ஒரு வால் கட்டியிருக் கியே!”

“அப்போதுதான் அது நேராகப் பறக்கும்.”

“சரி, நீ முதல்லே உன் ‘ஒர்க்ஷாப்’பைக் காலி பண்ண ணும். மாமா எண்ணெய் தேய்த்துக்கொண்டு வந்து, அதுலே மரத்துண்டுகளை அடுக்க முடியுமான்னு பார்க்கப் போறார். அதுக்குள்ளே, நீ உன் சாமானை எல்லாம் மறைத்து விடணும். இல்லாத போனால், இன்னிக்கு உனக்கு ஒரு கல்யாணமாகும்!” என்று அவள் சிரித்தாள்.

“சீ! மூடு வாயை!—இப்போ மரம் எதற்கு?”

“மாடியிலே இன்னும் ஏதோ கட்டப் போறாராம்...”

சேஷாத்திரிக்குச் சில விநாடிகள்வரை என்ன செய்வ தென்று தெரியவில்லை.

பிறகு, "பிரேமா! இப்போ இது எல்லாத்தையும் கொண்டு போய் மாணிக்கம் வீட்டுலே வைத்துடலாமே. நாயினு பார்த்துட்டாருன்னு எல்லாத்தையும் உடைச்சுப் போட்டுடுவாரே! நீயும் கொஞ்சம் எடுக்கமாட்டே?" என்று கெஞ்சுவதுபோல் கேட்டுக்கொண்டான்.

"சரி சட்டுனு வா!"

அவசர அவசரமாக மேஜையின் டிராயரில் குப்பை கூளங்களினிடையே கிடந்த சாவியை எடுத்துக்கொண்டு, அவன் பிரேமாவுடன் தன் 'ஓர்க் ஷாப்பு'க்கு ஓடினான்.

அது உபயோகமற்றுக் கிடந்த ஒரு பழைய காடிகானு. அதில் துடுப்பு, பந்து போன்ற விளையாட்டுக் கருவிகளை அவன் வைத்துக்கொண்டிருப்பதாகப் பெரியவர்களுக்கு அபிப்பிராயம். ஆனால், உண்மையில் அதில் ஒடிந்து போன சைக்கிளின் சில பாகங்கள், குழந்தைகள் ஓட்டும் பொம்மை மோட்டார் வண்டிகளில் ஒன்றிரண்டு, சுத்தி, விதவிதமான கம்பிச் சுருள்கள் முதலியன இருந்தன.

இருவருமாக அவைகளைச் சுமந்துகொண்டுபோய், பங்களாவின் கோடியிலிருந்த தோட்டக்காரன் மாணிக்கத்தின் வீட்டினுள் வைத்தார்கள். மாணிக்கம் திகைத்து நின்றான். "சாயங்காலம் வரையிலும் இருக்கட்டும், மாணிக்கம். நாயினு பார்த்துட்டால் என்ன செய்யறது!" என்று சேஷாத்திரி சொன்னபொழுது, மாணிக்கத்துக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"நல்ல பிள்ளையப்பா!" என்று சொல்லிக்கொண்டு, அவன் அந்தச் சாமான்களை உட்புறமாகத் தள்ளி மறைத்து வைத்தான்.

வேலை முடிந்ததும், சேஷாத்திரி பிரேமாவுடன் தன் அறைக்குத் திரும்பிச் சென்றான்.

பிரேமாவுக்குப் பதினேராவது வயது நடந்துகொண்டிருந்தது. ஆனால், உடல் வாக்கோடு, பால் தயிரில் மூழ்கி வந்ததால் 'புசு புசு' வென்று வளர்ந்து, மற்றும் இரண்டு வயது அதிகமாகவே தோற்றம் அளித்தாள்.

சேஷாத்திரிக்குப் பதினாறு பிராயம் இருக்கும். படிப்பில் முன்னேற்றம் இல்லாவிட்டாலும், ஆட்டம் பாட்டங்களில் அவன் முன்னணியில்தான் இருந்தான். நான்கு வருடங்களுக்கு முன் பிரேமா, கிராமத்திலிருந்து படிப்புக்காக நகரத்துக்கு முதல் முதலாக வந்தபொழுது, அவன் அவளை, 'நாட்டுப்புறம்' என்று பரிகாசம் செய்தது உண்டு. ஆனால், வர வர, அவள்மீது அவனுக்கு விசுவாசம் அதிகரித்துவிட்டது. இதற்குக் காரணம், அவள் தன் அன்புள்ள மாமன் பத்மநாபனின் மகள் என்பது மாத்திரம் அல்ல. இருவருக்கும் படிப்பில் சரி சமானமாக இருந்த ஊக்கக் குறைவு என்றும் சொல்லலாம்.

தன் அறைக்கு வந்ததும், பிரேமாவுக்கு நன்றி செலுத்துவது போல, ஊதினால் ஏரோப்ளேனைப்போல் பெருக்கும் ஒரு ரப்பர்ப் பொம்மையை அவன் அவளுக்குக் கொடுத்தான். பிரேமா, சந்தோஷமாக அதை ஊதிக் காற்று அடைத்துக் கொண்டிருந்தபோது, சேஷாத்திரியினுடைய தங்கை நீலா, அங்கே வந்து சேர்ந்தாள்.

தங்கைக்கும் தமையனுக்கும் இரண்டு வருஷங்களுக்குள்ளாகவேதான் வித்தியாசம் இருக்கும். ஆனால் கல்விப் பயிற்சி இருவருக்கும் நேர் விரோதம். பள்ளியில் அவள் பெற்றுக் கொள்ளாத பரிசுகள் கிடையாது. தோற்றத்திலும் அவள் நவநாகரிகப் பெண்ணாக விளங்கினாள்.

"அது மாதிரி எனக்கும் ஒண்ணு கொடு, அண்ணா!" என்று அவள் கேட்டாள்.

"நீ என்ன குழந்தையா?"

"ஓஹோ! பிரேமாதான் குழந்தையாக்கும்! எவ்வளவு சின்னக் குழந்தையடி, அம்மா! என்னை விட உயரம், பருமன்!" என்று அவளோடு இணைந்து நின்றாள்.

"உயரம் ஒண்ணும் இல்லை. நீ சும்மாப் படிச்சுக்கொண்டே இருந்தால், அப்படித்தான் ஆவே!" என்றாள் பிரேமா.

"சரி, போகட்டும். என் 'ஸ்கேல்' ஒடிஞ்சு போயிட்டுது, உன்னுதைக் கொஞ்சம் கொடு."

"இதுக்குள்ளே இருக்கணும். இருந்தால் எடுத்துக்கோ" என்று சேஷாத்திரி, நோட்டுப் புத்தகங்களைக் கிளறிக்கொண்டிருக்கும்பொழுது, "இதென்ன?—'ப்ராகிரஸ் ரிபோர்ட்' போல் இருக்கே?" என்று நீலா அதை எடுக்கக் கையை வைத்தாள். அப்பொழுது சேஷாத்திரி கோபத்தோடு, அவள் கையைக் கெட்டியாகப் பிடித்து, உதறித் தள்ளினான். நீலாவின் முகம் சிறுத்தது. துக்கம் பீரிட்டுக்கொண்டு வந்தது.

"உன் ஸ்கேலை நீயே வச்சுக்கோ!" என்று அவள் விர் என்று போய்விட்டாள்.

"நீ ஏன் அத்தான், அப்படித் தள்ளினே? நீலா அழுதுண்டு போறாளே!" என்றாள் பிரேமா.

"போகட்டுமே! என் 'பிராகிரஸ் ரிபோர்ட்'டை இவள் என்ன பார்க்கிறது! பரிகாசம் செய்வதுக்கா?"

"எப்போ அத்தான் அவள் உன்னைப் பரிகாசம் செய்தாள்? பொய்யும் புளுகும் சொல்லாதே."

"நீ ஒரு மக்கு. பத்து மார்க்கும் எட்டு மார்க்கும் வாங்கினால் எனக்கு வெட்கமாக இருக்காதா?"

"ஏன், நிறைய வாங்கறதுதானே?" என்று அவள் குறும்புத்தனமாகச் சொல்லவே, அவன் அவளை அடிக்கக் கையை ஓங்கினான். அப்போது அவள் விலகிக்கொண்டாள்.

"சரி; இந்த ஸ்கேலை அவளுக்குக் கொடுத்துட்டு வா" என்றான் சேஷாத்ரி.

"ஐயோ, நான் மாட்டேன்! அவள் என்மேலே சண்டைக்கு வருவாள். எனக்கு நேரமாச்சு; நான் குளிக்கணும்" என்று பிரேமா போய்விட்டாள்.

பிறகு சேஷாத்திரி, தானே ஸ்கேலை எடுத்துக்கொண்டு நீலாவிடம் சென்றான்.

"உன் ஸ்கேல் எனக்கு வேண்டவே வேண்டாம்!" என்று அவள் எரிந்து விழுந்தாள்.

"இதுக்கே உனக்கு இவ்வளவு கோபம் வருகிறதே. வீட்டிலே எல்லாரும் என்னை எட்டு மார்க், பத்து மார்க்குன்னு

கேலி செய்தால் எனக்கு எப்படி இருக்கும்!'' என்று அவன் கஷ்டத்தோடு சொன்னபொழுது, நீலா தலையெடுத்து அவனைப் பார்த்தாள்.

''நிஜமாய்ச் சொல்றேன், அண்ணு! உன்னைக் கேலி பண்ணணும்னு எனக்கு இல்லவே யில்லை. நீயும் நிறைய மார்க்கு வாங்கணும்னுதான் இருக்கு'' என்று அவள் தழு தழுத்த குரலில் சொன்னுள்.

ஆனல், அவளுடைய வார்த்தைகள் அவனுடைய செவியில் விழாததுபோல, அவன் மேலே சொன்னுன். ''இந்த வீட்டுலே எனக்கு, 'ஐயோ!' என்கிறவள் பிரேமா ஒருத்திதான். ஏன்னல், நாங்கள் இரண்டு பேரும் படிக்காத மக்குகள்!'' என்று சொல்லும்போது அவனுக்கே சிரிப்பு வந்துவிட்டது. நீலாவும் சிரித்தாள்.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை. படித்தால் எல்லாருக்கும் மேலே நீ மார்க்கு வாங்குவே! நாயிஞ இப்படி வராப்போலே இருக்கே...?'' என்று நீலா புஸ்தகங்களை அடுக்கினுள். சேஷாத்திரியும் ஒரு நோட்டுப் புத்தகத்தைப் புரட்டினுன்.

அவர்களுடைய தகப்பனுர் புண்ணியகோடி இருக்கும் இடத்தில் இரைச்சல் இல்லாமல் இருக்காது. ஆசாமி, குள்ளமாகவும் ஒல்லியாகவும் இருந்தபோதிலும், குரல் மாத்திரம் ஒரு பர்லாங்குக்குக் கேட்கும். வேலையாட்களுடன் பேசிக்கொண்டு வந்தவர், நீலாவையும் சேஷாத்திரியையும் கண்டதும், ''பள்ளிக்கூடத்துக்கு நேரமாகப் போகுது!'' என்று எச்சரிக்கை செய்துவிட்டு, காடிகானவை நோக்கிச் சென்றுர்.

அவருடைய நடையே ஒரு தினுசு. கைகளை ஆட்டாமல் அவரால் நடக்க முடியாதுபோல் தோன்றியது. அதுவும் வேகமாக நடக்கத் தொடங்கிவிட்டால், கைகள் இஞ்சின் 'பிஸ்டன்' களைப்போல் வேலை செய்யும். ஒரு அலாதியான சுறுசுறுப்பு-பரபரப்பென்றும் சொல்லலாம்.

செய்ய வேண்டிய வேலையை விவரமாக ஆட்களுக்குத் தெரிவித்துவிட்டு, வீட்டுக்குள் வந்து, கஜானப் பெட்டியைத்

திறந்து, ஏதோ தொகையை எடுத்துக்கொண்டு, தயாராக இருந்த மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டு, பிரின்ஸிபால் கிருஷ்ணன் வீட்டுக்குப் போகும்படி டிரைவருக்கு உத்தர விட்டார்.

புண்ணியகோடியும் பேராசிரியர் கிருஷ்ணனும் சிறு வயதிலிருந்து வெகு காலம் வரையில் அக்கம் பக்கமாக வசித்து வந்தவர்கள். பாலியத்தில் வறுமையின் கொடுமையை இருவரும் அநுபவித்தவர்களே. வாழ்க்கையின் போக்கில் கிருஷ்ணனுக்குக் கல்விச் சிறப்பு ஏற்பட்டது. புண்ணியகோடிக்கு, ஆறு ஏழு வகுப்புக்கு மேல் கல்வி ஏருவிடினும், பன்னிரண்டு ரூபாய்ச் சிப்பந்தி நிலைமையிலிருந்து, நகரில் முக்கியமான நாலைந்து இடங்களில் மளிகை மண்டிகளைச் சொந்தமாக வைத்து, வெகு லாபகரமாக அவைகளை நிர்வகிக்கும் பெருமை கிடைத்தது.

உண்மையில், பேராசிரியர் கிருஷ்ணனுக்குச் சமூகத்தில் கௌரவம் அதிகரித்து வந்ததே யொழிய, வருமானத்தில் தமது நண்பர் புண்ணியகோடிக்குக் கிடைத்ததில் கால்பங்குகூடப் பேராது. ஆனால், செலவு மாத்திரம் நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே போயிற்று. அடுக்கு அடுக்காக வீடு நிறையக் குழந்தைகள்; கல்லூரியில் படிக்கும் மதனனிலிருந்து, அக்ஷராப்பியாச மான கோபு வரையில். நன்ருகப் போஷித்து, அவர்களை நல்ல முறையில் தயாரிக்க வேண்டுமானுல், அது லேசான காரியமா! அப்புறம் அந்தஸ்துக்குத் தக்கவாறு மோட்டார் வாகனம் ஒன்று வேண்டி யிருந்தது. போதும் போதாததற்கு, நாளுக்கு நாள் பரவும் நகரத்தின் ஆரோக்கியமான ஒரு வட்டாரத்தில் ஒரு வீட்டையும் கட்டிக்கொண்டார். அதற்குப் புண்ணிய கோடியின் சகாயம் இருந்திராவிட்டால் அவர் மிகவும் திண்டாடிப் போயிருப்பார். புண்ணியகோடியையும் தமக்குச் சமீபத்தில் வீட்டைக் கட்டிக்கொள்ளும்படி அவர் எவ்வளவோ கேட்டுக்கொண்டபோதிலும், அதற்குப் புண்ணிய கோடி சம்மதிக்கவில்லை. காரணம், ஒரு குருட்டு நம்பிக்கை தான். அவர் இருந்த இடம் 'ஆகி' வந்ததால், அதை விட்டு நகர

அவருக்கு இஷ்டமில்லை. வீட்டுக்கு எதிரில் செக்கு இருந்தபோதிலும், தமக்கு இருபுறமும் இருந்த இரண் வீடுகளை ஒன்றுக்கு மூன்ருக விலை கொடுத்து வாங்கி, ஒரு பெரிய மாளிகையைக் கட்டிக்கொண்டார். புண்ணிய கோடியின் வீட்டுக்கும், பிரின்ஸிபால் கிருஷ்ணன் வீட்டுக்கும் குறைந்தது மூன்று மைல்களாவது இருக்கும். இதனுல் இரு குடும்பத்தாருக்கும் போக்கு வரவு அதிகரித்ததே யொழியக் குறையவில்லை.

ஓடிக்கொண்டே இருந்த வண்டி, பாதி வழியில், இருந் தாற்போல் இருந்து நின்றுவிட்டது. டிரைவர் இறங்கி, வண்டி யைச் சோதித்துப் பார்த்து, "பெட்ரோல் ஆயிட்டுதுங்க" என்று சிறிது அச்சத்தோடு சொன்னுன்.

"பெட்ரோல் இருக்குதா இல்லையான்னுகூடக் கவனிக்கா மல், என்ன ஆளுப்பா நீ! அவர் எனக்காகக் காத்திருப்பாரே; காலேஜுக்கு வேறு நேரமாயிட்டுது. சரி, டின்னை எடுத்துக் கொண்டு போய், சட்டுப் புட்டுனு வாங்கிக்கொண்டு வா!" என்று புண்ணியகோடி, அவன் முன் ஐந்து ரூபாய் நோட்டை எறிந்தார். டிரைவர் வண்டியை மெள்ளச் சாலையின் ஓரமாகத் தள்ளிவிட்டு, பெட்ரோல் வாங்க ஓடினுன்.

வண்டி நின்றிருந்த இடத்திற்குப் பின்புறத்தில் சுமார் ஐம் பது அடி தூரத்தில், ஒரு வெற்றிலை பாக்குக் கடை இருந்தது. அங்கே ஒரு கைவண்டிக்காரன், சோடா புட்டிகளை இறக்கிக் கொண்டிருந்தான். அவன், மோட்டார் வண்டியைக் கடைக் காரனுக்குச் சுட்டிக் காட்டி, "அது யார் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியாமே என்ன? புண்ணியகோடி."

"பேருதான் பெரிசா இருக்குது. அவன் செய்யறதெல்லாம் பாவந்தான்!" என்று சோடா வண்டிக்காரன் துடுக்காகச் சொன்னுன்.

"அப்படி அந்த ஆள் ஒண்ணும் செய்யவில்லையே, அப்பா!"

...ீ என்னாத்தைக் கண்டே! பதினஞ்சு வருசத்துக்கு முந்தி, ...னைப்போல் கடை வச்சவன்தான் அவனும். நானே என் கைப்படச் சோடாபுட்டி போட்டிருக்கேனே? இந்தச் சண்டை வந்திச்சு, கறுப்பு மார்க்கெட் வந்திச்சு, ஆளாயிட்டான்...!''

''சண்டையிலே சம்பாதிக்காத வியாபாரி இருக்கானா? வியாபாரி என்றால், நாலுந்தான் இருக்கும். அதிலிருந்து அவன் கெட்டவன்னு நீ சொல்லலாமா?'' என்று பரிந்து பேசினான் கடைக்காரன்.

வண்டியில் உட்கார்ந்திருந்த புண்ணியகோடியின் பாம்புச் செவிகளுக்கு இவையெல்லாம் கேட்காமல் போகவில்லை. அதுவும் சோடா வண்டிக்காரன் வேண்டுமென்றே ஆத்திரத்தோடு உரக்கப் பேசுவதுபோல் இருந்தது.

''வியாபார சங்கதி எனக்கும் கொஞ்சம் தெரியும். இருந்தாலும் இவனைப்போல ஆசைக்காரனை நான் பார்த்ததில்லை. என் மருமகன் தலையிலே கல்லைப் போட்டு, அவன் சொத்தையெல்லாம் கட்டிக்கிட்ட பாவி அய்யா, இவன்!'' என்று அவன் சொன்னபோது, புண்ணியகோடிக்குத் தேகம் பதறியது. எழுந்து போய் அவனை அடிக்க வேண்டும்போல் இருந்தது. ஆனால், அவன் சரிசமானமானவன் இல்லாததால், அவனோடு வாதாடுவது தமக்குக் கௌரவக் குறைவு என்று, ஆத்திரத்தை அடக்கிக்கொண்டார்.

சோடா வண்டிக்காரன், வயிற்றெரிச்சலோடு மேலே சொல்லிக்கொண்டே போனான்: ''இரண்டரைக் காணி நிலத்தை 550 ரூபாயிக்கு வாயிலே போட்டுக்கிட்டான், அய்யா! எல்லாம் மூணு வருஷங்கூட ஆகவில்லை. இப்போ என்னா விலை விக்குது தெரியுமா?-மனை 500 ரூபாயாம். முப்பது ஆயிரத்துக்குக் கேட்டாக்கூடத் தரமாட்டேங்கறானும். இந்த அக்குருமத்துக்கு என்னா அய்யா சொல்றே!''

''அப்போ சம்மதிச்சுத்தானே வித்தாங்க?''

''என்னாத்தைச் சம்மதிக்கிறது? என் மருமகனோடு கூடப் பிறந்தவங்க மூணு பேரு. மூத்தவன் ஒரு இரண்டுங் கெட்

டான். ஆனால், அண்ணன் பேச்சுக்குத் தம்பிமாருங்க மீறி நடக்க மாட்டாங்க. இதை இந்தத் திருட்டுப் பையன் நல்லாக் கண்டுக்கிட்டான். அவனை எப்படியோ குல்லாப் போட்டு வலையிலே போட்டுக்கிட்டான்!''

இனி புண்ணியகோடிக்குச் சகிக்க முடியாமல் போய் விட்டது. கதவைத் திறந்துகொண்டு, மோட்டாரை விட்டு இறங்கி, மளமளவென்று அவனிடம் சென்றார். "நானுடா அவனை வலையிலே போட்டுக்கொண்டேன்? கடைக்காரரே, நான் வேண்டாம், வேண்டாமென்று அடித்துக்கொண்டேன். இந்தக் கதி கெட்ட பீடைங்க, என் வீட்டுக்கு நடையா நடந்து, என் உயிரை எடுத்து, அந்த மனையை என் தலையிலே கட்டினாங்க.''

"அப்போ, திருப்பிக் கொடுத்துடேன். வட்டி வேணுன்னு லும் வாங்கிக்கோ!'' என்று சோடா வண்டிக்காரன் குறுக்கிட்டான்.

"ஏண்டாப்பா! மூணு வருஷத்துக்கு முந்தித் தின்னதை யெல்லாம் இப்போ கக்கேன்! கடைக்காரரே, நீங்கள் போன மாதம் வித்த சரக்கை யெல்லாம் அவனுக்குத் திருப்பிக் கொடுத்துடுங்களேன்!''

"ஒரு சாமானை வித்துட்டால், அப்புறம், ஆயிரம் வந்தாலும் சரி, போனாலும் சரி, அதுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் இருக்குதுங்க?'' என்று கடைக்காரன் அனுசரணையாகச் சொன்னான்.

"அந்த மூளை அவனுக்கு இருந்தால் அல்ல?''

"ஊம், ரொம்பப் பேசாதே! நீ படிச்சுக் கிளிச்சது எல்லாருக்கும் தெரியும். மளிகைக் கடையிலே நீ பொட்டலம் கட்டிக் கொடுத்ததை யாரும் மறந்திடல்லே!'' என்று சோடா வண்டிக்காரன், வெகு அவமரியாதையாகச் சொன்னான்.

"அடே கழுதை! கொடுத்தால் என்னடா? திருடல்லையே? கூலி வேலை செய்யறவன்கூட மூளையினாலே கோடீச்வரன் ஆயிருக்கான். ஆனால், உன்னைப்போல மூளையில்லாத முண்டங்

கள், செக்கு மாடாட்டம் சாகிற வரையில் உழைக்க வேண்டியதுதான். மாட்டுக்கும் கேடு கெட்டவண்டா நீ!''

''அட போடா, கேப்புமாரி!''

''என்ன சொன்னே! பல்லை உடைத்துடுவேன். பொருமைக்காரக் கழுதை!'' என்று புண்ணியகோடி வண்டிக்காரன் அருகில் சென்றார்.

ஆனால் கை வண்டிக்காரன், ஒரு சோடா புட்டியை எடுத்துக்கொண்டு, ''உன் மூஞ்சி கிஞ்சியெல்லாம் எகிறிப்போகும்!'' என்று பயங்கரமாக விழித்தான். சட்டென்று கடைக்காரன், வண்டிக்காரனின் கையைப் பிடித்துக்கொண்டு, அவனைப் பின்புறமாகத் தள்ளினான்.

இதற்குள் பெட்ரோல் டின்னுடன் வந்த மோட்டார் டிரைவர் வேலு, டின்னை வைத்துவிட்டு ஓடிவந்தான். அவன் ஒரு தடியன். கை வண்டிக்காரன் பரட்டைத் தலையைப் பிடித்து, ஒரு சுற்றுச் சுற்றினான். ''அந்தக் கழுதையை ஏன் தொடறே? விட்டுடு, விட்டுடு! அந்த எச்சக்கலை நாயிக்குச் செய்ய வேண்டிய வழி வேறே! என்ன, கடைக்காரரே! உங்களைக்கூடத்தான் சாட்சி போடப் போறேன். வித்த நிலத்தைத் திருப்பி வாங்குறதுக்கு, இவன் மருமகன், அவன் அண்ணன், தம்பிகள் எல்லாரும் சேர்ந்து செய்யற அடாபுடி வேலை இது. இவன் இங்கே இருக்கிறதுகூட எனக்குத் தெரியாது. நான் கடவுளேன்னு வண்டியிலே உக்காந்திருந்தால், என்னை வாய்க்கு வந்தபடி திட்டி, வம்புக்கு இழுத்து, அடிக்கப் பார்க்கிறான். சரி, வேலு! நீ என்னை வக்கீல் ஐயா வீட்டண்டை இறக்கி விட்டு, கிருஷ்ணன் வீட்டுக்குப் போய் அவரிடத்திலே பணத்தைக் கொடுத்திட்டுத் திரும்பி வா. நான் அதற்குள்ளே இந்தப் பயல்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்யறேன்!'' என்று புண்ணியகோடி, மோட்டார் வண்டியில் உட்கார்ந்துகொண்டார்.

டிரைவர் வேலு, பெட்ரோலை ஊற்றிக்கொண்டிருந்தான். அப்பொழுது கடைக்காரன் வந்து, ''நீங்க சொல்றப்போல

மூளை கெட்டவங்க; போவுது கழுதையின்னு தள்ளி விடுங்க. நாலும் தெரிஞ்சவங்க, நீங்கள் அவன் பேச்சை ஒரு கணக்கு வைக்கலாமா?'' என்று கேட்டுக்கொண்டான்.

"நீங்கள் சொல்றது சரிதான். ஆனால், எவ்வளவு அவமரி யாதையாகப் பேசினான் பார்த்தீங்களா! அவன் நிலைமை என்ன, என் நிலைமை என்ன? உங்களுக்குத் தெரியாது. கொஞ்சம் சூடு காட்டினால்தான் புத்தி வரும். நீங்கள் ஒண்ணும் கவலைப் பட வேண்டாம். உங்களுக்கு ஒரு தொந்தரவும் வராது. உங்கள் பேரையே எடுக்க மாட்டேன், போங்க!'' என்று கடைக்காரனுக்கு உறுதி மொழி சொல்லிவிட்டு, புண்ணிய கோடி புறப்பட்டுப் போய்விட்டார்.

## 2

அன்றைத்தினம் மாலை, புண்ணியகோடி குடும்ப சகித மாகத் தமது நண்பர் கிருஷ்ணனின் வீட்டுக்குப் புறப்பட்டார். மோட்டார் வண்டி, சிறிது தூரத்துக்கு அப்பால் வந்துகொண் டிருந்தபோதே, பிரின்ஸிபால் கிருஷ்ணனின் குழந்தைகள், "புண்ணியகோடி மாமா வருகிறார்!'' என்று குதூகலத்தோடு கூச்சலிட்டன.

புண்ணியகோடி, தம் சுபாவமான உற்சாகத்துக்கு யாதொரு குறைவுமின்றிக் கைகளை ஆட்டிக்கொண்டே உள்ளே நுழைந்தார். காலையில் நடந்த சம்பவம் போன்றவை, அவருக்கு வெகு சகஜமானவை யாதலால், அதை அவர் அடி யோடு மறந்துவிட்டார் என்றே சொல்ல வேண்டும். குழந்தை ஒவ்வொன்றுக்கும் ஒரு தின்பண்டப் பொட்டலம் கிடைத்தது.

"இது ரொம்பக் கெட்ட வழக்கம் புண்ணியா!'' என்று பிரின்ஸிபால் கிருஷ்ணன், தம் நண்பருக்குப் புத்திமதி சொல் வதுபோல் உரைத்தார்.

"ஆமாம், நீ எல்லாத்துக்கும் வாத்தியார் வேலை செய் யாதே! கோவிலுக்குப் போனாலும் குழந்தைகள் இருக்கிற இடத்துக்குப் போனாலும் வெறுங் கையோடு போகக் கூடா

துன்னு பெரியவர்கள் சொல்லுவார்கள். அது தெரியுமா உனக்கு?''

"சரி, சேஷாத்திரி எங்கே?'' என்று, வண்டியிலிருந்து பிரேமா, நீலா, நீலாவின் தாயார் சாரதாம்பாள் ஆகியோர் மாத்திரம் இறங்குவதைப் பார்த்துவிட்டுக் கிருஷ்ணன் கேட்டார்.

புண்ணியகோடி பதில் சொல்வதற்கு முன், "மீனம்பாக்கத் துக்குப் போயிருக்கான், மாமா'' என்றாள் நீலா.

உள்ளே நுழையாமல் அங்கே நின்றவாறு, பிரேமா தன் தோழி லக்ஷ்மியுடன், கை கோத்துக்கொண்டு, சம்பங்கிச் செடி இருக்கும் இடத்துக்குச் சென்றாள். புன்முறுவலுடன் வர வேற்ற அமிருதவல்லி அம்மாளுடன் சாரதாம்பாள் உட்புற மாகப் போனாள்.

"மீனம்பாக்கத்தில் என்ன வேலை?'' என்று கிருஷ்ணன் கேட்டபோது, மாடியில் தன் அறையிலிருந்து, அவருடைய மகன் மதன், கீழே இறங்கி வந்தான். 'பாப்பா' என்ற செல்லப் பெயராலேயே எல்லோரும் அவனை அழைத்தார்கள்.

"ஐந்து ரூபாயோ பத்து ரூபாயோ கொடுத்தால், ஏரோப் ளேனில் உட்கார வைத்து, ஆகாசத்திலே இருந்து, நகரத்தைச் சுற்றிக் காட்டுகிறார்களாமே, அதற்காகப் போயிருக்கான்'' என்று நீலா பேசினாளே தவிர, அவளுடைய கண்ணோட்ட மெல்லாம் மதன் பக்கமே சென்றது.

"இதென்ன, இந்த ஏரோப்ளேன் பைத்தியம் அவனுக்குப் பலமாகப் பிடித்துவிட்டதே!'' என்றார் கிருஷ்ணன்.

இதற்குள், சமீபத்தில் வந்து நின்றுகொண்ட மதனைக் காட்டி, "எல்லாம் பாப்பா செய்த வம்புதான்'' என்றாள் நீலா.

"அய்யோ, நான் என்ன செய்தேன்!'' என்றான் மதன் புன்முறுவலுடன்.

"நீ, போன வாரம் ஏறிப் பார்த்தேன்னு சொன்னயாமே! உன்னைவிட அதுக்கு ஏரோப்ளேனைப்பத்தி எவ்வளவோ தெரியுமே! அதுமட்டும் சும்மா இருக்குமோ!'' என்றாள் நீலா.

"அதுலே ஒன்றும் பயம் இல்லையே, கிருஷ்ணு?'' என்று புண்ணியகோடி கேட்டார்.

"ஊஹும், ஒரு பயமும் கிடையாது. நமக்குத்தான் புதிதாக இருக்கிறது. அவசரப் பிரயாணத்துக்கு எல்லாத் தேசங்களிலேயும் பிளேனைத்தான் உபயோகிக்கிருர்கள்'' என்ருர் கிருஷ்ணன்.

"நீலா, வீணுக என்மேலே பழியைப் போடருள், மாமா. சேஷாத்திரிக்குப் பிளேனை ஓட்டக்கூடத் தெரியும்'' என்ருன் மதன்.

"ஆமாமாம்! மேலேயிருந்து நகரத்தைப் பார்த்தால், ரொம்பத் தமாஷா யிருக்குன்னு, நீ அவனண்டை சொன்னயா இல்லையா?'' என்று நீலா, கண்டிப்பாகக் கேட்டாள்.

"ஆமாம்; நாளைக்குக் கல்யாணம் பண்ணிக்கப் போறவனை இப்படி, நீ, நீன்னு பேசலாமா, நீலா?'' என்ருர் புண்ணியகோடி.

நீலாவுக்கு முகம் சிவந்தது.

"போங்க, நாயிஞ!'' என்று அவள் உள்ளே ஓடிவிட்டாள். மதன், அவளைப் பின் தொடர்ந்து சென்ருன். தந்தையர்கள் இருவரும் உள்ளூர ஆனந்தப்பட்டுக்கொண்டார்கள்.

"எது வேண்டுமாஞலும் செய்துகொள்ளட்டும். படிப்பிலேயும் கொஞ்சம் அக்கறை வைக்கக் கூடாதா? கொஞ்சம் கவனிச்சுக்கோடான்னு மதன் கிட்டே எத்தனையோ தடவை சொல்லி ஆயிட்டுது. நீதான் அதைக் காதுலேயே போட்டுக்க மாட்டே!'' என்று புண்ணியகோடி முறையிட்டார்.

"பயித்தியம் மாதிரி பேசறயே, புண்ணியா? படிப்பு விஷயத்திலே, நம்ம குழந்தைகள் நாம் சொன்னபடி கேட்குமா? அதுகளுக்காகப் புத்தி வரணும். இல்லாத போஞல் வேறு யாரையாவது பிடிக்கணும். எங்க காலேஜிலே புதிதாகப் பட்டம் பெற்ற ஒரு பிள்ளையாண்டான் 'டியூட்டர்'ராக வந்திருக்கிருன். அவன் நல்ல புத்திசாலி. அவனை மெள்ள ஏற்பாடு செய்கிறேன்.''

"ஏதாவது செய், அப்பா. அவன் கவலையே எனக்குப் பெரிதாய்ப் போச்சு. ஆனால், அந்தக் குட்டி நீலி இருக்கே, அது எவ்வளவு கெட்டிக்காரி தெரியுமா! எல்லாத்துலேயும் அவள்தான் முதல்! உண்மையாய்ச் சொல்றேன், படிப்பை நிறுத்தாமல் சொல்லிக் கொடுத்தால் அவள் மதனைக்கூட மிஞ்சி விடுவாள்!" என்றார் புண்ணியகோடி பெருமையுடன்.

"ஓ! இரண்டு பேரும் சரியாகத்தான் இணைஞ்சிருக்கார்கள்! அதோ பார், அவன் மூணு விரல்களைக் காட்டுகிறான். நேற்று, காலேஜிலே அவனுக்கு மூன்று பிரைஸ் கிடைத்தது. ஒண்ணு தங்க மெடல், பாக்கி இரண்டும் வெள்ளி. அதைக் காட்ட மாடிக்கு அழைத்துக்கொண்டு போகிறான்."

இப்பொழுது ஒரே கூச்சல். "நானும் பார்க்க வரேன்" என்று கூவிக்கொண்டு, பிரேமா அவர்கள் பின்னால் ஓடி வந்து கொண்டிருந்தாள். "நானும் கூட ..." என்று அவளுக்குப் பின் பிரேமாவின் தோழி லக்ஷ்மி வந்தாள். இதைப் பார்த்து, மற்றும் இரண்டு குழந்தைகளும் பின்பற்றின.

மாடியில் ஒரே அமர்க்களம் ஆகிவிடவே, அநேக முக்கியமான விஷயங்களைப்பற்றிப் பேச வேண்டி இருந்ததால், நண்பர்கள் இருவரும் எட்டிப் போய், ஒரு மரத்தடியில் போட்டிருந்த பெஞ்சியின்மீது உட்கார்ந்து கொண்டார்கள். சிறுவர்களும் தங்கு தடையின்றிக் கொட்டம் அடித்தார்கள்.

"ஏன் பிரேமா, அப்படிக் கத்தறே?" என்று நீலா கடுத்துக் கொண்டாள்.

"ஆமாம், நீ மெள்ளப் பேசுகிற யாக்கும்! எல்லாரையும் விட உன் தொண்டைதான் பெரிதாய் இருக்கு!"

"அப்படிச் சொல்லு!" என்று மதன் கையைத் தட்டினான். எல்லாக் குழந்தைகளும் ஒரே அடியாகக் கைகளைத் தட்டின.

"இது என்ன கலாட்டா! எனக்குக் கோபம் கோபமாக வருது!" என்றாள் நீலா.

"வரட்டுமே!" என்றான் மதன், சில விநாடிகள் கண்கொட்டாமல் அவள் முகத்தைப் பார்த்தவாறு. அவளுடைய பார்வை

யும் அவனுடைய விழிகளில் புதைந்தது. பிறகு, "மெடல்களை எடேன்!" என்று கெஞ்சுவதுபோல் சொன்னாள். மதன் அவை களைத் தன் பெட்டியிலிருந்து எடுத்து, மேஜையின்மீது பரப்பி வைத்தான். சிறுவர்கள் சூழ்ந்துகொண்டு, தலையோடு தலை முட்டியவாறு பார்த்தனர்.

"காலேஜிலே படிக்கிறபோது நானும் இதுமாதிரி வாங்கப் போறேன்" என்றாள் நீலா.

"கட்டாயம் வாங்கணும்" என்று மதன் ஆமோதித்தான். இப்பொழுது பிரேமாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"என்னடி சிரிக்கிறே?" என்று நீலா கோபமாகக் கேட்டாள்.

"ஒண்ணுமில்லை!" என்னும்போதே பிரேமாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

"சொல்றயா, இல்லையா?" என்று நீலா ஆள் காட்டி விரலை ஆட்டி, அதட்டினாள்.

"எனக்கு அத்தான் நினைவு வந்தது. அதுக்கு நீ என்னவோ ரொம்ப மிரட்டறயே!" என்று பிரேமாவும் ஆக்ஷேபித்தாள்.

மதன், பிரேமாவின் மனத்தில் இருந்ததை ஊகித்துக் கொண்டான். நீலாவும் ஒருவிதமாக உணர்ந்தாள். பிறகு அவர்கள், அன்றைக்குச் சினிமாவுக்குப் போவதைப்பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.

"இன்னிக்குப் போகலாம்னு சொன்னயே, அண்ணா?" என்று மதனின் தங்கை லக்ஷ்மி கெஞ்சினாள்.

"சேஷாத்திரி இல்லாமல் எப்படிப் போவது? இனிமேல் நாளைக்குத்தான். எல்லாரும் சேர்ந்து போனால்தான் வேடிக்கையாக இருக்கும்" என்றான் மதன்.

"அண்ணா இல்லாவிட்டால், பிரேமாவும் வரமாட்டாள்" என்றாள் நீலா.

"ஆமாம், வரமாட்டேன்தான், போயேன்!" என்று பிரேமா, காரமாகச் சொன்னாள்.

"இன்னிக்கு என்னவோ, பிரேமாவுக்குக் கோபம் கோபமாக வருது!" என்று நீலா அன்புடன் அவள் தலையைத் தடவினாள்.

இப்பொழுது, அத்தை வேதவல்லி அம்மாள் அவர்களைக் கீழே வரும்படி அழைப்பது கேட்டது.

"எதுக்கு, அத்தை?" என்று நீலா மாடியில் இருந்தவாறு எல்லோர் சார்பிலும் பேசுவதுபோல் கேட்டாள்.

"கொஞ்சம் பலகாரம் தின்றுவிட்டுப் போங்கள், அம்மா."

"எனக்கு இப்போ பலகாரமே வேண்டாம், அத்தை."

"பழரசத்தையாவது குடித்து விட்டுப் போங்களடி. இரண்டு கூடை ஆரஞ்சை என்ன செய்கிறதென்று, ரசத்தைப் பிழிந்து, ஐஸ்லே வைத்திருக்கேனே.—நீலா, என் கண்ணு இல்லையா?—நீ வந்தால் எல்லாரும் வந்துவிடுவார்கள்" என்றாள் வேதவல்லி அத்தை, மாடிப் படிகளின் கீழ் நின்றுகொண்டு.

"ஆரஞ்சுன்னால் நான் வரேன்" என்று பிரேமா கீழே இறங்கினாள்.

"நானும், நானும்..." என்று சில குழந்தைகள் அவளைப் பின்பற்றின.

"நாமும் போகலாம், வா" என்று மதன் எழுந்து நீலாவை அழைத்தான்.

"அவ்வளவு பழம் யார் கொடுத்தார்கள்?"

"வடக்கே அப்பாவுக்குச் சிநேகிதர் ஒருவர் இருக்கார். காலேஜிலே இரண்டு பேரும் ஒண்ணாய்ப் படிச்சவங்களாம். சிவராஜன் என்று அவர் பெயர். அவர் கொண்டு வந்தார். அது வேறே சங்கதி" என்று மதன் சிரித்தான்.

"என்ன, சொல்லேன்?"

"அதெல்லாம் சின்னவர்களுக்குச் சொல்லக்கூடாது. சரி, அத்தை காத்துக்கொண் டிருப்பாள், வா."

"நீ சொன்னால்தான் நான் வருவேன்" என்று நீலா ஸ்திரமாக உட்கார்ந்துகொண்டாள்.

"பெரியவர்கள் சமாசாரத்தை எல்லாம் கேட்கக் கூடாது!"

“ஆமாம், நீ ரொம்பப் பெரியவனுக்கும்! நீ சொல்றயா, இல்லையா?” என்று அவள் அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

“நீ யாரிடத்திலேயும் சொல்லக் கூடாது!”

“மாட்டவே மாட்டேன். நீ வேண்டுமானுல் பார், நிஜம் மாய்ச் சொல்றேன்!”

“அவருடைய பையன் எங்கள் காலேஜூலே படித்துச் கொண்டிருக்கான். உனக்குக்கூடத் தெரியும், நீலா. காலேஜ் டிராமாவிலே சகுந்தலை வேஷம் போட்டானே. எப்பவும் பெண் வேஷந்தான் போடுவான்.”

“அவனு? அன்றைக்கு யாரோ மந்திரிக்கு டீ பார்ட்டி கொடுத்தபோது, பெண் வேஷம் போட்டு நடிச்சுக் காட்டினுனே?”

“அவனேதான்! அவன் இந்த வருஷம் இன்டர்மீடியட் பரீக்ஷைக்குப் போயிருக்கிறுன். பாஸ் ஆகுமின்னு அவனுக்கே நம்பிக்கை இல்லை. அப்பா வழியாக அவனுக்கு மெள்ளப் பாஸ் வாங்கிடணுமின்னு அவன் அப்பா பார்க்கிறுர். ஆனுல், அப்பா சங்கதி அவருக்குத் தெரியாது. ரூலுக்கு விரோதமாக அவர் செய்யவே மாட்டார்!”

“அய்யோ பாவம்! ‘கிரேஸ்’ மார்க் போடப்படாதா? எங் கள் வாத்தியார் எத்தனையோ பேருக்குப் போடுருரே!”

“ஆமாம், ஹைஸ்கூல் பரீக்ஷைக்கும் காலேஜ் பரீக்ஷைக்கும் வித்தியாசம் இல்லையா, நீலா? ஒருத்தனுக்குப் போட்டால், அவ னைப்போல மார்க் வாங்கினவன் எல்லோருக்குந்தான் போட ணும். அது அப்பாவுக்கு இஷ்டமில்லை.”

“அய்யோ பாவம்! அவனுக்கு எவ்வளவு மார்க் குறை கிறது?”

“அதை இன்னும் அவர் பார்க்கவே இல்லை.”

“அடே, பாப்பா, நீலா நீங்களும் வந்து, கொஞ்சம் குடி யுங்களேன்” என்று அத்தை வேதவல்லி அம்மாள், இப்பொழுது

உரக்கக் கூப்பிடவே, அவர்கள் இருவரும் வேகமாகக் கீழே இறங்கினார்கள்.

**வே**தவல்லி அம்மாள், அமிர்தவல்லி அம்மாளின் தமக்கை. பிக்குப் பிடுங்கல் இல்லாத விதவை. கையில் இருந்த சொற்ப ஆஸ்தியைத் தங்கைக்கே கொடுத்து விட்டு, அவள் வீட்டோடு வீடாக விழுந்து கிடந்தாள். உண்மையில் அமிருதவல்லியம்மாள் அத்தனை குழந்தைகளைப் பெற்றும், வீட்டுக் கவலையற்று, ஆரோக்கியத்தோடு வாழ்ந்து வந்ததற்குக் காரணம், தாய் ஸ்தானத்தில் இருந்த அவளுடைய தமக்கைதான்.

'அம்மா'வைவிடப் 'பெரியம்மா' விடத்தில் குழந்தைகளுக்குச் சலுகை அதிகம். இந்த நிலைமையில், குழந்தைகளை வளர்த்த பாசம் அதிகரித்துக்கொண்டே போனதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

மதனையும் நீலாவையும் பக்கத்தில் உட்கார வைப்பதில் வேதவல்லி யம்மாளுக்கு ஓர் அலாதியான சந்தோஷம். அவள் மனத்தில் இருவரையும் வெகு காலத்துக்கு முன்பே மணமக்கள் ஆக்கிவிட்டாள். அவர்களுக்கு மிகவும் இஷ்டமான தின்பண்டங்களைத் தேடிப் போடவே, அவர்கள் ஆனந்தமாகப் புசித்துக்கொண்டு, குழந்தைகளோடு குழந்தைகளாக வம்படித்தனர்.

நீலாவிடத்தில் அவளுடைய தகப்பனாரின் ஜாடையே அதிகமாக இருந்தது. ஆனால், குணங்கள் எப்படியோ சொல்ல முடியாது. நீலா, குள்ள ரகத்தைச் சேர்ந்தவள் என்றே சொல்ல வேண்டும். பள பளவென்று ஜொலித்த விழிகளில், புத்திக் கூர்மையும் சுறுசுறுப்பும் பிரகாசித்தன. விசாலமான நெற்றியும், மிருதுவான கன்னச் சரிவுகளின் வாட்டமும் அவளுடைய முக வாய்க்கட்டைக்கு ஓர் அழுத்தமான தோற்றத்தை அளித்தன. சிரித்துப் பேசிக்கொண் டிருந்தபோது கூட, தன்னை அறியாமல் அவள் கையை ஆட்டுவதும் வீசுவதும், தனக்கென்றே ஒரு போக்கு அவளுக்கு உண்டென்பதை எடுத்துக் காட்டின.

அவளைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு, அவளோடு சரஸமாகப் பழகிக்கொண் டிருந்த மதனிடம், கல்லூரியில் பல பரிசுகளைப் பெற்றுப் புகழடைந்த இளைஞன் என்ற பாவமே இல்லை. உருவத்தில் வாட்ட சாட்டமாக இருந்த போதிலும், தோற்றத்தில் ஒரு விதமான அமைதி, ஈவு இரக்கமுள்ள சுபாவம். ஒரு நொடியில் விஷயங்களை அறிந்துகொள்ளக்கூடிய சக்தி, இவைபோன்ற குறிகள் நன்கு விளங்கின. வெட்ட வெளியைவிடக், கட்டிடங்களின் உள்ளேயே அதிகக் காலத்தைக் கழிப்பவன் அவன் என்பது புலப்பட்டது.

சிற்றுண்டி முடிந்து, சிறுவர்கள் எழுந்து வரும் சமயத்தில், ஒரு பெரிய மோட்டார் உள்ளே நுழைந்தது. அதில் உட்கார்ந்திருப்பவர்களைக் கண்டதும், மதன், நீலாவினிடம் ரகசியமாகச் சொன்ஞன்: "காக்கி டோபி போட்டுக்கொண் டிருப்பவர்தான் சிவராஜன்; ஆரஞ்சுப் பழம் கொண்டு வந்தவர்."

அதன்மேல், நீலா அவரைக் கவனித்துப் பார்த்தாள். இதற்குள் பேராசிரியர் கிருஷ்ணன் எழுந்து, வணங்கி, அவர்களை அன்புடன் வரவேற்ருர்.

"உள்ளே போகலாமே!" என்று கிருஷ்ணன் சொன்னதற்கு அவருடைய கல்லூரித் தோழரான சிவராஜன், "இப்படியே உட்காரலாமே; காற்ருேட்டமாக, ஆனந்தமாக இருக்கிறதே. ஊம், மறந்துவிட்டேனே; இவர் எனக்கு ஒன்றுவிட்ட மைத்துனர்; சுவாமிநாதன் என்று பெயர். கல்வி இலாகாவில் உதவிக் காரியதரிசியாக இருக்கிருர். நீங்கள் கேள்விப்பட் டிருக்கலாமே?" என்ருர்.

"ஓ! கேள்விப்பட் டிருக்கிறேனே! ஆஞல் சந்திக்கச் சந்தர்ப்பம் ஏற்படட்டதில்லை" என்ருர் கிருஷ்ணன்.

"உங்களைப்பற்றித்தான் எல்லாருக்கும் தெரியும்" என்ருர் சிவராஜன்.

"சரியான வார்த்தை!" என்று சுவாமிநாதன் புன்முறுவல் செய்தார்.

"நீங்கள் பரஸ்பரம் அறிமுகம் ஆகவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. உதவிக் காரியதரிசிகள் என்றால், உள்ளிருந்தவாறு காரியதரிசியின் வேலையைச் செய்கிறவர்கள் தாமே?"

"சரிதான். பிறகு கல்வி இலாகாவே நான்தான் என்று சொல்லிவிடுவீர்கள்போல் இருக்கிறதே!" என்று சுவாமிநாதன் சிரித்தார்.

இப்பொழுது புண்ணியகோடிக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. முதலாவது, தான் அங்கே இருப்பது உசிதமில்லையென்று உணர்ந்தார். இரண்டாவதாக, அதிகமாகப் படித்தவர்களைக் கண்டால் அவருக்கு ஒரு விதமான கூச்சமும் அச்சமும் ஏற்பட்டுவிடும். இப்படிப்பட்ட சமயங்களில், அவர் தமக்குப் படிப்பு இல்லாததைக் குறித்து, வருந்தி உருகுவார். அதனால் அவர் மெள்ள எழுந்து, "நான் போய் வருகிறேனே?" என்றார்.

"என்ன அவசரம்? உள்ளே போய், திருத்தணித் திருவிழாவுக்குத் தேவையான சாமான்களுக்கு ஒரு ஜாப்தா தயார் செய்யேன். அதற்குள் நானும் வருகிறேன்" என்று புண்ணியகோடியை அனுப்பிவிட்டு, கிருஷ்ணன் வந்தவர்களோடு சிறிது நேரம் பேசினார்.

ஆனால், சம்பாஷணையினால் அவர் முகத்தில் அருவருப்புத்தான் உண்டாயிற்று. கடைசியாக விடை பெற்றுக்கொள்ளும்பொழுது, அவருடைய நண்பர் சிவராஜன் தம் மைத்துனரைக் காட்டி, "சுவாமிநாதன் லேசுப்பட்டவரென்று நினைக்காதீர்கள்! 'பிரமோஷ'னிலிருந்து மாறுதல் வரையில் அவன் கையில்தான் இருக்கிறது. அவனால் உங்களுக்கு எவ்வளவோ அநுகூலம் ஆகும்" என்றார்.

இதைக் கேட்டதும், பிரின்ஸிபால் கிருஷ்ணனின் முகம் சுளித்தது; உள்ளூர அவர் ஒரு தீர்மானத்தைச் செய்துகொண்டார்.

* * *

சினங் கூர்ந்த முகத்துடன் கிருஷ்ணன் வீட்டுக்குள் சென்றார். ஹாலில், அநேகமாக எல்லோரும் வீற்றிருந்தனர். வேதவல்லி அம்மாளைப் பார்த்து, புண்ணியகோடி உற்சாகத்தோடு ஏதோ பிரசங்கம் செய்துகொண் டிருந்தார். "பணம் இல்லாமல் எந்தக் காரியத்தைச் செய்ய முடியும், அக்கா? தெரியாத்தனமாகவா, 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்று சொன்னார்கள்? இதோ பார், பாப்பா! படிப்பு விஷயத்திலே உன் அப்பா சொன்னபடி கேள். பணம் சம்பாதிக்கிற விஷயத்திலே நான் சொல்கிறபடி கேள். அடே, இவன் கேட்டுக்கொண்டே வராண்டா!'' என்று புண்ணியகோடி கையைத் தட்டிச் சிரித்தார்.

கிருஷ்ணனுக்கும் புன்சிரிப்பு வந்தது. "என்னடா ர்களை செய்யறே?'' என்று அவரும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

"உனக்குப் பிழைக்கத் தெரியாதுன்னு சொல்றேன்.''

"இவ்வளவுதானே? உனக்குப் பிழைக்கத் தெரியாதுன்னு நான் சொல்வேன். எல்லாம் அபிப்பிராய பேதந்தான். ஆனால், இப்போ வந்து போனாரே, என் பால்ய சிநேகிதர் சிவராஜன், அவர் பிழைக்கிற வழியை உனக்குமேலே கத்துண் டிருக்கார், அப்பா. நீ அவரோடே கொஞ்சம் பேசாமல் வந்துட்டயே?''

"ஆமாம்; கொல்லன் பட்டறையிலே ஈக்கு என்ன வேலை? படிப்பில்லாதவன் ஒரு மனுஷனோடு சேர்த்தியா? நான் சொல்றது சரிதானே, அக்கா? இந்தப் படிப்பில்லாத குறை, எனக்குச் சாகிறவரையிலும் இருக்கும். ஆனால் படிப்பும் வேணும் பணமும் வேணும். ஒண்ணிருந்து ஒண்ணில்லா விட்டால் சுகமில்லை. என்ன, அக்கா?'' என்று மறுபடியும் வேதவல்லியம்மாளைப் பார்த்துப் புண்ணியகோடி சொன்னார்.

"ஆமாம், ஆமாம்'' என்று அந்த அம்மாளும் தலையை அசைத்துவிட்டு உள்ளே சென்றாள்.

"சரி, இந்தத் தடவை திருத்தணிக்கு நம்மோடு, குறைந்தது பத்து நண்பர்களாவது வருவார்கள். அவர்கள் சாப்பாட்டுக்

கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இவர் எங்கே வருகிறார், அப்பா? ஒரு நாளும் இல்லாமல் இன்றைக்கு என்ன வந்தது?''

''யார், கிருஷ்ணா?''

''பக்கத்து வீட்டுச் சதாசிவம். வாங்க, ஏது, அத்தி பூத்தாப்போலே இருக்கிறதே! உட்காருங்கள்.''

''வேலைதான் சரியாய் இருக்கிறதே, ஸார்! ஊம், உங்களுடைய வேலைக்காரன் கொஞ்சம் அதிகப் பிரசங்கியாய் இருக்கிறான்.''

''என்ன, முத்துவா? அவன் அப்பாவி ஆயிற்றே! ஒரு வம்புக்கும் போக மாட்டானே?''

''அப்பாவி என்ன; 'மடையன்!' என்று சொல்லுங்கள். முந்தாநாள் அவன் என்ன செய்தானும் தெரியுமா? என் பிள்ளை நடேசனுக்கு ஒரு தேங்காய் மூடியை அப்படியே தின்னக் கொடுத்துவிட்டானும்!''

''இதிலே என்ன தப்பு?''

சதாசிவத்துக்குக் கோபம் வந்துவிட்டது. ''என்ன, ஸார், நீங்கள்கூட இப்படிச் சொல்கிறீர்கள்! பையன் இப்பொழுது தான் டைபாய்டு ஜுரத்திலிருந்து பிழைத்து எழுந்திருக்கிறான்! அது மக்களிக்காமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று டாக்டர் சொல்லியிருக்கிறார். இவன் தேங்காயைக் கொடுக்கிறான்! அதற்குத் தகுந்தாற்போல் இன்றைக்குக் குழந்தைக்குக் காய்ச்சல் கண்டிருக்கிறது. நாங்கள் தவிக்கிறது எங்களுக்கல்லவா தெரியும்?''

''உண்மைதான், ஸார், உண்மைதான்! ஆனால் பாவம், அவனுக்குத் தெரிந்திராது.''

''தெரிந்தால் என்ன? தெரியாவிட்டால் என்ன ஸார்? மொத்தத்தில் அவனால் ஆபத்து. அவனுக்குப் புண்ணியம் உண்டு! இனி மேல் எங்கள் குழந்தைகள் வழிக்கு வரவேண்டாம் என்று சொல்லுங்கள்'' என்று கூறி, அவர் விர் என்று போய்விட்டார்.

"இது ஒரு வம்பா? நல்ல ஆளைத் தேடிப் பிடித்தாய், அப்பா" என்றார் புண்ணியகோடி.

"ஆளுக்கு என்ன? அவனைப்போல யோக்கியன், விசுவாசமுள்ளவன், இந்த ஊரிலேயே இருக்கமாட்டான்.

"ஆமாம், ஆமாம். இவ்வளவு மூளை கெட்டவனும் இருக்க மாட்டான்! சரி, அவனைப் பார்த்துச் சொல்லித் தொலை. தேங்காய்க்கு மருந்தாக இளநீரை வெட்டிக் கொடுத்துவிடப் போகிறான்."

நண்பர்கள் இருவரும் வேலைக்காரன் முத்துவைத் தேடிக் கொண்டு, பின்புறத்திலிருந்த தோட்டத்துக்குப் போனார்கள்.

முத்து, மண்டி போட்டுக்கொண்டு, யானையாக நடித்துக் கொண்டிருந்தான். அவன் முதுகில் கிருஷ்ணனின் கடைசிக் குழந்தை, சவாரி செய்துகொண்டிருந்தான். அவனுக்குப் பெரியவன், குதிரையை ஓட்டுவதுபோல், முத்துவைக் கொம்பால் குத்திக்கொண்டிருந்தான். இவர்களைக் கண்டதும் முத்து, அசட்டுச்சிரிப்புடன் மெள்ள எழுந்தான்.

"ஏண்டா, முத்து! பக்கத்து வீட்டுலே டைபாயிடு ஜுரம் வந்த பையனுக்கு நீ தேங்காய் கொடுத்தாயா?" என்று கிருஷ்ணன் கேட்டார்.

"எப்போங்க?...ஆமாம், ஆமாம்."

"அட, பயித்தியக்காரா! அப்படிச் செய்யலாமா? அவனுக்கு மறுபடியும் ஜுரம் வந்துவிட்டதே!"

"பெரியம்மாவுக்கு மருந்து தெரியும். கொடுக்கச் சொல்றேனுங்க."

"நீ ஒண்ணும் செய்ய வேண்டாம். இனிமேல் பக்கத்து வீட்டுக் குழந்தைகள் வழிக்கே போகாதே! அவர்கள் தகப்பனார் ரொம்பக் கோபித்துக்கொள்கிறார். நான் சொல்வது புரிந்ததா?"

"புரிஞ்சிதுங்கோ."

பிறகு சிநேகிதர்கள் இருவரும் பேசிக்கொண்டே தோட்டத்தைச் சுற்றி வந்தனர். புண்ணியகோடிக்குத் தன் மகனின் படிப்பு விஷயமே மனத்தை உறுத்திக்கொண் டிருந்தது.

"இந்த வருஷம் சேஷாத்திரி பாஸ் பண்ணுதபோனுல், நீலாவும் அவன் கிளாஸுக்கு வந்துவிடுவாள். அது அவனுக்கு எவ்வளவு அவமானம்! அந்தப் புத்தி கெட்டவனுக்கு அந்தச் சுரணை இல்லையே!" என்று புண்ணியகோடி நொந்து கொண்டார்.

"ஊம். அவனுடையது ஒரு போக்கு. ஆனுல், அவனைப் புத்தி கெட்டவனென்று நீ நினைக்காதே!" என்ருர் கிருஷ்ணன்.

"எனக்குத் தெரியாதா? அப்படி இருந்தால் கவலைப்பட மாட்டேனு? முத்துவுக்குத் தம்பி என்று வைத்துவிடுவேன்! ஆனுல் படிப்பைத் தவிர, மற்றக் காரியங்களை எவ்வளவு புத்திசாலித்தனமாய்ச் செய்கிருன், தெரியுமா?"

"பொறு, பொறு, அவனுக்கு ஒரு நல்ல 'டியூட்ட'ரை வைத்துவிடுகிறேன்.

"என் மனத்தில் இருக்கிறதை உனக்கு எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறேன். இப்பொழுது மறுபடியும் சொல்கிறேன். எப்படியாவது அவனுக்கு ஒரு பி. ஏ. பட்டம் வாங்கிக் கொடுத்துவிடு."

"பி. ஏ. பட்டம் கிடைத்துவிட்டால் போதுமா? அதற்குத் தகுந்த யோக்கியதையும் கூடவே வேண்டாமா?"

"யோக்கியதையை யார் கண்டான்? அவன் உத்தியோகத்துக்குப் போகத் தேவையில்லை. வியாபாரத்தைக் கவனித்துக்கொண்டு, படித்தவர்களோடு சகஜமாகப் பழக அவன் தெரிந்துகொண்டால் போதும். என்னைப்போல், கல்வியற்றவன் என்ற தீராத துக்கத்தால் அவனும் வருந்தக் கூடாது. எனக்கு வேண்டியது அவ்வளவுதான்!"

இப்பொழுது முத்து, யாரோ வந்திருப்பதாகக் கிருஷ்ணனிடம் தகவல் தெரிவித்தான்.

வந்த இளைஞன் வணக்கம் செய்து, தான் ஒரு காலத்தில் அவருடைய மாணாக்கனாக இருந்ததாகவும், அவரிடம் தனியாகப் பேசவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். அவனைக் கிருஷ்ணன் வேறு அறைக்கு அழைத்துக்கொண்டு போனதும், அவன் வருத்தத்தோடு கோர்ட்டு 'ஸம்மன்ஸ்' ஒன்றை அவரிடம் கொடுத்தான்.

"சிறிது காலமாக எனக்கு இந்தப் பிழைப்பு ஏற்பட்டிருக்கிறது. இதைத் தங்களிடம் நான் எப்படிக் கொடுப்பதென்று தவித்தேன். அதனால், காலேஜுக்கு வராமல், வீட்டில் ரகசியமாகக் கொடுத்து விடலாம் என்று வந்தேன்" என்று கைகளைப் பிசைந்தான்.

"உன் கடமையை நீ செய்யவேண்டியதுதானே, அப்பா? இதற்காக நீ வீணாக வருந்தாதே" என்று கையெழுத்துப் போட்டு, அவனை அனுப்பிவிட்டு, ஸம்மன்ஸைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். அது மூவாயிரத்துச் சில்லறை ரூபாய்க்கு இருந்தது. வாதியின் பெயர் சண்டுலால் என்று இருந்தது. சண்டுலால் என்பவன் யார் என்றே அவருக்குப் புரியவில்லை. பிறகு யோசித்து யோசித்து, அவன் விலாசத்திலிருந்து, விஷயம் தெரிய வந்தது; அதை எடுத்துக்கொண்டு தம் சிநேகிதரிடம் ஓடினார்.

"புண்ணியா, ராமகிருஷ்ணன் என்ன வேலை செய்தான், பார்த்தயா? இரண்டாயிரம் ரூபாய் இல்லாவிட்டால், தன் மகளின் கல்யாணம் நின்று போய்விடும் என்று அழுது, எவனையோ அழைத்துக்கொண்டு வந்து, என்னை ஜாயிண்டாகக் கையெழுத்துப் போடச் சொன்னான். என் கையெழுத்து இல்லாவிட்டால் அந்தப் பாவி பணம் தரமாட்டேனென்று கண்டிப்பாக மறுத்துவிட்டான்..."

"நியாயந்தானே? ராமகிருஷ்ணனை நம்பி, எவன் பணம் கொடுப்பான்? நான், 'இந்த ஜாயிண்டு எழவு வேண்டாம்!' என்று உனக்கு எவ்வளவு தரம் சொல்லியிருக்கிறேன்!"

"ஐயோ, இது ஐந்து வருஷங்களுக்கு முந்தின சமாசாரம்,

அப்பா!'' என்று கிருஷ்ணன் அந்த ஸம்மன்ஸைத் தம் நண்ப னிடம் கொடுத்தார். புண்ணிய கோடியும் அதைக் கவனித்துப் பார்த்தார். "இவனா? பக்கத்துலேதான் இருக்கான். பலே ஆசாமி ஆச்சே! ஐந்து வருஷமாகப் பணம் வசூல் பண்ணா மலா இருப்பான்? இரண்டாயிரத்துக்கு, மூவாயிரம் வாங்கி யிருப்பான்; இன்னொரு மூவாயிரத்துக்குக் கேஸைப் போட்டு விட்டான்.''

"ஆமாம், ராமகிருஷ்ணன் பிழைத்திருக்கானே, அப்பா!...''

"நீ ஒரு பயித்தியக்காரன்! கறக்கிற மாட்டுக்கிட்டே போவானா? உதைக்கிற மாட்டுக்கிட்டே போவானா?''

"அப்போ நான் இதைக் கொடுத்துத்தான் தீரவேண்டும் என்று சொல்லு?'' என்றார் கிருஷ்ணன், பெருமூச்சு விட்டுக் கொண்டே.

"யாரைக் கேட்டுக்கொண்டு! ஆனால், ஒன்று செய்யலாம். வக்கீலை வைத்து, வழக்காடுவதாக வம்பு செய்தால், மார்வாடி கட்டாயம் ஆயிரம் ரூபாயைத் தள்ளிவிடுவான். அதில் சந்தே கம் இல்லை. அவன் வீடுகூடச் சமீபத்தில்தானே இருக்கிறது?''

"ஆமாம், அப்பா, ஆமாம்! மாட்டு ஆஸ்பத்திரிக்கு எதிரில் அவன் வீடு. இப்பொழுதுதான் எனக்கு நினைவு வருகிறது.''

"அப்பொழுது, ஒன்று செய்யலாமே; குழந்தைகளை யெல் லாம் பீச்சுக்கு அனுப்பிவிட்டு, முதலில் நான் போய் அவனோடு கலந்து பேசிவிட்டு வருகிறேன். பிறகு வேண்டுமானால் இரண்டு பேரும் போகலாம்.''

"சரி.''

புண்ணியகோடி, முத்துவை அழைத்தார். "மாட்டு ஆஸ் பத்திரி தெரியு மில்லே, முத்து?''

"தெரியுமுங்க.''

"அதற்கு எதிரில் சண்டுலால் என்று ஒரு மார்வாடி இருக் கிறான். அவன் வீட்டில் இருந்தால், என் பேரைச் சொல்லி, நான் ஏதோ பேச வருவதாகச் சொல். வீட்டில் இல்லாவிட்

டால், எப்பொழுது வருவான் என்று கேட்டுக்கொண்டு வா; என்ன, தெரிந்ததா?"

"தெரிஞ்சுதுங்க, தடிம்மனு இருப்பாருங்களே, அவரா?"

"ஆமாண்டா! தொந்தியும் தொப்பையுமாக இருப்பான். எப்போ பார்த்தாலும் பங்கி அடித்துக்கொண் டிருப்பான்."

"பேரை மறந்துட்டேனுங்களே?"

"நீ ஒரு மடையன்! இரு; ஒரு சீட்டுலே பெயரை எழுதித் தருகிறேன்."

சீட்டை வாங்கிக்கொண்டு முத்து விரைந்து சென்றான்.

## 3

மாட்டு ஆஸ்பத்திரிக்கு எதிரில் இருந்த வீட்டைக் கண்டு பிடித்துவிட்டான் முத்து. ஆனால், இரண்டு, மூன்று மார் வாடிகள் உட்கார்ந்திருக்கவே, இன்னார் என்று தெரியாமல் அவன், பருத்துத் தூக்கக் கண்களோடு இருந்தவனிடம் சீட் டைக் கொடுத்தான். அவன் தமிழ் தெரியாமல் மற்றொருவனி டம் அதைக் காட்டினான். அவன் ஏதோ அவர்கள் பாஷையில் சொல்லவே, தடித்தவன், "ஆமாம்,-நம்பதான். என்ன ஒணும்?" என்று கேட்டான்.

"நீங்கதானா? நீங்க பங்கி அடிப்பீங்க இல்லே?"

"என்னது?"

"பங்கி, பங்கி, நீங்க பங்கி அடிப்பீங்களாமே...!"

உட்கார்ந்திருந்த மார்வாடி தட்டுத் தடுமாறிக்கொண்டு எழுந்து, முத்துவின் காதைப்பற்றித் திருகினான்.

"அய்யய்யோ! நான் என்ன செய்தேன்! நீங்க பங்கி,... ஹா!-நீங்க பங்கி..."

முத்துவுக்கு வலி பொறுக்கமாட்டாமல் பொல்லாத கோபம் வந்துவிட்டது. மார்வாடியின் கையை வெடுக்கென்று கடித்தான். மார்வாடி கையை விடவே, முத்து ஓட்டம் பிடித் தான். திணறத் திணற வீட்டுக்கு ஓடிவந்து, மார்வாடி தன்னை

இம்சை செய்ததாகப் புகார் செய்தான். அவன் எக்கச்சக்க மாக நடந்துகொண்டு விட்டான் என்பதைப் புண்ணியகோடி அறிந்து, தாமே மார்வாடியினிடம் சென்றார். மார்வாடி நெருப்பை மிதித்த குரங்குபோல் குதித்தான். அவனைச் சமா தானம் செய்து, கோர்ட்டு வழக்கிலும் ஒருவிதமான ஏற்பாட் டுக்கு அவனைச் சம்மதிக்கும்படி செய்து, புண்ணியகோடி தம் நண்பனிடம் வந்தார்.

"உன் கடனையெல்லாம் நான் எப்படித்தான் தீர்க்கப் போகிறேனோ?" என்றார் கிருஷ்ணன்.

"ஆமாம், நமக்குள் கணக்கு என்ன இருக்கிறது?" என்றார் புண்ணியகோடி.

"அப்படியல்ல, புண்ணியா! இன்றைக்கு இல்லாவிட்டால், நாளைக்கு நான் கணக்குகளைப் பார்த்து, எல்லாவற்றிற்கும் ஒரே பத்திரமாக எழுதிக் கொடுத்துவிடுகிறேன்."

"அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. என்ன வேண்டு மானாலும் செய்!" என்றார் புண்ணியகோடி.

இப்பொழுது வேதவல்லியம்மாள் ஓடிவந்து, "முத்துவை அதட்டிக் கூப்பிடுங்கள். பக்கத்து வீட்டுக் கிணத்தண்டை பாம்பு வந்து, ஒரு வளையில் புகுந்துகொண்டதாம். இவன் அதைப் பிடித்துவிடுகிறேன் என்று, தொளையை இடித்து, உள்ளே கையை விட்டுக்கொண் டிருக்கிறான். பிடுங்கிச் செத் தால் என்ன செய்கிறது!" என்று அலறினாள்.

"இவனுடைய அக்கப்போரே உனக்குச் சரியாக இருக் கும்போல் இருக்கிறது!" என்றார் புண்ணியகோடி.

கிருஷ்ணன், தம் தோழனுடன் கொல்லைப்புறம் சென்றார். முதலில் அவனைக் கண்டித்ததும் அவரே. "எழுந்திரடா, மடையா! வளையிலே கையை விட்டால், பாம்பு கடித்து விடாதா?"

முத்து, 'திரு திரு' என்று விழித்துக்கொண்டு எழுந்திருந் தான். வீட்டுக்காரர் பக்கத்தில் நின்றுகொண் டிருப்பதைக் கண்டதும், அவர், முத்துவின்மீது குற்றம் சாற்றினது புண்ணிய

கோடிக்கு நினைவு வந்தது. "இதுதான் ஊரான் பிள்ளையை விட்டு ஆழம் பார்க்கிறதென்பது!" என்று அவர் அழுத்தமாகச் சொன்னார்.

இது பக்கத்து வீட்டுக்காரருக்குச் சுருக் என்று பட்டது. "அவனேதான் பிடிக்கிறேன் என்று வந்தான்" என்றார்.

"அவனுக்கு என்ன அய்யா தெரியும்? மூன்று வயதுக் குழந்தையும் ஒன்று; அவனும் ஒன்று. நல்லது பொல்லாததை நாமல்லவா யோசிக்கவேண்டும்?" என்று புண்ணியகோடி முகத்தில் அடித்தாற்போல் சொன்னார்.

"சரி, இப்போ பாம்பைப் பிடிக்கிற வழியைப் பார்" என்றார் கிருஷ்ணன்.

"முத்துவுக்குப் பதிலாக நீ வேண்டுமானால் வளையில் கையை விடு" என்று புண்ணியகோடி சிரித்தார்.

"உனக்குச் சமயம் சந்தர்ப்பம் தெரியறதில்லை, அப்பா" என்றார் கிருஷ்ணன், புன்முறுவலை அடக்கிக்கொண்டு.

அந்த வீட்டுக்கு மாடு கறக்க வந்த பால்காரன், "இது எலி வளையிங்க. இதுவரையிலும் வருது" என்று ஐந்தாறு அடிக்கு அப்புறம் இருந்த மற்றொரு துவாரத்தைக் காட்டினான். "இப்போ, இந்தப் பக்கம், உள்ளே வைக்கோலை ஆளமாய்த் தள்ளி, நெருப்பை வச்சால், அது செத்தாப்போல் அந்தப் பக்கம் வருது. என்னாங்க?" என்று மேலும் கூறினான்.

"ரைட், ரைட்!" என்று வீட்டுக்காரர் ஆமோதித்தார். பால்காரன் வைக்கோலைத் திணித்துத் தீயை வைக்கும் வேலையைத் தான் எடுத்துக்கொண்டான். பாம்பை அடிக்கும் வேலையை மற்றவர்களுக்குக் கொடுத்தான். இப்பொழுது, முத்துவும் ஒரு தடியைத் தேடிக்கொண்டிருந்தபொழுது, வேதவல்லியம்மாள் வேலிக்கு அப்புறம் இருந்தவாறு, "ஏ, மடசாம்பிராணி! நீ பாம்பைப் பிடித்தது போதும்; எட்டி நில்!" என்று இரைந்தாள்.

முத்துவுக்கு அழாத துக்கம். அவன், தலையைச் சொறிந்துகொண்டிருக்கும்போதே, திடீரென்று பாம்பு வந்ததும் போன

தும் தெரியாததாகப் பாய்ந்து, எதிரில் இருந்த அறையில் புகுந்து கொண்டது. ஒரே கூச்சல். "என்ன ஆளுங்கய்யா, நீங்க! கையிலே ஆம்புட்டதை விட்டுட்டீங்களே!" என்று பால்காரன் நொந்துகொண்டான்.

"நல்ல பாம்பு இல்லையே?" என்று வீட்டுக்கார அம்மாள் கேட்டாள்.

"இது நல்ல பாம்புக்கு மேலே விசம் அம்மா! இரிம்பிலியன். கடித்தால் உயிர் திரும்பாது" என்றான் ஒருவன், அவள் நடுங்கும்படி.

"இப்பொழுது என்ன செய்கிறது, தெரியவில்லையே!" என்று அந்த அம்மாள் கைகளைப் பிசைந்தாள்.

"அந்தச் சாமானையெல்லாம் எடுத்து, அதைத் தேடி அடிச்சிப்புடணும், அம்மா!" என்றான் பால்காரன்.

"அது நடக்கிற வேலையா? அம்மாடி! மூணு வாகனுக்குச் சாமான் ஆகுமே ஐயா! உரலு, அம்மி, மரம், மட்டை-விடிஞ்சாப்போலதான்!" என்றான் ஒருவன்.

"நீ என்னப்பா? இந்தக் காலத்துலே, ஒரு பங்களாவையே ஒரு மணி நேரத்திலே காலி பண்ணுகிறார்கள்! வாங்க, ஆளுக்கு ஒன்றாய் எடுத்து வையுங்கள்" என்று வீட்டுக்காரர், ஒரு பாதாளக் கரண்டியையும் கடப்பாரையையும் முதலில் கொண்டு வந்து வெளியே வைத்தார்.

அவ்வளவுதான். வேதவல்லியம்மாளுக்கு ஆவேசம் வந்து விட்டது. "அடே முத்து! பாதாளக் கரண்டியைக் காணோம் என்று அடித்துக்கொண்டாயே? எவ்வளவு பத்திரமாக ஒளித்து வைத்திருக்கிறாள், பார்!" என்றாள்.

"ஆமாம், ஆமாம், நம்புளுதுதான், அம்மா!" என்று முத்து அதை எடுக்கப்போனான்.

"தொட்டால் கையை ஒடித்துவிடுவேன்! உங்கள் வீட்டு தின்னு அதுலே எழுதி வச்சிருக்கா? ஒரு பாதாளக் கரண்டியைப்போல் இன்னொன்று இருக்காதா?" என்று அந்த வீட்டு அம்மாள் அதட்டினாள்.

"அய்யோ, அய்யோ! என்ன பித்தலாட்டம்! ஒரு கொக்கி வளைந்து போயிருக்குது பாருங்கள். அது நம்பளுடையதே தான், சந்தேகமில்லே!"—வேதவல்லியம்மாள் இப்படிச் சொல் லிக்கொண் டிருக்கும்போதே ஒருவன் ஒரு பிக்காசை (Pickaxe) வெளியே கொண்டுவந்து வைத்தான். "அம்மா, அம்மா, இது முத்தம்மா வீட்டுது!" என்று முத்து, மற்றொரு பக்கத்தில் இருந்த வீட்டைக் காட்டினன். "நான் வாங்கிக்கிட்டு வந்தே னுக்குமின்னு, ரெண்டு மூணு வாட்டி கேட்டாங்களே; உங் களுக்கு நினைவு இல்லே?" என்று அவன் வேதவல்லி யம்மாளைக் கேட்டான்.

**வே**தவல்லி யம்மாள் மூக்கின்மீது விரலை வைத்துக் கொண்டாள். சாமான்கள் வெளியே வர வர அவைகளில் சிலவற்றைத் தங்களுடையதென்றும், சிலவற்றை அடுத்த வீட்டுதென்றும் முத்து சொல்லிக்கொண்டே வந்தான். இப் பொழுது உட்புறம் இருந்து, "ஆம்பிட்டுக்கிச்சு, ஆம்பிட்டுக் கிச்சு!" என்று கூச்சல் கிளம்பியது. இரண்டொரு நிமிஷங் களுக் கெல்லாம் பாம்பையும் அடித்துக் கொண்டு வந்து வெளியே போட்டார்கள். வீட்டுக்கார அம்மாள் சாமான்களைத் துரிதமாக மறுபடியும் உள்ளே வைக்கச் சொன்னுள். அப் பொழுது வேதவல்லியம்மாள், "பொறு, பொறு. முதலில் எங்க வீட்டுச் சாமானை முத்து கிட்டே கொடு!" என்ருள்.

"யார் வீட்டுச் சாமான்! குழந்தை, குட்டி இல்லாதபோதே உனக்கு இவ்வளவு ஆசை இருக்கிறதே!" என்ருள் வீட்டுக் காரி.

"என்ன சொன்னுய்! பல்லை உடைத்துக் கையிலே கொடுப் பேன்! உன் அட்டகாச மெல்லாம் உன் வீட்டுலே. அதுக் கெல்லாம் பயந்தவள் நான் அல்ல."

"நீ பிடாரின்னு எனக்குத் தெரியும்."

"சீ! மூடு வாயை! திருட்டு நாயே! முத்து, முத்தம் மாளைக் கூப்பிடு. உன் திருட்டைச் சந்தியில் வைத்து, உன்னைப் போலீஸில் தாக்கல் செய்யாத போனல் ஏனென்று கேள்! ஊ...

ஹாம், அப்படியா சங்கதி!" என்று வேதவல்லியம்மாள் ஆவே சத்தோடு கத்தினுள்.

பக்கத்து வீட்டுக்காரி பயந்து, நடுங்கி, "எல்லாத்தையும் உன் தலையில் போட்டுக்கோ!" என்று அழுதுகொண்டே உள்ளே போய்விட்டாள். இப்பொழுது கிருஷ்ணன் குறுக்கிட்டு, "வீண் சச்சரவு வேண்டாம், அக்கா. உள்ளே போங்கள்; பார்க்கப் போனல், அற்பமான விஷயம்" என்ருர்.

"இப்படி அற்பம், அற்பமின்னு சொல்லித்தானே இவ்வளவு தூரத்துக்கு வந்தது?" என்று வேதவல்லியம்மாள் நொந்துகொண்டு திரும்பிச் சென்ருள்.

"ஏன் அப்பா, இவ்வளவு கலாட்டாவுக்கும் முத்துமேலே கோள் சொல்ல வந்த ஆண், பெண் ஜாதிக்கு முன்னுலே வாயைத் திறக்க மாட்டேங்கருரே!" என்ருர் புண்ணியகோடி, சிரித்துக்கொண்டு.

"அது அவர் தலையெழுத்து!" என்ருர் கிருஷ்ணன் புன்முறுவலோடு.

*　　　*　　　*

அந்த வருஷம் சேஷாத்திரி, பரீக்ஷையில் தவறினது எதிர்பாராத விஷயம் அல்ல. அண்ணனும் தங்கையும் சேர்ந்தாற்போல் ஸ்கூல் பைனல் பரீக்ஷைக்கு உட்காரும்படி நேர்ந்துவிட்டது. புண்ணியகோடி, இனி தேர்ச்சி விஷயத்தில் சந்தேகத்துக்குச் சிறிதேனும் இடம் கொடுக்கக் கூடாதென்று தீர்மானித்து, ஒருவருக்கு இருவராக உபாத்தியாயர்களை நியமித்து, சேஷாத்திரியைப் படிக்கச் செய்தார்.

ஆனுல், தாளுகப் பழுக்காத பழம் தடியால் அடித்தால் பழுத்துவிடுமா ! சேஷாத்திரி, உபாத்தியாயர்கள் இருந்த நேரம் கடனைக் கட்டி விட்டு, சமயம் வாய்த்த போதெல்லாம், விமானத் துறைக்கு ஓடுவதிலேயே இருந்தான்.

பாவம்! புண்ணியகோடிக்குக் கல்லூரிப் படிப்பில் இருந்த ஆத்திரத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட சேஷாத்திரிக்கு இல்லை! பரீட்சையும் வந்தது. முடிவு பிரசுரிக்கப்படும் இரண்டு மாதங்

கள் வரையில் புண்ணியகோடிக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. விடுமுறையைக் கழிக்க, குடும்பத்தோடு கிருஷ்ணன் தன் மாமனூர் ஊருக்குப் போனதால் புண்ணியகோடியின் துயரம் பின்னும் அதிகரித்தது. படாத பாடு பட்டு, எப்படியோ பத்துத் தினங்கள் முன்னதாகவே, தன் குழந்தைகள் இருவரும் பரீட்சையில் தேறியதைத் தெரிந்துகொண்டு விட்டார். நீலாவைப் பற்றிக் கவலை இல்லாவிடினும், சேஷாத்திரியின் சமாசாரத்தோடு அதுவும் தெரிய வந்தது. பிள்ளையாருக்குத் தேங்காய்களை உடைத்தார். கோயில்களில் அர்ச்சனைகளைச் செய்தார்; சீக்கிரமாகவே புறப்பட்டு வரும்படி கிருஷ்ணனுக்குக் கடிதம் எழுதினார்.

இவ்வாறு, புண்ணியகோடி, குதூகலத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஒரு நண்பர், ஒரு நாள் அவரிடம் வந்து, "மார்க்குகளைத் தெரிந்துகொண்டீர்களோ?" என்று கேட்டார்.

"அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. பாஸ் ஆனவர்களைச் சேர்த்துக்கொள்ள, கிருஷ்ணனுக்கு அவ்வளவு அதிகாரம் இல்லையா என்ன?"

"ஓ! அவர் சங்கதியை நான் மறந்தேவிட்டேன். அவர் இருக்கிறபோது, உங்களுக்கு என்ன ஸார், குறைவு! அவர் இஷ்டப்பட்டால், என்ன வேண்டுமானாலும் செய்யலாம்!" என்று நண்பர் உறுதியாகச் சொன்னார்.

ஆனால், கிருஷ்ணன் வந்த பாடில்லை. கடிதத்துக்குப் பதில், எல்லாக் கல்லூரிகளுக்கும் மனுப் போடும்படியும், தான் வரும் வரையில் காத்திருக்க வேண்டாமென்றும் அவர் எழுதினார். புண்ணியகோடியும் அவ்வாறே செய்தார்.

பிரின்ஸிபால் கிருஷ்ணன், திரும்பி வந்ததுதான் தாமதம். பெற்றோர்கள், பெரிய பெரிய இடங்களிலிருந்து சிபார்சுக் கடிதங்களை வாங்கிக்கொண்டு, கிருஷ்ணன் வீட்டை முற்றுகை போட்டனர். கிருஷ்ணனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. ஆனால், தமது கொள்கைக்கு விரோதமாக வாழ்க்கையை அவர்

நடத்தாதவர் ஆகையால், தாம் செய்ய வேண்டியது அவருக்கு நன்ருகத் தெரியும். இருந்தாலும், குளிப்பதற்கும் புசிப்பதற்கும் கூட இடங் கொடாமல், ஜனங்கள் வாட்டியது அவரால் பொறுக்க முடியவில்லை.

இந்த வேதனையில், புண்ணியகோடி படும் கஷ்டமும் அவர் நெஞ்சை உறுத்திக்கொண்டே இருந்தது. ஓர் இரவு சாவகாசமாக விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்காக அவர் தம் நண்பரைத் தமது வீட்டுக்கு வரச் சொன்ஞர்.

சாப்பாடு முடிந்ததும், "தெரியாத்தனமாய் இந்த வேலையை ஒப்புக்கொண்டேன், அப்பா!" என்று கிருஷ்ணன் முறையிட ஆரம்பித்தார்.

"அதைப்பத்தி இப்போ பேசறதுலே என்ன பயன்! சேஷாத்திரி சங்கதியைச் சொல்லு. எல்லாருக்கும் கடைசியிலே, எப்படியாவது அவனை மெள்ள உள்ளே தள்ளிவிட்டுடு. ஒரு பையனைச் சேர்த்ததாலே, யாரும் உன் தலையை வாங்கி விட மாட்டார்கள்!" என்ருர் புண்ணியகோடி.

"தலையை வாங்குவதற்கெல்லாம் நான் பயப்படவில்லை, அப்பா! ஆஞல், எந்த வேலையிலும் ஓர் ஒழுங்கு வேண்டாமா? ஒரு முறை இல்லையா? இரண்டு மந்திரிகள் நீளமாகச் சிபார்சுக் கடிதங்கள் எழுதுகிருர்கள்! மண்டையில் அடித்ததுபோல இருவருக்கும் பதில் எழுதிவிட்டேன்."

"உருப்பட்டதுபோல்தான்! சரி; ஊரார் சங்கதி எனக்கு வேண்டாம் சேஷாத்திரி. சமாசாரத்தைச் சொல்லு" என்று புண்ணியகோடி, பொறுமை இழந்து பேசிஞர்.

"நீலாவைச் சேர்த்துவிட்டேன். சேஷாத்திரியைத்தான் என்ன செய்வதென்று தெரியவில்லை. அநேகமாக எல்லாரும் அவனைவிட அதிகமாக மார்க்கு வாங்கினவர்கள் என்றே சொல்லவேண்டும்."

"இருந்தால் என்ன? நீ பிரின்ஸிபாலாய் இருந்து, ஒரு பையனை உன் இஷ்டம்போல் சேர்த்துக்கொள்வதற்கு உனக்கு அதிகாரம் இல்லையா!"

"அப்படிச் செய்தால், அவனைவிட மேலான பிள்ளைகளுக்குத் துரோகம் செய்ததுபோல் ஆகாதா? கொள்கை என்று ஒன்று இல்லையா? எனக்குச் சேஷாத்திரி வேறில்லை, மதன் வேறில்லை. இந்நிலையில் மதனும் இருந்தால், நிச்சயமாக அவனையும் சேர்த்துக்கொள்ள மாட்டேன்! என்னை நம்பு."

"நம்பு! உன்னை நம்பினதுக்குத்தான் நட்டாற்றில் விட்டுவிடப் பார்க்கிறாயே, பாவி! அடே கிருஷ்ணா! சற்று யோசித்துப் பார்! நீ யார்? நான் யார்? உனக்கு மூளை கலங்கிவிட்டதா என்ன? எனக்குப் படிப்பில்லாக் குறையைப்பற்றி நான் புழுங்கிச் சாவது உனக்குத் தெரியாதா? என் மகனுக்கும் அந்தக் குறை ஏற்படக் கூடாதென்று உன்னிடம் எவ்வளவு தடவை முறையிட்டிருக்கிறேன்! நீ மறந்துவிட்டாயா?"

"மறக்கவில்லை, மறக்கவில்லை! அதனால்தான் என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளிக்கிறேன்."

"தத்தளிப்பானேன்? சேஷாத்திரியைக் கல்லூரியில் சேர்த்துவிடு. உன்மேல் யாரும் பழி சொல்லமாட்டார்கள். நீ கொள்கை உள்ளவனென்றுதான் எல்லாருக்கும் தெரியுமே!"

"என்ன கொள்கை! தகுதி உள்ளவர்களைத் தள்ளிவிட்டு, தகுதியற்றவர்களைச் சேர்த்துக்கொள்வதா?"

"உளறாதே! நீ படித்த முட்டாள் என்பது எனக்கு வெகு காலமாகத் தெரியும். உலகத்திலே, எல்லாம் ஒழுங்கு தவறாமல்தான் நடக்கிறதா? ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை முடிக்கவேண்டும் என்பார்கள். அதுக்கு என்ன அர்த்தம்? விலக்கு இல்லாத சட்டம் உண்டா? இதோ பார், கிருஷ்ணா! வீணாய் நம்மிருவர் மனத்தையும் புண்படுத்திக் கொள்வதில் என்ன பயன்? உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு! சேஷாத்திரியைச் சேர்த்துவிடு!" என்று புண்ணிய கோடி கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

கிருஷ்ணன் கைகளைப் பிசைந்தார்; உடம்பை ஒடித்துக் கொண்டார்.

"எல்லோருக்கும் கொள்கைகளைப்பற்றிப் பிரசங்கம் செய்துவிட்டு, நானே தவறினால்..."

"அட! மறுபடியும் ஆரம்பித்துவிட்டாண்டா! உனக்குத் தானா கொள்கைகள்? வேறு யாருக்கும் இல்லையா? தருமபுத்திரருக்கு அப்புறம் நீதான் பிறந்துவிட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிறாய்! பைத்தியக்காரா! உன்னைவிட எனக்கு உலக அநுபவம் உண்டு. கொள்கைக்குச் சிறிதாவது தவறாமல் உலகத்தில் எவனாலும் வாழ முடியாது! அதை நன்றாகத் தெரிந்துகொள்."

"ஏன் முடியாது? அது பெரிய விஷயம். கொள்கைகள் சீரழிந்து போனதால்தான், மனித சமூகத்திற்கே கஷ்டம், துக்கம், பசி, பிணி எல்லாம் ஏற்பட்டுவிட்டன."

"ஆமாம், ஆமாம்; அந்தப் புத்தகப் பாடம் எனக்கும் தெரியும். ஆனால், நான் ஒரு கேள்வி கேட்கிறேன், கோபித்துக் கொள்ளாமல் இருக்கிறாயா?"

"நான் எப்பொழுதாவது கோபித்துக்கொண்டிருக்கிறேனா!"

"சரி, நான் கறுப்பு மார்க்கெட்டிலும் அகடவிகடமாயும் பணம் சம்பாதித்துவிட்டேன் என்பது உன் அபிப்பிராயம் இல்லையா?"

"சே! சே!–"

"சேசேயாவது, பூபூவாவது! நீ பகிரங்கமாகச் சொல்லக் கூச்சப்படலாம். ஆனால் நானேதான் ஒப்புக்கொள்கிறேனே? இந்தக் காலத்தில் சுளுவாய்ப் பணம் சம்பாதிக்க வேண்டுமானால், கறுப்பு மார்க்கெட்டில் ஈடுபடாமல் இருக்கவே முடியாது! இது என் நம்பிக்கை. என்னைப்போல் ஆயிரம் பேர் அப்படிச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். உனக்குத் தெரியாதா என்ன?"

"ஏன் தெரியாது?"

"இப்பொழுது, ஒழுங்கில்லாத வழிகளில் சேகரித்த பணத்தை, ஒழுங்குள்ளவன் ஒருவன் வாங்கினால், அவனைக்

கொள்கையுள்ளவன் என்று சொல்வதா? இல்லாத
சொல்வதா?''

பிரின்ஸிபால் கிருஷ்ணனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "சந்தேகமில்லாமல் அவன் கொள்கை தவறினவன்தான்!" என்றார்.

"கிருஷ்ணு! நான் வாதத்துக்காகப் பேசுகிறேனே தவிர, உன்மேல் குற்றம் சாட்டவில்லை. அது உன் மனத்துக்கே தெரியும். வாழ்க்கை, பாட புத்தகம் அல்ல. தவறுகள் இருக்காமல் முடியாது. உன் சிறிது குறையோடு இன்னும் சிறிது சேரட்டும். சேஷாத்திரியைச் சேர்த்துவிடு."

"ஒரு குற்றத்தை இரண்டாக்க வேண்டும், இரண்டை நான்காக்க வேண்டும்! ஹூம்! புண்ணியா, உண்மையில் நீ நல்ல அறிவாளி; என் தவறுதலை நானே அறியாமல் போய்விட்டேன். ஆனால்......ஆனால்...உன்னிடம் வாங்கின பணத்தையெல்லாம் கடனாகத்தான் பாவித்திருக்கிறேன். அதில் தம்பிடி கூட விடாமல் கணக்கு எழுதி வைத்திருக்கிறேன்."

"அட கடவுளே! நீ எனக்குப் பாக்கி இருக்கிறாய் என்ற எண்ணமே எனக்கு இல்லையே! கடவுள்மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன்! நம்பளுக்குள் பணத்தை ஒரு பொருளாகவே நான் நினைக்கவில்லை. வீணாக மூளையைக் குழப்பிக்கொள்ளாதே, கிருஷ்ணு! வாக்குவாதம் வேண்டாம்: சேஷாத்திரியைச் சேர்த்துவிடு."

"அது முடியவே முடியாது!"

"என்ன! முடியாதா! நிஜமாகவா!"

"நான் என்ன செய்வேன், புண்ணியா! என் கஷ்டம் கடவுளுக்குத்தான் தெரியும்!" என்று கிருஷ்ணன் எழுந்திருந்தார்.

அவர் தோரணையில் முடிவை உணர்ந்த புண்ணியகோடிக்குக் கோபாவேசம் வந்துவிட்டது.

"அட, பாதகா! நீ இவ்வளவு துரோகியாய் இருப்பாய் என்று நான் நினைக்கவே இல்லை! உன் முகத்தைப் பார்த்தால் கூடப் பாவம் சுற்றிக்கொள்ளும்!...துரோகி! துரோகி!" என்று

...டு, விரைந்து சென்று, காரில் ஏறிக்கொண்டு, ...ட்டார்.

வீட்டுக்கு வந்ததும், அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் கரை புரண்டு ஓடிற்று. ஒரே பதைபதைப்பு. துக்கத்தால் பேச்சுத் தடுமாடுகிறது. 'நன்றி கெட்ட கழுதை!—செய்ததை எல்லாம் மறந்துவிட்டானே! கொலைபாதகன்! கஷ்டப்படுகிறானும், கஷ்டம்! கஷ்டம் எப்படி இருக்கும் என்று காட்டுகிறேன் கழுதைக்கு! கடன்காரப் பயல்! ஊரில் இருக்கும் கடன்காரன்களின் பிள்ளைகளெல்லாம், கல்லூரியில் படித்துப் பட்டம் பெற வேண்டும். என் மகன் ஒருவனுக்குத்தானா இடமில்லை! என்ன அநியாயம்!' "ஏ சாரதா! இனிமேல் அந்த வீட்டுப் பக்கம் யாரும் காலை வைக்கக் கூடாது!"

அவர் மனைவி சாரதா பணிவுடன் தலையை அசைக்கிறாள்.

"அவன் எங்கே?" என்று அதட்டுகிறார்.

"அண்ணாவுக்கு ஜுரம், நாயினா!" என்று நீலா தாய்க்குப் பதிலாகப் பதிலளிக்கிறாள்.

"அவனுக்குப் பரீக்ஷை என்றால் ஜுரம் வந்துவிடும்: படிப்பு என்றால் தலைவலி வந்துவிடும்! அவன் ஒரு கடன்காரன்! சாரதா! கிருஷ்ணனும் இப்படிச் செய்வான் என்று என்னால் நம்பவே முடியவில்லையே:"

"நம்முடைய வேலை!"

"நீ ஒருத்தி! அவனுக்கு அவ்வளவு திமிர்; கல்வியின் கர்வம்! ஆகட்டும், ஆகட்டும்! அந்தப் பயலை இப்படி என் விரலில் வைத்து நசுக்காவிட்டால் ஏன் என்று கேள்! அற்பப் பயல்! அவன் மகனுக்கு என் பெண்ணைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று வேறு இருந்தேனே! இதோ பார் நீலா, அந்தக் கழுதையோடு இனிமேல் ஒரு பேச்சு வார்த்தையும் வைத்துக் கொள்ளாதே! லட்சத்தில் பிறந்து வளர்ந்தவனை உனக்குத் தேர்ந்தெடுக்கிறேன்! ஆமாம். அந்தப் பதரை மறந்துவிடு!" என்று கையை உதறுகிறார்.

இப்பொழுது யாரோ வாசற் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. வேலையாள் கதவைத் திறந்தான். முத்து, வணக்கத்துடன் புண்ணியகோடியினிடம் ஒரு தோல் பையைக் கொடுத்து, ''மறந்து வந்திட்டிங்களாம். கொடுத்திட்டு வரச் சொன்னாருங்க'' என்றான்.

''ஊஹூம், அந்தக் கடன்காரப் பயல் கொடுத்து வைக்கவில்லை. இதுலே அவன் எழுதிக் கொடுத்த சீட்டும் நாட்டும் இருக்குது சாரதா. இதுங்களைக் கிழிச்சு, அவன் கையிலே கொடுத்திடணுமின்னு எடுத்துக்கொண்டு போனேன். இனிமேலா! என்னடா உங்க அய்யா பெரிய வேலை செஞ்சிட்டேனுன்னு மாரைத் தட்டிக்கொண்டு இருக்காரா?''

''அய்யோ, என்னுங்க அப்படிச் சொல்றீங்க? எல்லாரும் வருத்தமாய் இருக்காங்க. சாவு வீடாட்டமல்ல இருக்குது!''

''இப்போ என்னடா ஆயிட்டுது? இன்னும் போகப் போக இருக்குது! சரி, நீ போய்ச் சொல்லு; இனிமேல் எங்க வீட்டுக் காக்காகூட அவங்க வீட்டுப் பக்கம் வராது!''

''ஆவட்டுங்க.''

''பொறுடா, அவங்களும் எங்க வீட்டுக்கு வரத் தேவையில்லை. வந்தால் செருப்படிதான்!''

''அய்யய்யோ! என்னாத்துக்குங்க, இந்தப் பேச்செல்லாம்!'' என்று சாரதாம்பாள் குறுக்கிட்டாள்.

''நீ சும்மா இரு! உனக்கு ஒண்ணும் தெரியாது. அப்புறம், என் மகளை அவன் பிள்ளைக்குக் கட்டிக்கிற ஆசையை அடியோடு மறந்திடச் சொல்லு, போனால் போகுது, சின்ன வயசுலேருந்து பழகிக்கொண்டோமே இன்னிட்டு ஒத்துக்கொண்டேன். இனிமேலா! இதுவும் ஒரு நல்ல காலந்தான்! அடே! உங்க அய்யா படிப்பும் அவன் மகன் படிப்பும் என் ஒருநாள் வியாபாரத்துக்கு ஈடாகாது!''

''ஏன் வீணாய் வார்த்தையைக் கொட்டுறீங்க, இப்படி! முத்து, நீ போய்வா'' என்று சாரதாம்பாள் அவனை வெளியேற்ற முயன்றாள்.

“நீ ஒரு இழவு! அன்றுடம் பொறுக்குகிற பயல்! அவனுக்கு எப்படித் தெரிகிறது. அடே முத்து, நான் சொன்னதை யெல்லாம் அவன் கிட்ட மறக்காதே சொல்லிடு.”

“மறக்க மாட்டேனுங்க; அப்படியே சொல்வேனுங்க” என்று முத்து, வெளியே போய்க்கொண் டிருந்தான். இப்பொழுது தோல் பையைத் திறந்து பார்த்த புண்ணியகோடி, எதையோ காணுமல் திடுக்கிட்டு, மறுபடிபடியும் முத்துவை அழைத்தார்.

“இதுலே வைத்த ஒரு ‘பெர்மிட்’டைக் காணுமேடா! யார் எடுத்தது? உண்மையைச் சொல், இல்லாவிட்டால் கொன்றுவிடுவேன்!”

“அய்யோ, நான் ஏன் அதை எடுக்கிறேனுங்க?”

“அப்போ உங்க வீட்டுலே எடுத்து வச்சிட்டாங்களா? அது இல்லாத போனல், அறுபதுனுயிரம் ரூபாய்ச் சரக்கை இறக்க முடியாதே! இது வேணுமின்னு செஞ்ச வேலேதான். இல்லாதபோனல், இதுலே வைத்தது எங்கே போயிடும்! அட, சோதாப் பயலே! வேரை அறுத்து, வெந்நீரை விட்டுவிடுவேன்!”

“அவசரப்படாதீங்க...” என்று சாரதாம்பாள், கையிலிருந்த காகிதங்களே யெல்லாம் கீழே கொட்டி, நீலாவைத் தேடச் சொன்னுள். ஆனுல், ஒன்றும் அகப்படவில்லே. இப்பொழுது நீலாவுக்கு ஏதோ சந்தேகம் வரவே, “ஏன் நாயின, புறப்படுகிறதுக்கு முந்தி இதிலே யிருந்து ஒரு காகிதத்தை எடுத்து, அலமாரியிலே நீங்கள் வைக்கிறதை நான் பார்த்தேனே; அதுவா இருக்குமோ?” என்று கேட்டாள்.

“அலமாரியைத் திறந்து பார்!”

நீலா, அலமாரியைத் திறந்தாள். “இதோ இருக்கிறதே!” என்று ‘பர்மிட்’டைக் கொண்டு வந்தாள்.

புண்ணியகோடியின் முகம் அசடு தட்டிற்று. முத்து, சொல்லாமல் கொள்ளாமல் அவ்விடத்தை விட்டு, ஓட்டம் பிடித்தான்.

## 4

மூத்து, வீட்டுக்குத் திரும்பி வந்து, தூங்காமல் விழித்துக் கொண்டிருந்த குழந்தைகள்கூட அறியும்படி, புண்ணியகோடி சொன்னதை எல்லாம் பாடமாக ஒப்பித்தான். கிருஷ்ணன் வாயைத் திறக்கவில்லை. ஆனால், எல்லோருடைய கோபத்தை யும் சேர்த்து வெளியிடுவதுபோல, வேதவல்லியம்மாள் குதித் தாள்.

"செருப்பாலா அடிப்பானும்! அவன் வாயினாலே சொன் னான்; நான் கையினாலே செஞ்சு காட்டுகிறேன்! கழுதை! புளி மிளகாய் விற்கும் அற்பன்! இவன் பெண்ணைக் கட்டிக்க, யார் தயாராய் இருக்காங்க?..."

"அவன்தான் பயித்தியக்காரன்; ஏதோ உளறிவிட்டானா னால், நீங்கள்கூடவா இப்படிக் கூச்சல் போடுகிறது!" என்று கிருஷ்ணன் வேதவல்லியம்மாளை அடக்கினார்.

"ஆமாம், பயித்தியக்காரன்! நூறு பேருக்குப் பயித்தியம் பிடிக்கும்படி செய்வான்!" என்றாள் வேதவல்லியம்மாள், விட்டுக் கொடுக்காமல்.

இப்பொழுது, அவர் மனைவி அமிருதவல்லியும் முந்திக் கொண்டாள். "பரிஞ்சுகொண்டு வரீங்களே; நானுந்தான் கேட்கிறேன்; கோபம் வந்தால், ஒருத்தன் நாக்குலே நரம்பில் லாமல் பேசிடறதா!"

"சேஷாத்திரியைச் சேர்க்காததுனாலே, அவன் மனம் எவ் வளவு கஷ்டப்படுதோ, அது எனக்குத்தான் தெரியும்."

"அவ்வளவு தெரிஞ்சவங்க, அவனையும் காலேஜ்லே சேத் துக்கிறதுக்கு என்ன?" என்று அமிருதவல்லி எரிந்து விழுந் தாள்.

"அது வேறே சங்கதி."

"ஆமாம், அது வேறே, இது வேறே! இப்படிச் செஞ்சு செஞ்சுதானே வீட்டைக் குட்டிச்சுவர் ஆக்கினீங்க! உங்களைப்

போலே உங்கள் சிநேகிதனையும் நினைத்து விடாதீங்க! பகையின்னால் அந்த ஆளுக்குத் தீராப் பகைதான்!''

''இருக்கட்டுமே! அவன் பகைக்காகவும் நான் பயப்படமாட்டேன்; அன்புக்காகவும் கொள்கையை விடமாட்டேன்!''

''போதுமே, உங்கள் கொள்கை! கேட்டுக் கேட்டு எனக்குத் தலைவலி எடுத்துவிட்டது!''

தன்னை அறியாமல் கிருஷ்ணனுக்குச் சிரிப்பு வந்தது.

''உங்களுக்குச் சிரிப்பு வேறு வருதே! இரண்டு குழந்தைகளையும் வாழவிடாமல் செய்துவிட்டு...'' என்று அமிருதவல்லி, கண்களில் நீர் ததும்ப, சரேலென்று அவ்விடத்தை விட்டுப் போய்விட்டாள்.

இரண்டு மூன்று தினங்களுக்குப் பிறகு, ஒரு பிற்பகலில் இரு சகோதரிகளும் ஏகாந்தமாக, வீட்டு விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, ''மறந்திட்டேனே, அமிருதம்! புண்ணியகோடி, நீலாவின் கல்யாணத்தை இரண்டு மாதத்துக்குள்ளாகவே முடிச்சிடுவான்போல் இருக்குது'' என்றாள் வேதவல்லியம்மாள்.

''உனக்கு யார் சொன்னாங்க?''

''அகிலாண்டம், சிவகாமி, சிங்காரம்மாள் எல்லாரும் தான் பேசிக்கிறாங்க. நாலஞ்சு பிள்ளைகளைப் பாத்திருக்காறாம். ஒருத்தன் ஜில்லா ஜட்ஜு மகனும்; ஒருத்தன் பெரிய டாக்டர் மகனும்; இன்னொருத்தன் அப்பனுக்கு ஒரு ஐம்பது ஜவுளிக் கடைக்குக் குறையாமே இருக்குதாம். அவன் ஒரே பிள்ளை தானும்!''

''எவ்வளவுதான் இருக்கட்டும், நீலா ஒத்துக்குமின்னு நீ நினைக்கிறயா?''

''அய்யோ, பாவம்! அந்தக் குழந்தை என்ன செய்யும்! அதன் பேச்சை அவன் கேப்பானா? அவன் எவ்வளவு பிடிவாதக்காரன்! உங்க வீட்டுக்காரர்போல நினைச்சிட்டயா?''

''அந்தப் பேச்சை விட்டுத் தள்ளு! நீ தெரிந்துகொண்டது அவ்வளவுதான். பணமின்னால், அந்த ஆளாவது வாயைத்

திறந்துடுவார். எங்களவருக்கு ஒண்ணு மனசுலே உறுதியாய் விழுந்திட்டுதோ, அப்புறம் அதைக் கடவுளாலும் மாத்த முடியாது! அவர் சொன்ன பேச்சைக் கேட்டால், ஏன் இவ்வளவு வம்பு?''

"சரி, போனது போச்சு. இப்போ நாம், நீலா கல்யாணத்துக்கு முந்தி, மதனுக்கு ஒரு நல்ல பெண்ணுப் பாத்துக் கட்டிவிடணும். அவனைச் சட்டை செய்ய வில்லேன்னு அந்தப் புளி-மிளகாய்க்காரன் தெரிஞ்சுக்கணும்.''

"சரிதான். ஆனால் அவனுக்குத் தகுந்த பெண் எங்கே இருக்குது?''

"அப்பாசாமி மகளைப் பார்க்கலாமா?''

அமிருதவல்லிக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "நேத்து வரையிலும், மதன், அவளை, 'ஒண்ணரைக் கண்ணு டோரியா'ன்னு கேலி செய்துகொண்டிருந்தானே! அவளையா கட்டிப்பான்!'' என்று கேட்டாள்.

"ராமசாமி பெண்ணுக்கு என்ன? கிளியாட்டம் இருக்குதே!''

"அதைப் பண்ணிக்கொண்டால் அவன் அந்தக் குடும்பத்தையேதான் கட்டிக்கணும். அவங்களுக்கு என்ன இருக்குது! வேணுமின்னால் மாப்பிள்ளை, வீட்டோடு இருந்து சம்பாதிச்சுப் போடலாம்!''

இப்பொழுது, "அம்மா, அம்மா!'' என்று மதன், தேடிக்கொண்டு வரவே, சகோதரிகள் பேச்சை நிறுத்தினார்கள்.

"ஓ! நீயும் இங்கே இருக்கயா! முத்து ஒரு மடையன்! நீ சுந்தரத்து வீட்டுக்குப் போயிருக்கேன்னிட்டுச் சொன்னான், பெரியம்மா! அங்கே போய்த் தேடிட்டு வரேன்'' என்றான்.

"போயிட்டு வந்துட்டேன். என்ன சங்கதி?''

"ஐம்பது ரூபாய் வேணும், பெரியம்மா!''

"என்னடா அப்பா, அவ்வளவு செலவு?'' என்று அமிருதவல்லி கேட்டாள்.

“நான் கடலூர் போகணும், அம்மா. என் சிநேகிதன் பிரகாசத்துக்குக் கல்யாணம்.”

“ஓ, அது மறந்தே போயிட்டுதே!” என்று தன்னை அறியாமல் வேதவல்லி குறுக்கிட்டுச் சொன்னாள்.

“எது, பெரியம்மா?”

“எனக்கு வீட்டுக் கவலை ஆயிரத்தெட்டு; சரி, உன் சங்கதியைச் சொல்லு.”

“சங்கதி என்ன? நான் கட்டாயம் போகணும். அவனுக்கு நல்லதா ஒண்ணு ‘பிரஸண்டு’ பண்ணணும். அதனாலே எப்படியாவது நீ எனக்கு இப்போ ஐம்பது ரூபாய் கொடுத்தாகணும்!”

“சரி, ஏதோ செலவை நிறுத்திக்கொண்டு தருகிறேன். பூராச் சங்கதியையும் சொல்ல மாட்டேங்கிறயே. பெண் யாரு? எந்த ஊரு?”

“பெண் அதே ஊர்தான், பெரியம்மா. அவளையே செய்துக்கணுமின்னு அவன் ரொம்ப நாளாப் ‘பிளான்’ போட்டுக்கொண் டிருந்தான். நான்கூடப் பார்த்திருக்கேன்.”

“நல்ல அழகாய் இருக்குமா?”

“இல்லாத போனல் செய்துப்பானா! அவனுக்குப் பிடித்திருக்கிறது” என்று சிரித்தான்.

“ஏண்டா, அவன் கல்யாணத்தோடு, அவன் தங்கை குஸுமாவுதையும் சேர்த்துச் செய்யருப்போலே அவள் அம்மா சொல்லிக்கொண் டிருந்தாளே?” என்று அமிருதவல்லி குறுக்கிட்டுக் கேட்டாள்.

“அதெல்லாம் எனக்கு என்ன அம்மா தெரியும்? நீ பணத்தைக் கொடு, பெரியம்மா. நான் பத்துக் கடை தேடணும். ஐம்பது ரூபாய்க்கு என்ன கிடைக்கப் போகிறது? இன்னும் ஒரு பத்து ரூபாய் சேர்த்துக்கொடேன், பெரியம்மா!”

“சரிதான், இதையே நான் எப்படிச் சமாளிக்கிறதின்னு யோசித்துக்கொண் டிருக்கேன்.”

“ஐம்பதைச் சமாளிக்கிறவள், அறுபதை முடியாதா? கொடேன், அக்கா!” என்றாள் அமிருதவல்லி.

"ஏதுடா! அம்மாகூட உனக்குச் சிபார்சு செய்கிறாள்! உனக்கு ஏதோ தசை அடிக்கப் போகுது!" என்று சிரித்தவாறு கூறி, வேதவல்லி எழுந்து உள்ளே போய், அறுபது ரூபாயைக் கொண்டு வந்து, மதனுக்குக் கொடுத்தாள்.

மதன் போனதும், "இதுவும் நல்லதுக்குத்தான். குஸுமா சங்கதியை இரண்டு பேரும் மறந்திட்டோமே!" என்றாள் வேதவல்லி.

"நீலா நீலா என்றே கலவரித்துக்கொண் டிருந்தோம். பார்க்கப் போனால் எல்லா விதத்திலும் குஸுமாவே மேலுன்னு எனக்குத் தோணறது."

"சந்தேகம் இல்லாமல்! நீலாவைவிட எவ்வளவு அழகு! நேத்து இன்னிக்கிப் பணம் படைச்சவங்க இல்லே. பெரிய குடும்பம். ஏதோ சிறு வயசுலே இருந்து பழகிட்டாங்களேன்னு பார்த்ததே தவிர, வேறே என்ன? நீலாவுக்குக் கல்யாணம் ஆகறத்துக்கு முந்தி, இதை முடிச்சிடணும், அமிருதம்."

"அப்படியே செய்யலாம், அக்கா! அடுத்த மாதம் பிரகாசம் இங்கே வரவேண்டிய வேலே இருக்குதின்னு பாப்பா சொல்லிக்கொண் டிருந்தான். அப்போ, எல்லாம் கலந்து பேசி, ஏற்பாடு செய்திடலாம். அதுக்குள்ளே, பாப்பாவும் குஸுமாவைப் பார்த்து, என்ன நினைக்கிறான்னு தெரிஞ்சுக்கலாமே!"

"அது சரி. இருந்தாலும், இந்த விஷயங்களிலே நாம்தான் பொறுப்பு எடுத்துக்கணும், அமிருதம். சின்னவர்களுக்கு நல்லது பொல்லாது தெரியுமா? பின்னிட்டு நடக்கப் போகிறதை எல்லாம் அவர்களாலே யோசிக்க முடியாது, பார்! ஆனால், நான் ஒண்ணு சொல்லுவேன்: நம்பளவர்களிலே, அவ்வளவு மட்டு மரியாதை தெரிந்த குடும்பம் எனக்கு ஒண்ணுகூடத் தென்படவில்லே."

"வாஸ்தவந்தான். இப்போ கை கொஞ்சம் சளேத்துப் போயிட்டாலும், அவர்களுக்கு வீடு, வாசல், நிலபுலம், எல்லாம்

இருக்குது, அக்கா. பிரகாசத்தின் தாயார் சீதம்மாள் எல்லாம் எனக்குச் சொல்லி யிருக்கிருள்.''

"எனக்கு மட்டும் தெரியாதா என்ன? அவர்கள் சாப்பிட்டு, இன்னும் நாலு பேருக்குப் போடலாமே! பாப்பா கிட்டே மாத்திரம், குஸுமாவைக் கண்டு பேசிட்டு வரச் சொல்லு. ஆனல், அவன் சந்தேகப்படக் கூடாது.''

அமிருதவல்லி சிரித்தாள்.

"அவளோடு அவனுக்கு சகஜமாய்ப் பழகி வழக்கம், அக்கா. அந்தப் பெண்ணுக்குப் பர்பி என்றல் ரொம்ப இஷ்டம். அதுவும் நான் செய்தால்தான் நன்ருயிருக்குமென்று அவளுக்கு ஓர் எண்ணம். கொஞ்சம் செய்து, அவளண்டையே கொடுக்கச் சொன்னல் போகிறது'' என்ருள்.

"அதுதான் சரி. அவள் 'ஸ்கூல் பைனல்' பாஸ் பண்ணி விட்டாள் இல்லே?''

"பாஸ் பண்ணி, இரண்டு வருஷம் ஆயிட்டுது, அக்கா. மேலே படிக்கில்லேன்னு அவளுக்கு ரொம்பக் குறை. ஆனல், சீதம்மாள் பண்டைக் காலத்து மனுஷி. மேல் படிப்பு வேண்டாமென்று நிறுத்திவிட்டாள்.''

"ஊஹூம், சரி. பாப்பா ராத்திரியே கிளம்பினலும் கிளம்பி விடுவான். பர்பியைச் செய்யலாம், வா'' என்று தங்கையுடன் வேதவல்லியம்மாள் உள்ளே சென்ருள்.

**க**ல்யாணத்துக்கு ஒரு நாள் முன்னதாகவே கடலூருக்கு மதன் வந்ததில், அவன் நண்பன் பிரகாசத்துக்குப் பரம சந்தோஷம். அவன் குஸுமாவினிடத்தில் தின்பண்டத்தைக் கொடுத்த பொழுது, குஸுமாவுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. "அத்தைக்கு என்மேல் எவ்வளவு பிரியம்! என் பயித்தியத்தை இன்னும் மறக்க வில்லையே!'' என்று மதன் கையிலிருந்து பொட்டலத்தை வாங்கி, ஒரு பர்பித் துண்டை வாயில் போட்டுக் கொண்டு நகைத்தாள்.

அவள் வளர்த்தி அவனைப் பிரமிக்கச் செய்தது.

"என்ன, அப்படிப் பார்க்கிறே?'' என்ருள் குஸுமா.

"ஒண்ணுமில்லே. நாலு மாதத்துக்குள் எனக்குச் சரியாக உயர்ந்திட்டயே!"

நாணத்தால் குஸுமா ஒரு கணம் தலையைக் குனிந்தாள். பிறகு, "ஆமாம், நீலாவைப்போல எல்லாரும் குள்ளமாய் இருக்கணுமாக்கும்! நீலா காலேஜில் படிக்கிறளோ, இல்லையோ?" என்றள்.

"ஊம்" என்று மதன் தலையை அசைத்தான்.

"நான் படித்தால்தான் இந்த அம்மாவுக்கு உலகமே முழுகிப் போகும்!..." என்று, தன் தாயார் முன்பாகக் கைகளை உதறிவிட்டு, குஸுமா போய்விட்டாள்.

நீலாவின் பேச்சு, மதனின் மனத்தில் பற்பல வேதனைகளை உண்டாக்கின. ஆனால், அவைகளை அவன் வெளியே காண்பித்துக்கொள்ளவில்லை.

பிரகாசத்தின் கல்யாணம் வெகு சிறப்பாக நடந்தது. ஒவ்வொருவராக விருந்தாளிகள் அனைவரும் திரும்பிச் சென்றனர். ஆனல், மதனை இன்னும் சிறிது காலம் இருந்து போக வேண்டுமென்று வற்புறுத்தி அவன் நிறுத்தி விட்டான்.

இப்பொழுதுதான், வேணுகோபால் என்னும் ஓர் இளைஞன் அடிக்கடி வீட்டுக்கு வந்து போவதை மதன் கவனித்தான்.

வேணுகோபாலுக்கு இருபது பிராயம் இருக்கும். அவன் தோரணையிலிருந்து, ஒரு நாளைக்கு மூன்று தடவைகளாவது அவன் உடைகளை மாற்றுவதாகத் தெரிந்தது. அவன் இருக்கும் இடத்தில், வாசனைத் திரவியக் கடையைச் சூறையிட்டாற்போல் மணம் வீசியது. கல்லூரியில் இரண்டொரு வருஷம் நுழைந்து வந்ததன் பலனை, எல்லாம் தெரிந்தவன்போல் பாசாங்கு செய்ய அவனல் முடிந்தது.

எது எப்படி இருந்தால் என்ன? அவன் தகப்பனருக்கு ஏராளமான பொருள் இருந்தது. மாகாணத்திலுள்ள முக்கிய பட்டணங்களில், அவருடைய ஜவுளிக் கடை இல்லாதது ஒன்றுகூடக் கிடையாது. அவனும் தகப்பனருக்கு ஒரே பிள்ளை. வேறு என்ன வேண்டும்! குஸுமாவின் தாயார் இவ்வளவு

பணக்கார மாப்பிள்ளை வரவேண்டுமே என்று தெய்வப் பிரார்த்தனையோடு, வேணுகோபால் வரும்போதெல்லாம் அவனை ஆசார உபசாரத்தோடு வரவேற்ருள்.

வெகு காலத்துப் பழக்கத்தால் குஸுமா, தன்னுடன் சகஜமாக நடந்துகொண்ட போதிலும், வேணுகோபாலிடத்தில் அவளுக்கு ஓர் அலாதியான பற்றுதல் உண்டாகி யிருப்பதை மதன் ஊகித்தான். வேணுவோ, பக்குவக் குறைவாலும், கூடப் பிறந்த அசட்டுத் தனத்தாலும், தான் குஸுமாவை மோகிப்பதைக் கரடு முரடாகக் காட்டிக்கொண்டான். ஆனல், புத்திசாலியான குஸுமா, அவனிடம் எதைக் கண்டு மோகித்துவிட்டாள் என்பதுதான் மதனுக்குப் புரியவில்லை. இந்த அபிப்பிராயம் பிரகாசத்துக்கும் இருந்ததென்பது அவனுக்குப் பின்பு தெரிய வந்தது.

"யாராரோ வந்து பார்த்தார்கள். அவர்களை எல்லாம் வேண்டாம் வேண்டாம் என்று தள்ளிவிட்டாள். ஆனல், வேணுவைத் தெய்வமாகக் கொண்டாடுகிருள் !" என்று இருவரும் தனிமையாகப் பேசிக்கொண் டிருக்கும்பொழுது பிரகாசம் சொன்ஞன்.

"செல்வம் என்ருல் எல்லாருக்கும் ஆசைதானே ? அதிலும் பெண்களுக்கு .." என்று மதன், அநுபவம் முதிர்ந்தவன் போல் முடிப்பதற்குள் பிரகாசம் குறுக்கிட்டான். "சே, சே ! அப்படி ஒன்றும் இல்லை. குஸுமா பணத்துக்காக யாருக்கும் மரியாதை செய்ய மாட்டாள். இதுக்கெல்லாம் காரணமே சொல்ல முடியாதுபோல் இருக்கிறது."

"இங்கே வேணு என்ன செய்துகொண் டிருக்கிருன் ?"

"இந்த ஊரிலுள்ள ஜவுளிக் கடையை அவன் கவனித்து வருவதாகப் பேச்சு. ஆனல், அதுக்குச் சரியான ஆட்கள் இருக்கிருர்கள். காரில் ஊரைச் சுத்துவதுதான் இவனுக்கு வேலை. குஸுமாவுக்கும் கார் என்ருல் ஒரே பயித்தியம். தெரியுமல்ல, உனக்கு ?"

மதன் ஆமோதிப்பதுபோல் தலையை அசைத்தான். "சரி, நான் இன்னி இரவு புறப்பட்டுப் போறேனே? இத்தனை நாள் இருந்தது போதாதா?"

"என்னடா அவசரம்?"

"நான் ஐ. ஏ. எஸ். பரீக்ஷைக்குப் பணம் கட்டிவிட்டேன். அதை மறந்துவிடாதே!"

"பரீட்சை உனக்கு ஒரு கணக்காடா! கீழே வேறு குரல் கேட்கிறதே. ஏதோ பலமாய்ப் பேசுகிறுளே. பார்க்கலாம், வா!" என்று நண்பனுடன் அவன் கீழே இறங்கி வந்தான்.

அவர்களைக் கண்டதும் வேணு ஒரு 'ஹல்லோ' போட்டான். "நான் நாளைக்குச் சென்னையில் இருந்தாக வேண்டும். பட்டணத்து மானேஜர் சிங்கப்பூருக்குப் போக வேண்டி இருக்கிறதாம். நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு அவர் புறப்படணுமாம். இது அப்பாவின் உத்தரவு. அவருக்கு இதுதான் வேலை" என்று சலித்துக்கொண்டே கூறினுன்.

குஸுமாவின் முகவாட்டத்தை மதன் கவனித்தான். பிறகு, "நானும் இன்று இரவு புறப்படுகிறேன், ஸார்" என்றுன்.

"ரயிலில் ஏன் ஸார் போகவேண்டும்? என்னோடு காரில் வந்துவிடுங்களேன். நான்தான் ஓட்டுவேன். உங்களைப் பத்திரமாக வீட்டு வாசலில் இறக்கிவிட்டுப் போகிறேன். நாளைக் காலையில் புறப்பட்டு, பத்து மணிக்குள் சேர்ந்துவிடலாமே!"

"அப்படியே செய், மதன். இந்தத் தொல்லை பிடித்த ரயில் பிரயாணம் வேண்டாம்" என்றுன் பிரகாசம்.

இப்பொழுது, குஸுமா, தன் தாயார் காதில் ஏதோ ரகசியமாக ஓதவே, அந்த அம்மாள் சிரித்தாள். "என்னது?" என்று வேணு கேட்டான்.

"ஒன்றும் இல்லை. இந்த ஊரைப்போலே, பட்டணத்துலேயும் காரை 'ரேஷா'ய் ஓட்டக்கூடாது என்கிறுள்."

வேணுவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"அது என்னமோ நிஜந்தான், வேணு! நீங்கள் ஓட்டுகிற போது உள்ளே உட்கார்ந்து இருக்கிறவங்களுக்குக்கூடக் கொஞ்சம் பயம்தான்" என்ருன் பிரகாசம்.

"நீங்கள் ஒரு பக்கம்! இப்படியெல்லாம் சொன்னுல், மதன் என்னேடு வருவதற்கே பயப்படுவார்."

"எனக்கு ஒரு பயமும் இல்லை. நீங்கள் கவலையே படவேண்டாம். ஆனுல் குஸுமாவுக்குத் தைரியம் ஊட்டுங்கள்" என்று மதன் வேடிக்கையாகச் சொன்னுன்.

வேணு, நீர் ஊறிக் கிடந்த குஸுமாவின் விழிகளைப் பார்த்தான். அவன் முகத்திலும் வேதனை ஏற்பட்டது. "நான் அடிக்கடி வராமல் போவேனு? கடிதங்களும் எழுதுகிறேன். அப்புறம், அம்மாவையும் அப்பாவையும் சீக்கிரமே உங்களைக் காணச் சொல்கிறேன்" என்று அவன் குஸுமாவின் தாயாரிடம் சொன்னுன்.

"ஆமாம், அப்பா! சீக்கிரமே வரவேண்டியதுதான். தை மாதத்தில் முகூர்த்தத்தை நடத்தி விடணும். பெரியவங்கள், அவங்களும் சம்மதிச்சப்புறம், எதுக்காகத் தாமதிக்கணும்? அப்புறம், இவளுக்குச் சமாதானம் செய்யறதுக்குள்ளே, எனக்குப் போதும் போதுமின்னு ஆயிடும்!" என்ருள் தாயார்.

"போ, அம்மா!" என்று குஸுமா தன் தாயைப் பிடித்துத் தள்ளினுள்.

பிரயாணத்திற்கு முன் செய்யவேண்டிய வேலைகளைக் கவனிக்க, வேணு போய்விட்டான்.

மறுநாள் அதிகாலையிலேயே, வேணுவும் மதனும் சென்னைக்குப் புறப்பட்டார்கள். குளிர்ந்த காற்றில், களைப்பின்றி, உல்லாசமாக, வேணு காரை ஓட்டிக்கொண்டு போனுன்.

வழி முழுவதும் வேணு, தனக்கும் குஸுமாவுக்கும் ஏற்பட்டுள்ள தெய்விகக் காதலைப்பற்றிப் பிதற்றிக்கொண்டே வந்தான்.

நகரத்தை அடைந்ததும், தன் வீட்டுக்குப் போகும் வழியை மதன் தெரிவித்தான். அதன்மேல், நேராக வேணு,

வண்டியைக் கொண்டுவந்து, மதன் வீட்டு வாசலில் நிறுத்தினன்.

தெருப் பக்கமிருந்த முத்து, மதன் இறங்குவதைப் பார்த்து, ஆச்சரியப்பட்டுக்கொண்டு ஓடி வந்தான். "பாப்பா! பாப்பா!" என்று எதையோ சொல்ல வாயெடுத்தான். ஆனல், மதன் அவனை, 'இரு" என்று தடுத்து, வேணுவுக்கு வந்தனம் அளித்து, விடை பெற்றுக்கொண்டான். வண்டியும் கிளம்பிப் போய்விட்டது.

முத்து—பெட்டியையும் படுக்கையையும் எடுத்துக்கொண்டவன்—ஆத்திரத்தை அடக்க முடியாமல், "சேஷாத்திரி காணமல் போயிட்டான், பாப்பா!" என்ருன்.

"என்னடா உளறுகிறே?"

"மெய்யாலும், பாப்பா! நேத்து, சொல்லாதே கொள்ளாதே எங்கயோ ஓடிட்டாணும்! ஊரெல்லாம் வலைவீசிப் பாத்துட்டாங்க,...ஆம்படல்லே. சண்டையைப் பாக்காமே, புண்ணியகோடி அய்யா இங்கே வந்து நாயினவை என்னு என்னமோ கேட்டுக்கிட்டு இருந்தாரு..."

"உயிருக்குப் பயமில்லையேடா?"

"நான் என்னத்தைக் கண்டேன்?"

"நீ ஒரு மடையன்" என்று மதன் கடிந்துகொண்டு உள்ளே ஓடினன்.

## 5

"இப்போ ஏதடா ரயில்!" என்று வேதவல்லியம்மாள் சிறிது ஆச்சரியத்தோடு மதனை வரவேற்ருள்.

"ஒரு சிநேகிதன் கார்லே வந்துவிட்டேன். ஆமாம், சேஷாத்திரி சங்கதி என்ன?" என்று கேட்டான் மதன்.

"உனக்கு யார் சொன்னது?"

"நான் சொன்னேன், அம்மா" என்று முத்து பெருமையோடு மாரைத் தட்டிக்கொண்டான்.

"நீ நாசமாய்ப் போனே!"

"அவன் சங்கதியைச் சொல்லேன், பெரியம்மா! உயிருக்கு ஆபத்தில்லையே?"

"உயிருக்கும் ஆபத்து இல்லை, கியிருக்கும் ஆபத்தில்லை" என்று சொல்லிக்கொண்டு, அவன் தாயாரும் வந்தாள்.

"எனக்குத் திங்க என்ன கொண்டு வந்திருக்கே?" என்று எட்டு வயதுள்ள ஒரு தங்கை அவன் கையைப் பிடித்து இழுத்தாள்.

"நடந்ததை யாரும் சொல்ல மாட்டேங்கிறீர்களே?" என்று அவன் கடிந்துகொண்டான்.

"சொல்றதுக்கு என்னடா இருக்கிறது? அந்தப் பேயை விட்டுத் தொலைந்தால் போதும்னு அவனுக்கு ஆயிட்டுது போல் இருக்கு. ஒரு கடிதாசியை எடுத்தான். 'நான் மேஜர் ஆனவன். எனக்குப் பகுத்தறிவு இருக்கிறது. என்னை யாரும் தேடவேண்டாம். இரண்டு வாரங்களுக்குப் பிறகு நானே கடிதம் எழுதுகிறேன்' என்று எழுதி, அப்பன் கண்ணுலே படும்படியான இடத்திலே வைத்தான்; விட்டான் சவாரி!" என்றாள் அவனுடைய தாயார்.

"ஆனால், மனுஷன் ரொம்பக் கஷ்டப்படுகிறான். எல்லாத்தையும் மறந்து, அன்னி ராத்திரியே ஓடி வந்து, அப்பாவை வெகு நேரம் யோசனை கேட்டுக்கொண்டிருந்தான். திரும்பிப் போகிறபோது அவன் முகத்தைப் பார்க்க முடியவில்லை" என்றாள் வேதவல்லியம்மாள்.

"ஆமாம்; நீ ஒருத்தி. ஊரெல்லாம், அவன் என்ன சொல்லிக்கொண்டு இருக்கிறானும் தெரியுமா? மதன் அப்பாதான் அவன் குடும்பத்தைக் கெடுத்தாராம். அதனாலே எங்களுக்கு இருக்கிற ஒரு பிள்ளையும் தக்காமல் போயிடணுமின்னு திட்டிக் கொண்டிருக்கானும்!"

"ஆமாம்; திட்டிவிட்டால் அப்படியே பலித்துவிடுமாக்கும்! என்ன பயித்தியம், அம்மா நீ! சரி, நான் அப்பாவைப் பார்த்துவிட்டு வரேன்" என்று மாடிப் படிகள் நாலைந்து ஏறி,

பிறகு, "அந்தக் தூக்குக் கூடை நிறையத் திண்பண்டங்களை அத்தை அடைத்து வைத்திருக்கிறாள், அம்மா. குழந்தைகளுக்குக் கொடு" என்று சொல்லிப் போய்விட்டான் மதன்.

பிரின்ஸிபால் கிருஷ்ணன், ஏதோ புத்தகத்தைப் படிப்பதில் மூழ்கிக் கிடந்தார். மதன் உள்ளே வந்ததுகூட அவருக்குத் தெரியவில்லை. அவன், "அப்பா!" என்று அழைத்த பிறகுதான் தலையை நிமிர்ந்தார்.

"எப்பொழுது வந்தாய்?"

"இப்பொழுதுதான். சேஷாத்திரி எங்கே போய்விட்டான்?"

"எனக்கு எப்படித் தெரியும்? அவனுக்குப் படிப்பில் ஆசை இல்லை. அதைச் சொன்னால், புண்ணியனுக்கு வேறு விதமாகத் தோன்றிற்று. அவனுடையது ஒரு தனிப்போக்கு. ஆனால், எனக்கு ஒரு பயமும் இல்லை. அவன் தைரியசாலி. கல்லைத் தின்றாலும் ஜீரணித்துக்கொள்வான். நடத்தை தவறி நடக்கிற பிள்ளையும் அல்ல அவன்."

"தானே இரண்டு வாரங்களுக்குப் பிறகு எழுதுவதாகச் சொல்லியிருக்கிறானமே?"

"அப்படித்தான் சொன்னான். இதுவும் நம்முடைய போதாத காலந்தான். புண்ணியனுக்கு என்மேலே இருக்கிற ஆத்திரத்தைச் சொல்லி முடியாது. என்னால் அவன் மகன் ஊரை விட்டே ஓடிப் போய்விட்டான் என்று என் நண்பர் சுந்தரத்தினிடம் முறையிட்டானும். பிறகு, சம்பந்தத்தினிடம் நான் அவன் குடியைக் கெடுத்துவிட்டேன் என்று அழுதானும். ரொம்பப் பரிதாபமாக இருந்ததென்று சம்பந்தம் சொன்னான். நான்தான் காரணமென்று சம்பந்தமும் நினைக்கிறான். எல்லாம் நான் செய்த பாவம்!"

"ஆமாம். பாவமாவது, புண்ணியமாவது?"—

"ஊஹூம், உனக்கும் நவநாகரிகப் பித்துப் பிடித்து விட்டதா? பாவமும் வேண்டாம், புண்ணியமும் வேண்டாம். சரி; ஆனால் செயலுக்கு ஏற்ற செயல் பிரதியலிக்கும். இது

கொள்கை அல்ல; இயற்கை. மறந்துவிடாதே! இது நம்முடைய பண்புக்கு முதல் படி. மேலே எவ்வளவோ படிகள் இருக்கின்றன. பயித்தியக்காரா! வழியில் போகிறவனை, 'கழுதை!' என்று அழைத்தால், அவன், 'நாயே!' என்றுதான் அழைப்பான். மரத்துக்கும் நிழலுக்கும் இருக்கிற இணைப்பைப் பிரிக்க முடியுமா? அப்படித்தான் மனிதனும் அவன் செயலும்; ஒரு சமூகமும் அதன் நடத்தையும்..."

"நான் ஏதோ சொன்னேன் அப்பா, மனத்தில் ஒன்றும் இல்லை. எனக்கு நினைக்க நினைக்க ஏதோ வேதனை செய்கிறது" என்று அழாக் குறையாக மதன் சொன்னான்.

கிருஷ்ணன், தலை நிமிர்ந்து புதல்வனை ஒரு கணம் பார்த்தார். சமாளித்துக்கொண்டு, மதன் மேலே சொன்னான்: "சேஷாத்திரி இருக்கும் இடம் தெரிந்ததும், நானே போய் அழைத்துக்கொண்டு வருகிறேன், அப்பா!"

"அப்படியே செய். நான் வேண்டாமென்று சொல்வேனா?"

மதன், மௌனமாகக் கீழே இறங்கிச் சென்றான்.

**சி**ல தினங்களுக்குப் பிறகு சேஷாத்திரி வாக்குத் தவறாமல், விவரமாகத் தன் தகப்பனாருக்குக் கடிதம் எழுதினான். தான் வெகு நாளாக ஆசைப்பட்ட எண்ணம் நிறைவேறிவிட்டதென்றும், விமானப் படையில் சேர்ந்து, வடநாட்டில் ஷில்லாங் என்ற இடத்தில் வெகு சௌக்கியமாக இருப்பதாகவும், இரண்டு மாதங்களுக்குப் பிறகு, தானே சென்னைக்கு வந்து, அனைவரையும் கண்டு போவதாகவும் தெரிவித்திருந்தான்.

அவன் கடிதம் கிடைத்ததுதான் தாமதம். புண்ணியகோடி, தந்தி மேல் தந்தி அடித்தார். வேண்டுமானால் அவனுக்கு, சொந்தமாகவே சென்னையில் ஒரு விமானத்தை வாங்கிக் கொடுத்துவிடுவதாகவும், அவன் அந்த வேலையை எப்படியாவது ராஜினாமா செய்துவிட வேண்டும் என்றும், அதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவழிக்கத் தயார்

என்றும், எல்லா விஷயங்களையும் நேரில் பேச மறுநாளே புறப் பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அவ்வளவுதான், சில மணி நேரத்துக்குள் சேஷாத்திரியி னிடமிருந்து கண்டிப்பான பதில் வந்தது. அந்தச் சமயத்தில் தகப்பனார் வந்து தன்னைக் காண்பது தனக்கு இஷ்டமில்லை என்றும், அப்படி வந்தால், அவன் நாட்டை விட்டே மறைந்து விடலாம் என்றும் பயமுறுத்தியிருந்தான்.

புண்ணியகோடி நடுங்கினார். இவ்வளவு செய்தவன், எதைத்தான் செய்ய மாட்டானென்று அஞ்சினார். மகனை விட்டுப் பிடிக்க வேண்டுமென்ற தீர்மானத்துக்கு வந்தார். இருந்தாலும் சோகம், மனத்தைத் துளைத்தது. சோகத்தில் அவருக்குச் சுபாவமான கோபமும் குரூரமும் ஒருவாறாக மறைந்தன. ஆனால், அது சிறிது காலத்துக்குத்தான். யோசிக்க யோசிக்க, இதற்கெல்லாம் ஆதிகாரணம் கிருஷ் ணன்தான் என்ற உணர்ச்சி அவரிடம் ஓங்கிக்கொண்டு வந்தது.

தமக்குத் தெரிந்த கிருஷ்ணனுடைய நண்பர்களிடம் சென்று அவர் புலம்பினார்; முக்கியமாகச் சுந்தரத்தினிடம் அடிக் கடி சென்று, மனத்தில் இருப்பதை வாய்விட்டுச் சொன்னால், துக்கம் ஆறுதா என்ற நம்பிக்கையோடு கதறினார்.

ஒரு நாள் வருத்தம் தாங்க முடியாமல், "ஸார், நீங்களே சொல்லுங்கள். அவனுடைய பிள்ளை மதன், இதே கதியில் இருந் தால், கிருஷ்ணனுக்கு மனம் எப்படி இருக்கும்! அந்தப் படுபாவிக்குத் தெரியவில்லையே!" என்று வருந்தினார்.

"தெரிந்தால் அவன் என்ன செய்ய முடியும்?" என்றார் சுந்தரம்.

"என்ன ஸார், நீங்கள்கூட இப்படிச் சொல்லுகிறீர்களே? அந்தக் காலத்துலே, அவனைக் கல்லூரியில் சேர்த்திருந்தால் படிக்கிறானே இல்லையோ, கல்லூரியில் நுழைந்து வந்துகொண் டிருப்பானே இல்லையோ? இந்தக் கஷ்டம் எல்லாம் வந்திருக் காதே!"

"அது என்னவோ உண்மைதான். அவன் ஒரு பயித்தியம்! —ஆனால் உங்களுக்குத் தெரியாதது அல்ல—அவன் கெட்ட எண்ணத்தோடு செய்யவில்லை. இப்படியெல்லாம் நேரிடும் என்று அவனுக்கு மாத்திரம் தெரியுமா?"

"ஸார், கூடப் பிறந்தவனுக்கு மேலாக அவனுக்கு நாலும் செய்தேனே! அதுக்காகவாவது, என் மகனைக் கல்லூரியிலே சேர்த்திருக்கக் கூடாதா? சேர்த்தால் இவன் பாட்டன் வீட்டுச் சொத்து என்ன போயிடும்?"

"அது தவறு, தவறுதான். நான் ஒப்புக்கொள்கிறேன்."

"தவறு இல்லை ஸார். தன்னைப்போலப் படித்தவன் இல்லையின்னு நெஞ்சைத் தட்டிக்கிறானே, அந்தத் திமிர்! என்னைப்போல அவனும் தவிச்சால் அப்போ தெரியும் அதன் அருமை, அவனுக்கு!" என்று சொல்லும்போதே புண்ணிய கோடியின் மனம் எங்கெங்கோ ஓடியது.

வீட்டுக்குத் திரும்பி வந்ததும், புண்ணியகோடி, பெட்டியைத் திறந்து பல காகிதங்களைப் புரட்டினார். அவைகளில் கிருஷ்ணன், எண்ணாயிரத்துக்கு எழுதிக் கொடுத்த ஒரு பத்திரத்தைத் தேடி எடுத்தார்; பிறகு 'ரோல் டாப்' பீரோவைத் திறந்தார்; அதில் ஆயிரம் ரூபாய்க்கு எழுதிக் கொடுத்த ஒரு புரோ நோட்டு இருந்தது. இரண்டையும், கையோடு எப்பொழுதும் கொண்டு போகும் தோல் பையில் வைத்துவிட்டு, அவர் தீவிரமான ஆலோசனையில் மூழ்கினார். பிறகு திடீரென்று ஒரு நினைவு வரவே, எழுந்து, மேலே ஒரு துண்டைப் போட்டுக் கொண்டு 'செக்' புஸ்தகத்தையும் எடுத்துக்கொண்டு, மளமள வென்று கடைத் தெருப் பக்கமாக நடந்து சென்று, முன்பு கிருஷ்ணன் கடன் வாங்கியிருந்த மார்வாடியின் வீட்டில் நுழைந்தார்.

"வாங்க, வாங்க!" என்று மார்வாடி மலர்ந்த முகத்துடன் வரவேற்றான்.

"ஒன்றும் இல்லை. நாலைந்து நாளுக்கு முந்தி, பிரின்ஸிபால்

கிருஷ்ணன் இங்கே வந்ததைப் பார்த்தேன்; மறுபடியும் கடன் வாங்கிஞரா !''

"நம்பள் எப்படிச் சொல்வாங்க ?'' என்று மார்வாடி, அசட்டுச் சிரிப்புடன் கைகளைப் பிசைந்தான்.

"நாங்கள் இருவரும் சிநேகிதர்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? முன் ஒரு தடவை நான் அவன் கடனைத் தீர்த்தது ஞாபகம் இல்லை ?''

" இருக்கான் ; இருக்கான் ?"

"இதோ பாருங்கள், அவனை எப்படியாவது வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்று பார்க்கிறேன். நான் திட்டு கிறேனென்று, எனக்குத் தெரியாமல் வாங்க ஆரம்பித்து விட்டானே !''

"ரொம்ப நல்ல மன்சன். ஜாயிண்டு வாணும்னு சொல்லி, சொந்தமாய் எள்திக் கொடுத்தான். ஆயிர ருபா வாங்கி, அவுங்க 'பிரண்ட்டு'க்குக் கொடுத்தான். அவுங்க 'பிரண்டு, கொம்பனி மானேஜர்; தெரியாது ? அவன் பொம்பயி மாத்திட்டான்.''

புண்ணியகோடி, தெரிந்ததுபோல் தலையை அசைத்து, தன் நண்பனுக்காக மிகவும் வருந்துவதுபோல் நடித்தார். பிறகு, தன் நண்பனுக்குக் கடன் வாங்காமல் இருக்கப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று சொல்லி, வட்டியையும் முதலையும் கொடுத்து, பிராமிஸரி நோட்டைத் தம் பெயருக்கு மாற்றிக்கொண்டார்.

அடுத்த வாரம் முழுவதும் பிரின்ஸிபால் கிருஷ்ணன் கடன் வாங்கின இடங்களைத் தேடிப் பிடிப்பதிலேயே புண்ணிய கோடி, காலத்தைக் கழித்தார். தன் வசம் ஏழெட்டு தஸ்தா வேஜுகள் வந்ததும், அவர் ஒன்றன் பின் ஒன்ருகக் கோர்ட்டில் நடவடிக்கைகளை எடுத்தார்.

அம்பு மேல் அம்பு வந்து விழவே, பிரின்ஸிபால் கிருஷ்ணன் திகைத்துப் போனர். புண்ணியகோடி தம்மை நிர்மூலமாக்க நிச்சயித்துவிட்டார் என்பதைத் தெரிந்துகொண்டார். ஆனல், மனச் சாட்சிக்கு விரோதமாகத் தாம் ஒன்றும் செய்யவில்லை என்ற நம்பிக்கையால், அவர் சிறிதும் பதற்றப்படவில்லை.

கிருஷ்ணனுக்குக் கடனால் ஏற்பட்ட தொந்தரவுகள், அவருடைய இலாகாவின் தலைவருக்கு எட்டவே, அவர் கிருஷ்ணனை அழைத்து, தாமாகவே நான்கு மாதங்களுக்கு 'லீவ்' கொடுத்து, அதற்குள் அவர் தம் விவகாரங்களை ஒரு விதமாகச் சரிப்படுத்திக்கொள்ளும்படி சொன்னார்.

ஆனால், லீவு கழிந்துகொண்டு போயிற்றே தவிர, அவரால் ஓர் ஏற்பாடும் செய்ய முடியவில்லை. கேட்காத நண்பர்களை எல்லாம் கேட்டார் சர்க்கரைபோல் பேசுகிறவர்கள், இப்பொழுது அவரை விட்டுத் தப்பி ஓட முயன்றார்கள். சிலர், வீட்டில் இருந்துகொண்டே இல்லையென்று தகவல் அனுப்பித் துரத்தினார்கள்.

புண்ணியகோடி, லஞ்சம் வழங்குவதில் கைதேர்ந்தவர் ஆதலால் சூறவளிபோல் வேலைசெய்து, வெகு சீக்கிரத்தில் கிருஷ்ணனின் வீட்டை ஏலத்துக்குக் கொண்டுவந்து விட்டார். ஒன்றுக்குப் பாதியாக அது விற்பனையாகும்படியும் செய்துவிட்டார். பல இடங்களில் சாமான்களை வாரிப் போட்டுவிட்டு, கிருஷ்ணன், நகரத்துக்குத் தென்கோடியில் ஏழை மக்கள் வசிக்கும் ஒரு வட்டாரத்துக்குக் குடித்தனம் போனார்.

ஆனால், அங்கும் புண்ணியகோடி அவரை விட்டபாடில்லை. வீட்டை விற்ற பணத்தால் கடன் அடையாததால், பாக்கித் தொகையை வசூல் செய்ய நடவடிக்கைகளை எடுத்தார்.

ஒரு நாள், ஒரு கோர்ட்டு அதிகாரியுடன் வந்து, தாம் வெளியில் காரில் உட்கார்ந்தவாறு புண்ணியகோடி, கிருஷ்ணனுக்கு ஒரு 'சம்மனை'க் கொடுத்து, கையெழுத்து வாங்கி வரும்படி, அதிகாரியை உள்ளே அனுப்பினார்.

அதைக் கண்டதும் கிருஷ்ணன், திக்பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்துவிட்டார். அவர் எப்பொழுதும் எதையும் சட்டை செய்யாதவர். ஆகையால், அவர் குடும்பத்தாரைப் பயம் பிடித்துக்கொண்டது. "என்னது? என்னது!" என்று அமிருதவல்லி தவித்தாள்.

“இன்னும் ஒரு வாரத்துக்குள், மீதிப் பணத்தை நான் கொடுக்காவிட்டால், என்னை ஜெயிலில் வைத்துவிடுவானும்!” என்றார் கிருஷ்ணன்.

“ஐயோ! ஐயோ!” என்று அமிருதவல்லி கதறினாள். குழந்தைகளும் அழ ஆரம்பித்தன. வேதவல்லியம்மாளின் கண்களில் தீப்பொறி பறந்தது. பற்களைக் கடித்தாள். தட தடவென்று வெளியே காரில் உட்கார்ந்திருக்கும் புண்ணிய கோடியினிடம் வந்தாள். “அடே, பாதகா! உனக்குப் போகிற காலம் வந்துவிட்டதா! உன் தலையிலே அப்படி என்ன கல்லைப் போட்டு விட்டாரடா! நீயும் ஒரு பெண்ணையும் பிள்ளையையும் வைத்துக்கொண்டிருக்கிறாயே, அவர்கள் தக்க வேண்டாமா! நீ உருப்படுவியா! உனக்கு ஏதோ வந்துட்டது! பாவி! பாவி! நீ நாசமாய்ப் போகாத போனால் பார்!” என்று இரண்டு கைகள் நிறையத் தெரு மண்ணை வாரி எடுத்துத் தூற்றினாள் அவள்.

“பிடாரி! பெண் பிள்ளையாய் யோக்கியதையாய் இருந்தால் தெரியும்!” என்று புண்ணியகோடி முணு முணுக்கும்போதே, வேதவல்லியம்மாள் சீறிக்கொண்டு வந்தாள். “என்ன சொன்னே! அயோக்கியப் பயலே! என் யோக்கியதை உனக்கு என்னடா தெரியும்! பல்லைத் தட்டிக் கையிலே கொடுப்பேன்! கழுதை! லஞ்சத்தாலேயும் கள்ள மார்க்கெட்டாலேயும் பணம் சம்பாதித்துவிட்டால் பெரிய மனிதன் ஆகிவிடுவாயோ! கொலைகாரப் பாவி! என்று கத்தினாள்.

அவள் சுபாவத்தை அறிந்த புண்ணியகோடி, கோர்ட்டு அதிகாரி எப்படியாவது திரும்பி வரட்டுமென்று, வண்டியை ஓட்டச் சொல்லி, அவ்விடத்தை விட்டுக் காற்றாய்ப் பறந்தார்.

**வே**தவல்லியம்மாளுக்குப் பதற்றம் அடங்கச் சிறிது நேரம் ஆயிற்று. இந்தப் புது விபத்திலிருந்து எப்படித் தப்பிக்கிறது என்று எல்லாரும் யோசித்தார்கள். வேதவல்லியம்மாளின் புருஷன் இறந்தபொழுது, அவளுடைய புக்ககத்தார் அவளுக்கு இரண்டு காணி நிலத்தைக் கொடுத்திருந்தார்கள். அதை ஆண்டு அநுபவிப்பதோடு, விற்கும் உரிமையும் அவ

ளுக்கு இருந்ததால், அவள் இப்பொழுது அதை விற்று விடுவதாகச் சொன்னாள்.

ஆனால், கிருஷ்ணன் அதற்குச் சம்மதிக்கவில்லை. "நீங்கள் உயிரோடு இருக்கும் வரையில் அதைத் தொடக் கூடாது. அப்படி அதை விற்றாலும் நம் கைக்கு ஏழெட்டாயிரந்தான் வரும்: அதோடு புண்ணியன் நின்றுவிடுவான் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆகையினாலே அந்த நிலத்துப் பேச்சே வேண்டாம்!" என்றார்.

"அப்போ ஜெயிலுக்குப் போகிறதா?" என்று அமிருதவல்லி அழுதாள்.

"அவசரப்படாதே: தலை போகிறது ஒன்றும் இல்லை!..."

"இதுக்கும் மேலேயா போக வேண்டும்?"

கிருஷ்ணன், ஒரு நிமிஷம் தம் மனைவியின் துயரத்தை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு, வக்கீலாக இருந்த தம் நண்பர் ஒருவரைப் பார்த்து வர வெளியே சென்றார்.

வக்கீல், தீவிரமாக யோசித்து, கிருஷ்ணன் தம்மை 'இன்ஸால்வென்டா'கப் பதிவு செய்துகொண்டாலொழிய, எதிரி அவரைச் சிறைச்சாலையில் அடைக்காமல் விடமாட்டான் என்றும், அதனால் அவர் ஒரு நிமிஷங்கூடத் தாமதிக்காமல் உடனே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் புத்திமதிகள் சொன்னார். அதன்மேல் கிருஷ்ணன், அப்பொறுப்பை அவரிடமே ஒப்பித்து, தேவையான தகவல்களை எல்லாம் சொல்லி, மனுவிலும் கையொப்பம் இட்டு விட்டு, வீட்டுக்குத் திரும்பினார். கிருஷ்ணனின் குடும்பத்தாரும், ஜெயில் வாசத்தைவிட இன்ஸால்வென்ட், ஆயிரம் மடங்கு மேலானது என்று சமாதானப்படுத்திக்கொண்டார்கள்.

இந்த விஷயம் புண்ணியகோடிக்குத் தெரிந்ததும், கைக்கு எட்டிய இரை, வாய்க்கு எட்டவில்லையே என்று வருந்தினார். ஆனால், சூழ்ச்சிகளிலேயே மூழ்கி, மிதந்தவரான

தால் அவர் ஓடி, தாக்கல் செய்த கடன்களின் ஜாபிதாவைப் பார்த்தார். அவர் நினைத்தவாறே, அவர் மறைத்து வைத்திருந்த மூன்று பாக்கிகள் அதில் இல்லை. உடனே புண்ணியகோடி, அவைகளுக்காக வழக்கு எடுத்தார். அதோடு நிற்காமல், கிருஷ்ணன் அவைகளை மறைத்து வைத்துப் பொய் சொன்ன தாகவும் வாதாடினார். ஞாபகப் பிசகால் ஏற்பட்ட தவறு என்று ருஜுப்படுத்துவதற்கு, கிருஷ்ணனுடைய வக்கீல் படாத பாடு படவேண்டி யிருந்தது.

'இன்ஸால்வென்ட்' என்றாலே, சர்க்கார் யாரையும் பொறுப்புள்ள பெரிய உத்தியோகத்தில் வைக்க மாட்டார்கள். அப்படியிருந்தும், கிருஷ்ணனுடைய விஷயத்தில் அவர்கள் சிறிது சலுகை காட்டினார்கள். ஆனால், கடனுக்காக இரண்டாவது தடவை அவர் மனுப் போடவேண்டி வந்தபொழுது, அவர்மீது கௌரவம் வைத்திருந்தவர்களால்கூட ஒன்றும் செய்ய முடியவில்லை. அதோடு, அவருடைய பதவிக்கு ஆசைப் பட்டுக்கொண் டிருந்தவர்களும் சூழ்ச்சிகள் செய்யவே, கிருஷ்ணன் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

இந்தச் செய்தியைக் கேட்டதும், அமிருதவல்லி மூர்ச்சை யடைந்தாள். அவளைத் தெளிய வைப்பதற்குள் வேதவல்லி அம்மாளுக்கு உடம்பு ரத்தமெல்லாம் நீராகிப் போயிற்று. வீட்டுக்குச் சாவுக் களை வந்துவிட்டது. கடைசியாக, வேதவல்லி அம்மாள் அமைதியைக் கலைத்தாள். "அந்தப் பாதகனுக்கு ஏதோ கேடு நெருங்கி வந்துவிட்டது! இல்லாமல் போனால், இப்படி வருமா! அவன் நாசமாய்ப் போக! அவனும் ஒரு பெண்ணையும் பிள்ளையையும் வைத்துக்கொண் டிருக்கிறானே! படுபாவி! அவன் தலையிலே சட்டி நெருப்பை நான் கொட்டாமல் விடுகிறேனா, பார்!" என்று அவள் பற்களைக் கடித்தாள்.

"நம் கெட்ட வேளைக்கு அவன் என்ன செய்வான்?" என்றார் கிருஷ்ணன்.

"ஆமாம்; வேளை!" என்று உறுமிக்கொண்டு, அவள் உள்ளே சென்றாள். அடக்கி வைத்திருந்த துக்க மெல்லாம்

கரை புரண்டு ஓடியது. கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அழுதாள்.

அதைப் பார்த்த முத்து, திகில் அடைந்தான். 'பெரியம்மா' அவ்வாறு அழுததை அவன் கண்டதே இல்லை.

## 6

ஆசிரியர் கிருஷ்ணனுக்கு உத்தியோகம் போனது ஊருக்கெல்லாம் தெரிந்துவிட்டது. அவர்மீது இரக்கம் உண்டான போதிலும், பண வசதிக்கு அடியோடு முட்டுக்கட்டை போடப்பட்டது. பெரிய குடும்பம். மாதம் ஆயிரம் ரூபாய் வந்தபொழுதே சமாளிக்க முடியாதபோது, இப்பொழுது அவர் என்ன செய்வார்? விற்கக் கூடிய வஸ்துக்களும் விற்பனை ஆகிவிட்டன. இனி என்ன செய்வதென்று தெரியாமல், அவர் தத்தளித்தார்.

சில வேளைகளில், வீட்டில் குழந்தைகளுக்குக்கூட உணவில்லாமல் இருக்கும். மனம் உருகி, உருகி அமிருதவல்லி அம்மாள் துரும்பாகி விட்டாள். அவளுக்கு க்ஷயரோகம் வந்துவிடுமோ என்ற பயமும் ஏற்பட்டது. வேதவல்லி அம்மாள் மாத்திரம் மனம் தளராமல், சதா முத்துவுக்கு வேலை இட்டுக்கொண்டு, குடும்பத்தின் கஷ்ட ஜீவனத்தை எப்படியோ நிர்வகித்து வந்தாள்.

எல்லோரையும்விட முத்துவுக்கே அதிகத் துயரமாகத் தோன்றியது. என்ன செய்தால் கஷ்டம் நீங்கும் என்று, அவன் மூளையைக் குழப்பிக்கொண்டான். பேதையானாலும், புண்ணியகோடிதான் இவ்வளவு துன்பத்துக்கும் காரணம் என்பதை அவன் ஊகித்துவிட்டான். தன்னால் அந்தக் குடும்பத்துக்கு ஒருவித உதவியும் இல்லையே என்று வருந்தினான். தனக்குத் தெரிந்த ஒரு சிநேகிதனிடம் அவன் இதைப்பற்றி முறையிட்டுக் கொண்டபொழுது, அவன் குறும்புத்தனமாகச் சொன்னான்; "அடே, தினம் அஞ்சு மணி நேரத்துக்கு ஒரு பெரிய காருலே இப்படி ஒரு ஸேட் போவானே பாத்திருக்கயா?"

"ஊம்."

"அவன் கொளுத்த பணக்காரன், அவன் காரு விடறபோது அதன் கீளே விளுந்துடு. உங்கய்யாவுக்கு வேண்டிய பணம் கொடுப்பான்."

"மெய்யாலுமா?"

"மெய்யாலுந்தான். ஆனால், நீ செத்துடுவே! காலு கை ஒடிஞ்சிடும்! ஆமாம்; அதையும் பாத்துக்கோ!" என்று அவன் சிரித்தான்.

"நான் செத்தால் சாவுறேன்! எங்கய்யாவுக்குப் பணம் வந்தால் போதும்" என்றான் முத்து.

பிறகு வீட்டுக்குப் போய், வேதவல்லி அம்மாளிடம் இந்த யோசனையைச் சொன்னான். அவளுக்குக் கோபம் பீரிட்டுக் கொண்டு வந்தது. "நீ நாசமாய்ப் போக! எவன் எது சொன்னாலும் நம்பவேண்டியதுதானா! அட முத்து! நீ இவ்வளவு பயித்தியக்காரனா இருக்கக்கூடாதுடா! அப்படி ஏதானும் நடந்தா அய்யாவைப் பிடிச்சு, உடனே ஜெயிலுலே போட்டுடு வாங்க!"

"அய்யய்யோ! நான் செய்யமாட்டேன், அம்மா!" என்று முத்து கதறினான்.

வேதவல்லியம்மாள் முகத்தை அப்புறமாகத் திருப்பிக் கொண்டு போனாள். ஆனால், அவள் கண்களில் நீர் ததும்பி யதை முத்து பார்த்துவிட்டான். அது அவன் குலையைக் குத்தி எடுத்தது.

ஆசிரியர் கிருஷ்ணன் வேலைக்கு மனுப் போட்டவாறே இருந்தார். சர்க்கார் உத்தியோகம் இல்லாவிட்டால் பிழைப்பதற்கு வேறு எவ்வளவோ வழிகள் இருந்தன என்று அவருக்குத் தைரியம் உண்டானபோதிலும், ஒன்றுவது கைகூடவில்லை. வட நாட்டிலுள்ள சில நண்பர்களுக்கும் தமது நிலைமையைத் தெரிவித்தார்.

ஆனால், தற்சமயம் ஒன்றும் இல்லை என்றும், சமயம் வந்ததும் உடனே தெரியப்படுத்துவதாகவும் பதில் வந்துகொண்டே

இருந்தது. மதனோ, இந்திய அரசாங்க சேவை (ஐ. ஏ. எஸ்.) பரீட்சைக்குப் படிப்பதாக அபிப்பிராயம். ஆனால், இவ்வளவு குழப்பத்தில் அவன் மனம் படிப்பில் செல்லவில்லை.

இச்சமயத்தில், காந்தி நகரில் நூதன முறையில் 'கன்னியா வித்தியாலயம்' ஒன்று ஸ்தாபிக்கப்படுவதாகவும், அதில், பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் செலவழிக்க வேண்டிய பாதி காலத்திலேயே பெண்களை பி. ஏ. பட்டம் பெறத் தகுதியுள்ளவர்களாகச் செய்துவிடுவதாகவும், அதற்காகத் தினம் இரண்டு மணி நேர சேவை செய்வதற்கு நிபுணர்கள் தேவை என்றும் ஒரு விளம்பரம் வெளிவந்தது. எப்படியோ முண்டியடித்து, மதன் அதில் ஓர் இடத்தைச் சம்பாதித்துக்கொண்டான். வருமானம் மிகச் சொற்பமாக இருந்தபோதிலும், அது பல விதங்களில் அவனுக்கு அனுகூலமாக இருந்தது.

இப்பொழுது முத்துவுக்கு, தானும் எதையாவது சம்பாதித்துக் கொடுக்கவேண்டும் என்ற ரோஸம் பிறந்தது. ஆனால் அவனை வேண்டுவார் யாரும் இல்லை. ஒரு நாள், காரியாலயங்களில் வேலை செய்யும் பலருக்கு, மத்தியான்னச் சாப்பாட்டைக் கூடையில் சுமந்துபோகும் ஒரு பெண்பிள்ளைக்கு, முத்து சகாயம் செய்ய நேர்ந்தது. அப்பொழுது அவன் அவளிடமிருந்து அதன் விவரங்களைத் தெரிந்துகொண்டான். ஐந்தாறு வீடுகளுக்கு ஓர் ஆள் தேவை என்றும், வேண்டுமானால் அவள் ஏற்பாடு செய்வதாகவும் சொன்னாள். அதன்மேல், பெரியம்மாளைக் கேட்டுச் சொல்வதாக வீட்டுக்கு வந்தான். "ஆளுக்கு ரெண்டு ரூபாய் கொடுப்பாங்களாம், அம்மா. ஆறு ஊட்டுக்கு மாதம் பன்னிரண்டு ரூபாய் கிடைக்குமாம். பத்து மணியிலே இருந்து மூணு மணிக்குள்ளே எல்லாம் முடிஞ்சிடுமாம். அப்போ, நம்ப ஊட்டு வேலையையும் பாத்துக்கலாமல்ல; அப்புறம், பகல்லே, வவுறு நிறையச் சாப்பாடு கிடைச்சிடுமாம்" என்று முத்து சொன்னபொழுது வேதவல்லி அம்மாள், மெலிந்துபோன அவன் உடலை உற்றுப் பார்த்தாள். அவனுடைய வயிறு காய்வது அவளுக்குத் தெரியாவிட்டால் வேறு

யாருக்குத் தெரியும்? அந்தச் சாப்பாட்டுக்காகவாவது அந்த வேலையை அவன் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. ஆனால், அவன் செய்வது யாருக்கும் தெரியக் கூடாதென்றும், அதுவும் 'அய்யா' வுக்குத் தெரியவே கூடா தென்றும் எச்சரித்தாள்.

வேதவல்லியம்மாள் எவ்வளவோ சாமர்த்தியமாகக் குடும்பத்தை நடத்திக்கொண்டு போனபோதிலும், அடிக்கடி எதிர்பாராத துன்பங்கள் அவளைச் சோதித்தன. கிராமத்தி லிருந்து அவளுடைய நிலத்தின் குத்தகைப் பணம் சில தினங்க ளுக்குள் வந்துவிடும் என்ற நம்பிக்கையின்மேல், அவள் தன் கையிலிருந்த கொஞ்சம் பணத்தைச் செலவழித்துவிட்டாள். ஆனால், அது வரத் தாமதமாகவே, வீட்டில் உப்புப் புளிகூட இல்லாமல் அவள் திண்டாடினாள்.

ஒரு நாள் வீட்டில் சோறு சமைக்க அரிசிகூட இல்லை. குழந்தைகள் பட்டினியாகக் கிடந்தன. வேதவல்லி அம்மாள் கைகளைப் பிசைந்தாள். மதன், உண்ணுமல் மௌனமாகத் தன் வேலைக்குப் போய்விட்டான். அமிருதவல்லி அம்மாளுக் குத் தெரிந்தது அழுகை ஒன்றே ஆதலால், ஒரு மூலையில் உட் கார்ந்துகொண்டு, அவள் வாய் திறவாமல் அழுதாள். முத்து, மடையனாய்ப் பிறந்திருந்தாலும், கடவுள் அவனுக்கு இரு மடங்கு இருதயத்தைக் கொடுத்திருந்தார். பணம், தபாலில் வரும் என்று பெரியம்மா சொல்லி யிருந்ததால், தபாற்காரன் வரும் வரை யில் தெருவுக்கும் வீட்டுக்கும் அலைந்துகொண்டே இருந்தான். ஆனால், அவன் கையை விரித்துவிட்டுப் போய்விடவே, 'பெரி யம்மா விடமிருந்து ஏதாவது யோசனை பிறக்காதா என்று அவள் முகத்தைப் பார்த்தவாறு இருந்தான். ஆனால், ஒன்றும் வராததால், சோகத்துடன் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு, அவன் தெருப் பக்கம் போனான். அப்பொழுது, தெருவழியே அவனுக்குச் சாப்பாட்டுக் கூடை சுமக்க ஏற்பாடு செய்த பெண்பிள்ளை போய்க்கொண் டிருக்கவே, முத்துவுக்குத் திடீர்

என்று ஓர் எண்ணம் வந்து, அவளைத் துரத்திக்கொண்டு ஓடினான், "தாயம்மா! தாயம்மா!" என்று.

தாயம்மாள் திரும்பி, "நீயா, முத்து? ஏன் இப்படி ஓடியாறே?" என்று கேட்டாள்.

"ரொம்பக் கஷ்டம் வந்திருச்சி!" என்று அவன் அழுதான்.

"என்ன, சங்கதியைச் சொல்லு!"

"நான்தான் அய்யா ஊட்டுச் சங்கதியெல்லாம் சொல்லியிருக்கேனே. குளந்தைங்க பட்டினியாய்க் கிடக்குது. அரிசி வாங்கியாரத் துட்டு இல்லே" என்று மறுபடியும் அழுதான்.

"அய்யோ, பாவமே!—ஆனால், நீ என்னடா செய்வே, தம்பி? அவங்களுக்குத் தெரியாதவங்களா?"

"அவங்க யாரையும் கேக்க மாட்டாங்க, தாயம்மா. நீ ஒரு உபகாரம் செய்யேன். நான் சோறு எடுக்கிற ஊட்டுலே, யாருகிட்ட யாவது, அஞ்சு ரூபா வாங்கிக்கொடேன்."

"இன்னும் ஒரு மாதம் ஆவல்லையே, அதுக்குள்ளே கொடுப்பாங்களா, தம்பி!"

"எப்படியாவது வாங்கிக் கொடு. அம்மா!" என்று முத்து கெஞ்சினான்.

"எனக்கு ஒண்ணும் தோணல்லையே! அந்த ஒரு பாவிதான் இருக்கான். ஆனால் அவன்கிட்ட உன்னைச் சிக்க வைக்க எனக்கு இஷ்டமில்லை அப்பா!"

"நீ ஒண்ணும் பயப்படாதே, தாயம்மா! நான் சிக்கிக்க மாட்டேன்."

"சரி, எளுத்து யாரை உடுது! வா; அவன் ஒரு பட்டாணிக்காரன். அஞ்சு, பத்து, கேட்டால் கொடுத்துடுவான். ஆனால் கொலைகாரப் பாவி! ரூபாயிக்கு ரெண்டணா வட்டி கேட்பான். கடனைத் திருப்பிக் கொடுக்காட்டியும், மாதம் மாதம் வட்டி கொடுக்காத போனல், கொறவளியைத் திருகிடுவான்! ஆமாம், பொல்லாதவங்க! தெருவிலே போக விடமாட்டான்! கழுத்துலே துணியைப் போட்டு இளுப்பானுங்க! எமனுங்க.

அதனாலே, எது எப்படியிருந்தாலும், நீ சட்டுப்புட்டுனு, அவன் பணத்தைத் திருப்பிக் கொடுத்திடு, என்ன?"

"கொடுத்திடறேன், தாயம்மா. நீ ஒண்ணும் பயப்படாதே!" என்று முத்து உறுதியாகச் சொன்னான்.

தாயம்மாள், அவனைப் பட்டாணியன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனாள். தாயம்மாளின்மீது இருந்த நம்பிக்கையால், அவன், "அரே, அஞ்சு என்ன, ரொம்பக் கொஞ்சமா இருக்கான். பத்து தரான், வாங்கிக்கோ. நம்கு வட்டி கட்கட் இல்லாதே கொட்டிட்" என்று, ஒரு காகிதத்தில் முத்துவின் இடது கட்டை விரல் முத்திரையை வாங்கிக்கொண்டு பத்து ரூபாயைக் கொடுத்தான்.

அதை எடுத்துக்கொண்டு, ஓட்டம் ஓட்டமாக முத்து வீட்டுக்கு வந்து, வேதவல்லியம்மாளிடம் கொடுத்தான். ஆச்சரியப்பட்டுப் போன வேதவல்லியம்மாளிடம், தாயம்மாள் சேகரித்துக் கொடுத்ததாகச் சொல்லிவிட்டு, அவன் சாப்பாட்டுக் கூடை சுமப்பதற்குப் போய்விட்டான்.

முத்து, எவ்வளவு பேதையாக இருந்தபோதிலும், தான் தாயம்மாள் மூலம் பட்டாணியனிடம் கடன் வாங்கினதை, முதலிலிருந்தே வேதவல்லி அம்மாளிடம் சொல்லிக்கொள்ள அவனுக்கு இஷ்டமில்லை. சொன்னால் அவள் மறுத்துவிடுவாள்; மறுத்தால் குழந்தைகளுக்குச் சாப்பாடு இல்லாமல் போய் விடுமே என்ற பயம் அவனுக்கு. ஆனால், அவன் செய்த உதவி, வேதவல்லி அம்மாளின் இதயத்தில் ஆணி அடித்தாற்போல் பதிந்துவிட்டது. பிற்காலத்தில் அவனுக்கு ஏதேதோ செய்ய வேண்டுமென்று அவள் திட்டம் போட்டுக்கொண்டாள். அவன் எவ்விதப் பிரதி உபகாரத்தையும் கனவில்கூட எதிர்பார்க்கவில்லை என்று நினைத்தபொழுது, அவளுக்கு அவன்மீது இருந்த விசுவாசம் மேலும் பன்மடங்கு அதிகரித்தது. அவன் கொடுத்த பத்து ரூபாயைப் பத்தாயிரம் பவுனுக்கும் மேலாகக் கருதினாள். 'அந்த அன்புக்கு விலையுண்டா! சொன்னால் தெரிஞ்சுக்கிற பிள்ளையா அது!' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள்.

அவளை அறியாமல் அவளுக்கு ஓர் உற்சாகம் உண்டாயிற்று. பழைய வாழ்வைக் கடத்துவதுபோல் பறந்து, பறந்து வேலை செய்ததோடு, அவளுடைய குரலிலும் ஒரு செல்வாக்குத் தோரணை கிளம்பியது. அவளுடைய மனப் பூரிப்பைக் கண்டு, அடங்கி ஒடுங்கிக் கிடந்த அமிருதவல்லி அம்மாளுக்குக்கூடப் புன்முறுவல் வந்தது. "இன்றைக்கு என்ன விசேஷம், அக்கா?" என்று கேட்டாள்.

"எல்லாம் நல்ல விசேஷந்தான். கடவுள், அவர் கிருபை இருக்கிறது என்று சொல்லிவிட்டார்! பிரார்த்தனை செய்தது வீணாகப் போகுமா?"

'ஊம்; நீ ஒரு பயித்தியம்!"

"நானா பயித்தியம்! நம்பிக்கை இல்லாதவர்கள் தான் பயித்தியம். நம்பினவர்களைக் கடவுள் எப்போதும் கைவிட மாட்டார்! உனக்கே தெரியும், பார்! சரி, நானும் முத்துவும் கோயிலுக்குப் போய் வருகிறோம். முத்து, உன் கையாலே பிள்ளையாருக்கு இன்னிக்கி ஒரு சூறைத் தேங்காய் உடை!"

"தோப்புக் கண்டமும் போடுறேன், அம்மா!"

"ஊம், போடு!" என்று முத்துவுடன் வேதவல்லி அம்மாள் கோவிலுக்குச் சென்றாள்.

கோயிலிலிருந்து வீட்டுக்குத் திரும்பியபொழுது, வீட்டுக்குள் ஒரே கூச்சலாக இருப்பதைக் கேட்டு, வேதவல்லி அம்மாள் திடுக்கிட்டாள். ஆனால் உள்ளே நுழைந்ததும், 'நீ முந்தி, நான் முந்தி' என்று போட்டி போட்டுக்கொண்டு, குழந்தைகள் ஓடி வந்து, கிருஷ்ணனுக்கு உத்தியோகம் கிடைத்து விட்டதைத் தெரிவித்தன. அஸ்ஸாம் மாகாணத்திலிருந்த ஒரு நண்பரின் உதவியால், கிருஷ்ணன் ஷில்லாங்கு நகரத்திலிருந்த ஒரு ப்ரைவேட் கல்லூரிக்குப் பிரின்ஸிபாலாக நியமிக்கப்பட்டார். ஆயிரம் ரூபாய் சம்பளத்தோடு, வசிப்பதற்குச் சகல சௌகரியங்களுடன் கூடிய ஒரு பங்களாவும் கொடுக்கப் பட்டது.

"அமிருதம், நான் உனக்கு என்ன சொன்னேன்! கோயிலுக்குப் போகிறதுக்கு முந்தி? எல்லாத்துக்கும் நம்பிக்கைதான் காரணம், இப்பொழுதாவது தெரிஞ்சுக்கோ."

"எனக்கு மட்டும் நம்பிக்கை இல்லையா, அக்கா? ஆனாலும், இவ்வளவு சோதனையா !"

"போனதை விட்டுவிடு. இனிமேல் எல்லாம் எப்படிக் கைகூடுது, பார். என்னைக் கேட்டால் இதெல்லாம், தினம் முத்து கடவுளுக்கு வேண்டிக்கிறதன் பலன்தான்!"

"தோப்புக்கண்டம் கூடப் போடறேன், பெரியம்மா."

குழந்தைகள் சிரித்தார்கள்.

"இதிலே சிரிப்பென்னடா ?" என்று கிருஷ்ணன் குறுக்கிட்டார். "அவன் கபடு சூது இல்லாதவன். அவனிடத்திலேயே கடவுள் நிறைந்திருக்கிறார். அவனையும் அழைத்துக் கொண்டு போகட்டுமா அமிருதம் ?"

"ஒண்ணும் வேண்டாம். நீங்கள் போய் ஒரு விதமாகக் குதிர்பாடு ஆகட்டும். அவன் போனால், மதன் படிப்புக்கு இடைஞ்சல் ஏற்படும்."

"அதுவும் உண்மைதான். அப்பா, மதனு, மனசிலே ஒரு கஷ்டத்தையும் வைத்துக்கொள்ளாதே. வழக்கம்போல உன் படிப்பைக் கவனி. பெரியம்மா சொல்வதுபோல், கடவுள் இனி நல்ல வழி காட்டுவார் என்று எனக்கும் தோன்றுகிறது. அப்புறம், புறப்பட்டுப் போகச் செலவுக்குத்தான் யோசிக்கணும்!"

"அதுக்குத்தான், கிராமத்துலே நெல்லு வித்த பணம் எனக்கு வருதே. நாளைக்கோ நாளையன்னிக்கோ வந்தாகணும்!" என்றாள் வேதவல்லி அம்மாள்.

"பேஷ்! இதுவும் நல்ல காலந்தான். இனிமேல் உனக்கும் ஒன்றும் குறைவில்லை, அமிருதம். என்ன, அப்படிக் கூரையைப் பார்க்கிறயே ! போன பங்களாவைவிட நாலு பங்கு பெரிய இடத்துலே நீ குடியிருக்கப் போகிறாய். வீடு யாருடை

யதாக இருந்தால் என்ன? அநுபவிக்கிறது நாம்தானே!'' என்று சொல்லி அவர் சிரித்தார்.

அமிருதம்மாளாலும் புன்முறுவலை அடக்க முடியவில்லை. "உங்களைக் கடவுளாலேகூடத் தண்டிக்க முடியாது!'' என்றாள்.

"அடி, பயித்தியக்காரி! கடவுளுக்குத் தன் குழந்தைகள் மீது எப்போதும் அன்புதான்; வெறுப்பு இல்லை. அதை உன்னாலே தெரிந்துகொள்ள முடியவில்லையே!'' என்று மனைவிக்குப் புத்தி சொல்லிவிட்டு, அவர் தம் வேலையைக் கவனிக்கச் சென்றார்.

ஆசிரியர் கிருஷ்ணனுக்கு உத்தியோகம் கிடைத்ததன் மூலம் சூழ்நிலை மாறிவிடவே, வேதவல்லி அம்மாளுக்கு, தான் முத்துவுக்குச் சோற்றுக்கூடை சுமக்க அநுமதி கொடுத்தது, குடும்பத்துக்கும் அவனுக்கும் செய்த மகா பாதகமாகத் தோன்றியது. உடனே, அவனைத் தனியாக அழைத்து, இனி அவன் அந்த வேலை செய்ய முடியாது என்பதைத் தாயம்மாளிடம் ரகசியமாகத் தெரிவிக்கச் செய்து, அவள் முத்துவை அவ் வேலையிலிருந்து விடுவித்துவிட்டாள். அதை நினைத்த போதே, அவனுக்கு மயிர்க்குச்செறிந்தது; ஆனால், யாருக்கும் தெரியாமல் மூன்று நாள் வாழ்வோடு முடிந்ததே என்ற ஒரு திருப்தி.

ஷில்லாங்கிலிருந்து, கிருஷ்ணன் ஊரையும் தம் இருப்பிடத்தையும் பற்றி வர்ணித்தவாறே இருந்தார். அவைகளைப் படிக்கப் படிக்க, எல்லோருக்கும் அங்கே போய்வர வேண்டும் என்ற ஆசை பிறந்தது. குடும்பத்தின் சூழ்நிலை அநேகமாகப் பழைய ஸ்தானத்துக்கு வந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். அமிருதம்மாள்கூட வெளியில் தலை காட்ட ஆரம்பித்தாள். எல்லோரையும்விட முத்துவால்தான் சந்தோஷத்தைத் தாங்க முடியவில்லை. இந்தப் புரட்சியில், சோற்றுக்கூடை தூக்கினதற்குத் தனக்குக் கிடைக்கவேண்டிய கூலியைக்கூட

அவன் மறந்துவிட்டான். அதோடு, பட்டாணியனிடம் வாங்கின பத்து ரூபாய்க் கடனையும் அடியோடு மறந்துவிட்டான்.

ஒரு நாள் மாலை, சுமார் ஐந்து மணிக்கு, முத்து, கடைத் தெருவுக்குப் போக நேர்ந்தது. அப்பொழுது, தனக்குப் பத்து ரூபாய் கடன் கொடுத்த பட்டாணியன் ஒரு பால்காரனோடு வாக்குவாதம் செய்துகொண் டிருப்பதைக் கண்டான். முத்துவுக்குத் திகில் எடுத்தது. அவன் சங்கதியை மறந்ததற்கு வருந்தினான். முதலில் அவ்விடத்தை விட்டு, அவன் கண்ணில் படாமல் ஓட முயன்றான். ஆனால், அதற்குள் அவன் முத்துவைப் பார்த்துவிட்டான். அவ்வளவுதான்; உரத்துக் கூவிக்கொண்டே ஓடி வந்து, முத்துவின் கையைப் பிடித்துக்கொண்டான். முத்துவுக்கு நடுக்கம் எடுத்துக்கொண்டது. அவன் தன் கையை ஒடித்துவிடுவான்போல் இருந்தது. "நமக்கு மோசம் பண்றான்! பேமான்!" என்று கையை மற்றொரு தடவை முறுக்கினான். "மோசமில்லை; மறந்துட்டேன், மறந்துட்டேன்! பெரியம்மாவைக் கேட்டுக் கொடுத்திடறேன்! கொடுத்துடறேன்!" என்று, வலி பொறுக்க மாட்டாமல் முத்து கதறினான்.

"உனக்கு எவ்வளவு அய்யா தரணும்!" என்றான் பக்கத்தில் இருந்தவன் கோபத்தோடு.

"பத்து; அப்றம் வட்டி இருக்கான்."

"பத்து ரூவாயிக்கு அவனை விலைக்கு வாங்கிட்டயோ!"

"இந்தப் பாவிங்களை ஒளிப்பார் யாரும் இல்லை!" என்றான் மற்றொருவன்.

"அரே, உன் வேலைப் பார்! நீ இப்போ பணம் கொடுக்கிறது இல்லே; உடமாட்டான்!" என்று அவன் முத்துவின் சட்டையைக் கழுத்தோரமாகப் பிடித்துக்கொண்டு உலுக்கினான்.

'சாரதா கன்னியா வித்தியாலய'த்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த மதன் முத்துவின் நிலைமையைக் கண்டான்; வேக வேகமாக ஓடி வந்து, பட்டாணியனின் கையைப் பிடித்

துத் தள்ளினான். அப்பொழுது தற்செயலாகப் பட்டாணியனின் கொம்பே அவன் கண்ணைப் பலமாகக் குத்திவிட்டது. பட்டாணியன் வலி பொறுக்க மாட்டாமல் கூவித் திட்டினான்.

அவன் செய்கைகளை வெறுப்புடன் கவனித்துக்கொண்டிருந்த பாமர ஜனங்கள், ஆளுக்கொரு அடியாய்ப் போட்டார்கள். பட்டாணியன் கீழே உட்கார்ந்துவிட்டான். கும்பலில் பெருந்தகையாக இருந்தவர்கள் சிலர், அவனுக்கு மேலும் இமிசை இல்லாமல், ஜனங்களை விரட்டிக் காத்தார்கள்.

இதற்குள் ஒரு போலீஸ்காரனும் வரவே, கும்பல் கலைந்துவிட்டது. இப்பொழுது பட்டாணியன், மதன் தன் கண்ணைக் குத்தி அடித்துத் தள்ளியதாக முறையிட்டான். அவனைப் பாதுகாத்தவர்களே அது பொய் என்று ஆக்ஷேபித்தார்கள். அதன்மேல், போலீஸ்காரன், மதன், முத்து, பட்டாணியன், நடந்ததை நடந்தவாறு சொல்லத் தயாராயிருந்த இரண்டு சாட்சிகள் எல்லோருமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார்கள்.

மதன் இன்னார் என்று தெரிந்ததும், அங்கிருந்த போலீஸ் அதிகாரி, மதனிடம் வெகு மரியாதையாக நடந்துகொண்டார்.

"உங்கள் தகப்பனார் எனக்கு ஆசிரியராக இருந்தார், ஸார். அவரைப்போன்ற சத்தியவானை நான் கண்டதே இல்லை!" என்று கூறினார்.

"நான் சொல்வதிலும் ஒன்றும் பொய் இல்லை, ஸார். இவ்விருவர்களும் யாரோ, எனக்குத் தெரியவே தெரியாது. அவர்களையே கேளுங்கள்!" என்றான் மதன்.

ஒவ்வொருவருடைய வாக்கு மூலத்தையும் வாங்கிக் கொண்ட பிறகு, போலீஸ் அதிகாரி பட்டாணியனிடம் சொன்னார்: "ஐயா, மதன் உங்களை அடிக்கவில்லை என்று ருஜு ஆகிவிட்டது. ஆகையினாலே நாங்களாக அவர்மீது ஒரு வழக்கும் எடுக்க முடியாது. வேண்டுமானால் நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். கோர்ட்டு இருக்கிறது; வக்கீல்கள் இருக்கிறார்கள். சரி, போய் வாருங்கள்."

மதனும் முத்துவும் ஸ்டேஷனுக்கு வெளியே வந்துவிட்டார்கள். பட்டாணியன் மாத்திரம் ஏதோ தயங்கித் தயங்கி நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது, எப்படியோ சமாசாரத்தைத் தெரிந்துகொண்டு, புண்ணியகோடி அங்கே காரில் வந்து இறங்கினுர். பிறகு மிகப் பரிவுடன், "உங்களுக்கு நல்ல அடியா?" என்று அவர் பட்டாணியனைக் கேட்டார்.

தான் எப்பவும் அறியாத இக் கருணையைக் கண்டதும், பட்டாணியனுக்குக் குரல் தழுதழுத்தது. "ரொம்ப ரொம்ப!" என்று தன் உடம்பைத் தடவிக் கொடுத்துக்கொண்டான்.

"நான் டாக்டரை மருந்து கொடுக்கச் சொல்றேன், வாங்க" என்று அவர் அவனைத் தமது காரில் ஏற்றிக்கொண்டு போய்விட்டார்.

மதன் இந்த நாடகத்தை வியப்புடன் பார்த்துக்கொண்டே நின்ருன்.

## 7

அன்று இரவு வெகு நேரம் வரையில் புண்ணியகோடி வீட்டுக்குத் திரும்பவில்லை. அவருடைய மனைவி, காத்துக் காத்து, சாப்பிடாமலே படுத்துக்கொண்டாள். ஆனுல் தூக்கம் வரவில்லை. பிரேமா, வழக்கம்போல் ஒன்பது மணிக்கே தூங்கிவிட்டாள். நீலா மாத்திரம் ஒரு புஸ்தகத்தைப் படித்துக்கொண்டே இருந்தாள். தன் தகப்பனுர் இன்னும் வராதது அவளுக்கும் வேதனையாக இருந்தது.

"என்ன அம்மா, மணி பன்னிரண்டு ஆகப் போகுதே!" என்ருள் நீலா.

"அதுதான் அம்மா, எனக்கும் கவலையாக இருக்கிறது. ராத்திரி எட்டு மணிக்கு அவருக்குச் சாப்பாடு முடிந்தாகணுமே! என்னமோ தெரியவில்லையே!" என்று எழுந்து உட்கார்ந்துகொண்டாள்.

"எங்கே போவதாகச் சொன்னுர்?"

"அந்த வழக்கந்தான் கிடையாதே! இருந்தால் நான் ஏன் இப்படி இருக்கிறேன்? வேலைக்காரனைப் போய்ப் பார்க்கச் சொல்லலாமா?"

"எங்கே போய்ப் பார்க்கிறது, அம்மா?" என்று நீலா சொல்லிக்கொண் டிருக்கும்போதே, அவளுக்குக் கார் வரும் சப்தம் கேட்டது.

"வந்திட்டார், வந்திட்டார்!" என்று சந்தோஷத்தோடு தெரிவித்தாள். புண்ணியகோடி, டிரைவரை அதிகாலையிலேயே வரச் சொல்லிவிட்டு, தமக்கு ஆகாரம் தேவை இல்லை என்றும், தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது என்றும் சொல்லி உறங்கப் போய்விட்டார்.

**கா**லையில், புண்ணியகோடி எல்லோருக்கும் முந்தி எழுந்திருந்து ஸ்நானபானங்களை முடித்துக்கொண்டு, காரில் ஏறிக் கொண்டு போய்விட்டார். பிறகு ஒன்பதரை மணிக்கு, அவர் திரும்பி வந்தபொழுது, அவர் முகத்தில், வெகு நாட்களாக மறைந்திருந்த உற்சாகத்தை நீலா கண்டாள். கல்லூரிக்குப் புறப்படப் புஸ்தகங்களை அடுக்கிக்கொண் டிருந்தவளுக்குத் தன் தகப்பனாரின் மறுமலர்ச்சி ஆனந்தத்தைக் கொடுத்தது.

"நீலா, அம்மாவைக் கூப்பிடு" என்று அவர் நாற்காலியில் சாய்ந்துகொண்டார். அவர் மனைவி சாரதாம்பாள், பூனைபோல் உள்ளிருந்து வந்து நின்றாள். "ஊம்-அந்தச் சோடா வண்டிக் காரன் வகையறாகிட்ட தென்னந்தோப்பை வாங்கினோம் பார்; அதுலே பெரிய ரோடு போடப் போறாங்களாம். அதை எப் படியோ தெரிந்துகொண்டு, என்னை ஏழெட்டுப் பேர், 'மனை யாய்க் கொடுப்பீங்களா?'ன்னு கேக்க வந்துட்டாங்க! அப்புறம் ஒரு கன்டிராக்ட்டுக்காரன் 'ஒருமிக்கக் கொடுத்திடுங்க, ஒரு லட்சம் தந்திடுறேன்'ன்னு சொல்றான். நாம் வாங்கினது எவ் வளவு தெரியுமல்ல? ஐயாயிரந்தான்!" என்றார்.

"ஊஹூம்!" என்றாள் சாரதாம்பாள், ஊக்கமற்ற குரலில்.

புண்ணியகோடிக்குச் சலிப்பு உண்டாயிற்று. "பண விஷயமே உனக்குத் தெரியவில்லையே! நீதான் இப்படி இருக்கிறாய்

என்றால், நீலாவுக்கும் அக்கறை இல்லை. ஏட்டுச் சுரைக்காயாய் இருந்தால் போதாது; நீலா......''என்று கசந்து கொண்டார்.

''எனக்குத் தெரியுது, நாயினா!''

''என்னத்தைத் தெரியுதோ! மொத்தத்தில் இன்னிக்கி நல்ல நாள் எனக்கு. இது இப்படி ஆயிட்டுதா? அந்தப் பயல் மதனும் சரியாய் அகப்பட்டுக்கொண்டான்!''

''அதென்ன; நாயினா?'' என்றாள் நீலா. புஸ்தகங்களைச் சரேலென்று கீழே வைத்துவிட்டு. சாரதாம்பாளும் உற்றுக் கவனித்தாள்.

''அவங்க வீட்டுலே வேலையாளாக இருக்கிறானே ஒரு மடசாம்பிராணி! முத்து; அவன் ஒரு பட்டாணிக்காரனண்டை பத்து ரூபாய் கடன் வாங்கினானாம். வாங்கி, இவங்களுக்குத் தான் கொடுத்திருக்கான். வாங்கினவன், வட்டியையும் கொடுக்காமல் முதலையும் கொடுக்காமல் ஒளிந்துகொண்டு திரிந்தால் பட்டாணிக்காரன் சும்மா விடுவானா? அவன் கழுத்துலே துணியைப் போட்டு இழுத்திருக்கான். அப்போ, மதன் பட்டாணிக்காரனைக் கண்ணுகிண்ணெல்லாம் பேந்து போகும்படி அடித்துவிட்டான்.''

''அவ்வளவு தூரத்துக்குப் போகிற பையன் இல்லையே, அவன்?'' என்றாள் சாரதாம்பாள்.

''ஆமாம், உனக்கு ரொம்பத் தெரியும்!''

''அது இல்லை, நாயினா! அவ்வளவு கோபம் வரும்படி அந்தப் பட்டாணிக்காரன் என்ன செய்தானோ?'' என்றாள் நீலா.

''ஆமாம், செய்தான், பானையும் சட்டியும்! அது திமிரு பிடிச்ச கழுதை. அப்பனுக்கு மறுபடியும் உத்தியோகம் கிடைச்சுட்டுது. தானும் ஏதோ கழட்டிடப் போறோம்னு கர்வம் தலைக்கு ஏறிட்டுது. அவன் அப்பன் மகன்தானே அவன்? அது எப்படியோ ஒழியட்டும்; என் கையிலே சரியாக மாட்டிக் கொண்டான்.''

''உங்களை என்ன நாயினா செய்தான்?''

"அவன் செய்யாவிட்டால், அவன் அப்பன் செய்தான். மாதா பிதா செய்தது மக்களுக்கு. என் ஒரு குழந்தையைக் கண் காணுத சீமைக்கு ஓடும்படி செய்தானே, பாவி! அதுக்குப் பழிக்குப் பழி வாங்காதே நான் விடப்போறதில்லே! அந்த மதன் பயலே ஜெயிலுக்கு அனுப்பாத போனுல், என் பெயர் புண்ணிய கோடி இல்லே!" என்று அவர் தம் மாரைத் தட்டிக்கொண் டார்.

**சா**ரதாம்பாளும் நீலாவும் பிரமித்துப் போய்விட்டார்கள். நீலாவின் முகம் கோவைப்பழம்போல் சிவந்தது. சாரதாம் பாள் நிதானத்தைக் கைவிடாமல் மெள்ளக் கேட்டாள். "நீங்கள் மதனை ஏன் ஜெயிலுக்கு அனுப்ப வேண்டும்? அந்தக் குடும்பம் பட்ட கஷ்டம் போதாதா? இதோ பாருங்க, நடந்தது நடந்து போயிட்டுது. இனிமேல் அந்தக் குடும்பத்து வழிக்குப் போகாதீங்க. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளு கிறேன்."

"ஆமாம், ரொம்ப நியாயத்தைக் கண்டுட்டே! அவனுக்கு ஒருத்தன் போனுல், இன்னும் நாலு பேர் இருக்கிருர்கள். நம்ம சங்கதி தெரியல்லேயே உனக்கு. மூளை கெட்டவளே! என் வயிறு எப்படிக் கொதிக்குதுன்னு கடவுளுக்கு அல்ல தெரி யும்!" என்று சொல்லும்போதே அவருக்குக் கண்ணீர் ததும்பி விட்டது. "காலேஜுலே சேர்க்கக் கூடாதுன்னு அல்ல, என் குழந்தையை ஓட அடித்தான்? அவன் மகன் ஜெயிலுக்குப் போய்த் தவிக்கிறபோதுதான் அந்தத் துரோகிக்கு அதன் அருமை தெரியும்! நான் விடப்போகிறதில்லே. அந்தப் பட்டா ணிக் காரனுக்கு வேண்டிய உதவி செய்துவிட்டேன். அந்தப் படுபாவியின் மகன் ஜெயிலுக்குப் போவது தவருது!" என்று அவர் தம் கையால் மேஜையின் மீது குத்தினுர்.

"வேண்டாம், நாயினு!" என்று நீலா அழ ஆரம்பித்தாள். "கிருஷ்ணன் மாமன் வேணுமின்னு செய்யவில்லே, நாயினு! நேத்து வந்த கடிதத்துலேகூட அண்ணன் அவரை எவ்வ ளவோ புகழ்ந்து எழுதி யிருக்கார். கண்ட போதெல்லாம் அண்

ணை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய், எவ்வளவோ அன்பாய் இருக்காராமே?'' என்ருள்.

''ஆமாம்; அவனுக்கு அன்பு வேறேயா! திருட்டுப் பயல்! அவனுக்குப் பரிந்துகொண்டு, தாயும் மகளும் வந்துட்டீங்களோ! ஒன்றும் பலிக்காது. நான் எடுத்த காரியத்தை முடித்தே தீருவேன்!''

''நீங்கள் சொல்லும்போதே, எனக்கு என்னமோ செய்யுதே, நாயிஞ! இனிமேல், மதனுக்குக் கஷ்டத்தை உண்டு பண்ணிஞல் என்ருல் பொறுக்க முடியாது! நான் வீட்டுலேயே இருக்க மாட்டேன்!'' என்று நீலா விம்மத் தொடங்கிஞள்.

''என்ன சொன்னே? என்ன துணிவு! துரோகி! துரோகி!! நீ வீட்டுலேயே இருக்க மாட்டியா! ஓடிப் போ! அய்யோ! கடவுளே! என் குழந்தைகளே எனக்குச் சத்துருக்களா!''

''நான் ஒன்றும் சத்துருவில்லே. எனக்கு வயது பதினெட்டு ஆயிட்டுது: கொஞ்சம் படித்திருக்கிறேன். எது நியாயம், எது அநியாயம் என்று எனக்குத் தெரியாமல் போகுமா?''

''மூடு வாயை! வயதானவள் ஆயிற்றே என்று பார்க்கிறேன். இல்லாவிட்டால்...உம்! உன்னைச் சித்திரவதை செய்தால்கூடப் பாவமில்லே! என் விரோதிகளுக்குப் பரிந்துகொண்டு வருகிருயா! கடமையை மறந்த கழுதே! பெத்த தகப்பன் ஆச்சுதேன்னு ஈவு இரக்கங்கூட இல்லேயே! திண்டாடித் திண்டாடி, நான் எதற்காகப் பணம் சம்பாதிக்கிறேன்? உங்கள் இழவுக்கு அழுவதற்குத்தானே...!''

''நான் உங்களை அழச் சொல்ல வில்லே!''

''என்ன சொன்ஞய்! துரோகி! நன்றி கெட்ட நாயே! உன் மகள் யோக்யதையைப் பார்த்தியா?'' என்று அவர் தமது மனைவியைப் பார்த்துக் கூச்சல் போட்டார்.

''என் யோக்கியதை எந்த விதத்தில் கெட்டுப் போய் விட்டது!'' என்று நீலா சொல்லிக்கொண் டிருக்கும்பொழுது; ''அய்யோ! சும்மா இரடி! சும்மா இரடி!'' என்று அவள் தாயார் அவள் வாயை மூட முயன்ருள்.

"என்னுத்தைச் சும்மா இருக்கிறது அம்மா! நான் பிறந்ததி லிருந்து, 'மதன்தான் உன் புருஷன்; மதனைத்தான் நீ கட்டிக் கப் போறே!'ன்னு சொல்லிவிட்டு, இப்போ 'அவனைக் கொன் னுடறேன்! ஜெயிலுலே வச்சிடறேன்'னு சொன்னுல், எனக்கு எப்படி அம்மா இருக்கும்! நான் பால் குடிக்கிற குழந்தையா! வயது பதினெட்டு ஆயிட்டுதே!"

"வெட்கம் கெட்ட கழுதை!"

"நானு வெட்கம் கெட்ட கழுதை?" என்று சொல்லிக் கொண்டே நீலா 'ஹோ!'வென்று கதற ஆரம்பித்துவிட்டாள். இது வரையிலும் கண்ணைக் கசக்கிக்கொண் டிருந்த பிரேமா வும் உறக்க அழத் தொடங்கிவிட்டாள்.

அழுகையைச் சமாளித்துக்கொண்டு நீலா, தைரியமாக, கம்பீரத்தோடு, தன் தகப்பனைப் பார்த்துச் சொன்னுள்; "மத னைத் தவிர வேறு யாரையும் நான் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன். இது சத்தியம்!"

"என்ன, என்ன! நன்றி கெட்ட நாயே! இதற்கா உனக்கு இவ்வளவு பணத்தை அழுதேன்!"

"பயப்படாதீங்க! நீங்கள் அழுத பணத்தையெல்லாம் சம் பாதித்துக் கொடுத்திடறேன்."

"அய்யோ நீலா!—" என்று சாரதாம்பாள் குறுக்கிட்டாள்.

"துரோகி! துரோகி! என் கண்முன் நிற்காதே! ஓடிப் போ! எங்கேயாவது தொலைந்து போ!"

"இதோ போகிறேன். இந்த வீட்டில் யார்தான் இருப் பார்கள்!" என்று சரேலென்று கிளம்பி, நீலா வெளியே போய் விட்டாள்.

அவள் தாயாரால் அவளைத் தடுக்க முடியவில்லை! பிறகு அழுகையோடு அழுகையாக எப்படியாவது நீலாவை அழைத் துக்கொண்டு வரும்படி அவள் பின்னே பிரேமாவை அனுப்பி ளுள். பிரேமா அவளைப் பிடிப்பதற்குள், நீலா தெரு முனை திரும்பிவிட்டாள்.

"வா, நீலா. அத்தை ரொம்ப அழுறாங்க. நீ வராத போனல் சாப்பிடாமல் உயிரை விட்டுடுவாங்களாம்! வாயேன்!" என்று பிரேமா நீலாவின் கைகளைப் பிடித்து இழுத்தாள்.

"அத்தையைப் பயப்பட வேண்டாமின்னு சொல்லு, அம்மா. நான் எங்கும் போகல்லே. தபாலாபீசுக்குப் போய், மாமாவைச் வரச் சொல்லித் தந்தி கொடுக்கிறேன். ஐம்பது மைல்தானே; மாமா சாயங்காலமே வந்திடுவார். முந்தி ஒரு தடவை வரவில்லையா? அப்புறம் நீயும் நானும் ஹாஸ்டலிலே சேர்ந்திடலாம். எங்கம்மாவும் உங்க கிராமத்துலே கொஞ்ச காலம் இருக்கட்டும். அப்போதான் எங்க நாயினவுக்கு அருமை தெரியும்."

"சரி. நானும் தபாலாபீசுக்கு வரேன். நாயினவுக்குத் தந்தி கொடுத்துட்டு நம்ப ரெண்டு பேரும் சேர்ந்து வீட்டுக்குத் திரும்பிப் போகலாம்."

"நான் இப்போ வீட்டுக்கு வரக்கூடாது, பிரேமா! நான் எங்கும் போகவில்லே. நம்ப லலிதா வீட்டிலேயேதான் இருக்கப் போகிறேன்."

"சித்திரம் எழுதுறுளே, அந்த லலிதாவா?"

"அவளேதான். நீ அம்மா கிட்டே, 'பயப்பட வேண்டாம்' இன்னு சொல்லு. சாயங்காலத்துக்குள்ளே, மாமா கட்டாயம் வந்திடுவார். வந்ததும், அவரை இட்டுக்கொண்டு நீ லலிதா வீட்டுக்கு வா "

"சரி, அத்தானுக்கு அனுப்ப மாம்பழம் கொண்டு வரும் படி அதுலே எழுது, நீலா. நாயின ஒண்ணும் சொல்ல மாட்டாங்க."

"அய்யோ! தந்தியிலே அதெல்லாம் எழுத முடியாது, பிரேமா? அப்புறம் பார்த்துக்கலாம், அம்மா. நீ போய் வா" என்று அவளை நீலா நல்ல தனமாக வீட்டுக்குப் போகச் செய்தாள். பிறகு, தபாலாபீஸில் தந்தியைக் கொடுத்து விட்டு, தன் தோழி லலிதாவின் வீட்டை நோக்கிச் சென்றாள்.

போகும் வழியில்தான் 'ஞானோதயம்' என்ற சினிமா ஸ்டூடியோ இருந்தது. அது தோட்டத்தோடு கூடிய ஒரு விசாலமான பங்களா. அதனுள்ளிருந்து மதன் வருவதைக் கண்டதும் நீலா பிரமித்துப் போனாள். சில காலமாக மதனைப் பார்க்க அவளுக்கு அவகாசம் இல்லாமல் போய்விட்டது.

இருவரும் ஒருவரை ஒருவர், கண் கொட்டாமல் பார்த்த வாறு நின்றார்கள். பிறகு, "கோபமா?" என்று நீலா அமைதியைக் கலைத்தாள்.

மதன் சிரித்தான். "எதற்காகக் கோபம்? உன் நாயினா சங்கதி எனக்குத் தெரியாதா?"

அவளுடைய தகப்பனாரின் பெயர் எடுக்கப்பட்டதும், அவள் முகம் சுண்டியது. "ஆமாம். இந்த ஸ்டூடியோவில் உனக்கு என்ன வேலை?" என்று கேட்டாள்.

மதன் மறுபடியும் சிரித்தான். "எல்லோரும் இருபதினாயிரம், முப்பதினாயிரம் நடிப்பால் சம்பாதிக்கிறாங்களே, எனக்கு ஒரு அஞ்சு பத்தாவது கிடைக்காதான்னு பார்த்தேன்...!"

நீலா மூக்கின்மீது விரலை வைத்தாள்.

"ஆச்சரியம் என்ன? அப்பாவுக்கு உத்தியோகம் ஆய்விட்டால், எங்கள் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்துவிடுமா? இதுலே என்ன தப்பு, நீலா?" என்று கேட்டான் மதன்.

"ஏதாவது கிடைத்ததா?"

மதனுக்குச் சிரிப்பு வந்தது. "ஆனர்ஸ், கீனர்ஸ் எல்லாம் அவர்களுக்குக் கணக்கில்லையாம். நடித்து, அநுபவம் இருக்க வேண்டுமாம். இல்லாவிட்டால் என்னைப் பல பரீட்சைகள் செய்து பார்க்க வேண்டுமாம். அதற்கு இப்பொழுது நேரம் இல்லையாம். அதோடு, இன்னும் ஒரு வருஷத்துக்கு இப்படிப் பட்ட ஆண்கள் தேவையே இல்லையாம்! எப்படி?"

"இதுவும் நல்லதுக்குத்தான்."

"நல்லதோ, கெட்டதோ? ஆமாம், நீ இந்தப் பக்கம் எங்கே போகிறாய்?"

"நாயினா என்னை வீட்டை விட்டுத் துரத்திவிட்டார்!"

"என்னது!"

"நிஜமாகத்தான். இங்கே தெருவில் நிற்பானேன்? பேசிக் கொண்டே போகலாம், வா" என்று நடந்துகொண்டே, விஷயங்களை யெல்லாம் அவள் அவனிடம் சொன்னாள்.

"உன் நாயினாவுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதா? எங்களோடு நிற்காமல், உன்னையும் நாசமாக்கப் பார்க்கிறாரே!" என்றான் மதன்.

"நாசமென்ன வந்தது? நான் சம்பாதித்துப் பிழைக்க மாட்டேனா? என் படிப்புக்குக் குறை ஏற்படாது, நீ பயப் படாதே?"

மதன் ஒரு கணம் மௌனமாயிருந்து, "நீலா, நீ லலிதா வீட்டுக்குப் போக வேண்டாம். எங்கள் வீட்டுக்கு வா!" என்று கெஞ்சி அழைத்தான்.

அவள் மறுப்பதுபோல் தலையை அசைத்தாள்.

"ஏன் வரக் கூடாது? எங்கள்மேல் வருத்தமா?—ஆனால், ஆனால்—பின்னே இருக்காதா? என்னாலேதானே உனக்கு இவ்வளவு கஷ்டமும்!" என்று தழுதழுத்த குரலில் அவன் சொல்லி முடிப்பதற்குள் நீலா, சரேலென்று தலை யெடுத்து அவனைப் பார்த்தாள். கண்களில் நீர் ததும்பி ஓடியது. அவள் உள்ளத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் மதன் கண்டான். அவன் பேசவில்லை. ஆனால், அவன் விழிகளில் பிரதிபலித்த அன்பையும் நன்றியையும் நீலா அறியாமல் போகவில்லை; வாய் திறவாமல் மதனுடன் அவன் வீட்டுக்குச் சென்றாள்.

நீலாவின் வருகை மதன் வீட்டார் அனைவருக்கும் ஆச்சரியத்தோடு, பேரானந்தத்தையும் உண்டாக்கியது. குழந்தைகள் சூழ்ந்துகொண்டனர். முத்து எதையோ வாங்கி வரக் கடைக்கு ஓடினான். வேதவல்லியம்மாள் சமையல் அறையில் ஒரு காலும், நீலா இருக்குமிடத்தில் ஒரு காலுமாகத் திரிந்தாள். அமிருதவல்லியம்மாள், அன்புடன் தைலத்தைத் தடவி, தலை வாரினாள். வெகு நாளாகப் பிரிந்துபோன குழந்தை வீட்

டுக்குத் திரும்பி வந்ததுபோல், குடும்பம் முழுவதும் குதூகலப் பட்டது.

மெள்ள, மதன் விஷயங்களைத் தெரிவிக்கவே, அமிருத வல்லியம்மாளும் வேதவல்லியம்மாளும் வருத்தப்பட்டார்கள். ஆனால், நீலாவின் மாமன் பத்மநாபன் மாலைக்குள் நிச்சயமாக வந்து விடுவார் என்ற நம்பிக்கை அவர்களுக்குத் தைரியத்தைக் கொடுத்தது.

பிற்பகலில், காபி பலகாரங்களை முடித்துக்கொண்டு, எல்லோரும் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கையில் முத்து ஓடி வந்து, ஒரு போலீஸ் அதிகாரி அவர்கள் வீட்டை நோக்கி வருவதாகத் தெரிவித்தான். மதன் வெளியே வருவதற்குள், போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டரும் வந்துவிட்டார். சிறிது தூரத்தில் மெதுவாக வந்து நின்ற காரிலிருந்து புண்ணிய கோடி இறங்குவதையும் மதன் பார்த்தான்.

"மதன் என்பது நீங்கள்தானா?" என்று போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் கேட்கவே, "ஆமாம்" என்று அவரை உள்ளே அழைத்துக்கொண்டு போய் உட்கார வைத்து, "என்ன விஷயம்?" என்று நிதானமாகக் கேட்டான், மதன்.

இப்பொழுது நீலாவும் முன்வரவே, அவளைப் பார்த்து, "புண்ணியகோடியின் மகள் நீலாவா நீங்கள்?" என்று ஸப் இன்ஸ்பெக்டர் இழுத்தார்.

"ஆமாம், நானேதான்! உங்களுக்கு என்ன வேண்டும்?"

நீலாவின் தோரணையையும் மதனின் கம்பீரத்தையும் ஸப் இன்ஸ்பெக்டர் மாறி மாறிப் பார்த்தார். பிறகு தயக்கத்துடன், "உங்களுடைய தகப்பனார் உங்களை மதன் 'பலாத்காரமாக இட்டுக்கொண்டு வந்து விட்ட'தாகப் புகார் கொடுத்திருக் கிறார்" என்றார்.

"அய்யோ! அய்யோ!" என்று அவள் வாயில் அடித்துக் கொண்டாள்.

ஆனால் மதனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. "என் மேல் குற்றம் சாட்டினதனாலே நான் சொல்வதைக் கேளுங்கள்;

நீலாவை அவளுடைய தகப்பனார் வீட்டை விட்டுத் துரத்தினார். நாங்கள் வெகு காலமாக—தாயும் பிள்ளையும்னு சொல்லுவாங் களே—அதுமாதிரி பழகினவர்கள். அதனாலே, நீலா, தன் சுய புத்தியோடு இங்கே வந்தாள். மேலும், நீலாவுக்கு வயது பதினெட்டு முடிந்துவிட்டது. இன்னும் சில மாதங்களுக்குள் பி. ஏ. பட்டம் பெறப் போகிறாள்."

"ஓஹோ!'' என்று விஷயத்தின் நுட்பத்தை அறிந்தது போல் ஸப் இன்ஸ்பெக்டர் தலையை அசைத்தார்.

"அவளுக்குப் பகுத்தறிவும் இருக்கிறது. ஆகையினாலே போலீஸார் விசாரிக்கும்படியான குற்றம் இதிலே ஒன்றும் இல்லை, பாருங்கள்! குடும்பப் பகையினாலே, அவளுடைய தகப் பனார் கண்மூடித்தனமாக ஏதேதோ செய்தால், நாம் அதைப் பொருட்படுத்தலாமா?"

"மன்னிக்க வேண்டும். இந்த விவரங்களெல்லாம் இப் பொழுதுதானே தெரிகின்றன. நல்லது, வருகிறேன்...'' என்று ஸப் இன்ஸ்பெக்டர் எழுந்துகொண் டிருக்கும்பொழுது, அழைப்பில்லாத விருந்தாளிபோல், புண்ணியகோடி உள்ளே ஓடி வந்தார்.

"எவ்வளவு நேரம் ஸார்! கிளம்பு வீட்டுக்கு! பெண்ணா நீ!" என்று அவர் நீலாவின்மீது எரிந்து விழுந்தார்.

"ஐயா! இந்த விஷயத்திலே நாங்கள் தலையிட முடியாது. வேண்டுமானால் கோர்ட் இருக்கிறது. வக்கீல்கள் இருக்கிறார் கள்; பார்த்துக்கொள்ளுங்கள்'' என்றார் ஸப் இன்ஸ்பெக்டர்.

''என்ன, ஸார்? அவங்க பேச்சைக் கேட்டுக்கொண்டு, இப்படிச் செய்யறீங்களே!'' என்றார் புண்ணியகோடி.

முரட்டு ஸப் இன்ஸ்பெக்டருக்கு மூக்குக்குமேல் கோபம் வந்தது. "அநாவசியமாகக் கம்ப்ளெயிண்ட் கொடுத்ததும் அல் லாமல் வித்தியாசமாகப் பேசுகிறீரே! மான நஷ்டத்துக்கு ஜவாப் தாரி யாவீர்! ஜாக்கிரதை!'' என்று கூறி, அவர் வெளியேறினார்.

அதே க்ஷணத்தில் ஒரு டாக்ஸி, கனவேகமாக வந்து, வாசலில் நின்றது.

# 8

டாக்ஸியிலிருந்து பிரேமாவும் அவளுடைய தகப்பனார் பத்மநாபனும் இறங்கினார்கள். பத்மநாபனைக் கண்டதும் புண்ணியகோடி, தனக்குப் பக்க பலம் கிடைத்துவிட்டது போல் உரக்கக் கத்த ஆரம்பித்தார்.

"நீலாவுக்கு வந்த கேடுகாலத்தைப் பார்த்தியா? வயது வந்த ஒரு பொண்ணு இப்படியா ஓடி வந்து புகுந்துக்கிறது? நாலு பேர் என்ன நினைப்பாங்க!"

பத்மநாபன் பதில் சொல்லாமல் புண்ணியகோடியை முறைத்துப் பார்த்தார். பிரேமா சகஜமாக உள்ளே சென்று, குழந்தைகளோடும் நீலாவோடும் சேர்ந்துகொண்டாள். மதன் இருவரையும் உட்காரும்படி மரியாதையுடன் கேட்டுக்கொண்டான். பத்மநாபன் நாற்காலியில் உட்காருவதைக் கண்டு, புண்ணியகோடிக்கு எரிச்சல் மேலும் அதிகரித்தது.

"என்ன பத்மநாபா, உட்கார்ந்திட்டயே! அவளை அழைத்துக்கொண்டு போவதை விட்டுட்டு!" என்று கேட்டார்.

"நான் இங்கே நீலாவை அழைக்க வரவில்லை. ஹாஸ்டலில் சேர்க்க யாரைப் பார்த்து ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று மதனை விசாரிக்க வந்தேன்!" என்றார் பத்மநாபன்.

"யாரை ஹாஸ்டலில் சேர்க்க?"

"பிரேமாவை; சரிப்பட்டால் நீலாவையும்......"

"நீலாவைச் சேர்க்க நீ யார்? இப்படியா சங்கதி! முன்னாலேயே 'பிளான்' போட்டுக்கொண்டு செய்கிறீர்களா?"

"நான் ஒரு பிளானும் போடவில்லை. நீலா தந்தி அடித்ததனாலே வந்தேன். நடந்ததை எல்லாம் பிரேமா சொன்னாள். இனி எனக்கு அவளை உங்கள் வீட்டில் விட்டு வைக்க இஷ்டமில்லை."

"என் வீட்டிலே வைக்கும்படி உன்னை யார் வருந்தினார்கள்."

"நிஜந்தான். பெத்த மகனும் மகளுமே உங்களுக்குக் கணக்கில்லை. அவங்களையே துரத்திட்டீங்க......"

"அடப் பாவி! நானுடா துரத்தினேன்!"

"ஆமாம், அண்ணனைத் துரத்தினது நீங்கதான்; என்னைத் துரத்தினதும் நீங்கதான். அம்மாவைத் துரத்தப் போறதும் நீங்கதான்!" என்று நீலா கோபத்தோடு பதறிக்கொண்டு சொன்னாள்.

"பெண்ணுடி நீ! பேய்! பேய்! குலத்தைக் கெடுக்க வந்த கோடாலிக் காம்பே! என் பணத்தைப் பிடுங்க அவன் உன்னை மயக்கிவிட்டான்! ஆனால், தம்பிடிகூடக் கொடுக்க மாட்டேன்!"

"உங்கள் பணம் யாருக்கும் வேணும். எல்லாரையும் துரத்திவிட்டு, நீங்களே அதைக் கட்டிக்கொண்டு அழுங்கள்!"

"சீ! நாயே!" என்று ஓங்கிய கையைத் தணித்துக்கொண்டு, "தூ! தூ!" என்று ஆத்திரத்தைச் சிதற அடித்து விட்டு, பறந்து போய், வண்டியில் ஏறிக்கொண்டு போய்விட்டார்.

அவர் போனது, புயல் அடித்து ஓய்ந்தாற்போல் இருந்தது. பத்மநாபன் நிதானமாக மதனோடும் நீலாவோடும் பல விஷயங்களைப்பற்றி யோசித்தார். இரண்டு மாதங்களாவது தன் தாயாரை, கிராமத்துக்கு அழைத்துக் கொண்டு போய் வைத்துக் கொள்ளும்படி, நீலா மாமனோடு மன்றாடினாள்.

"நான் என்ன செய்வேன், நீலா? அக்கா வரமாட்டேங்கறாளே. அவளுடையதெல்லாம் பண்டைக் காலத்துப் போக்கு. இந்த நிலைமையிலே உங்க நாயினாவை விட்டு, ஒரு நிமிஷங்கூடப் பிரிந்திருக்க மாட்டாளாம்."

"ஆமாம், இருக்க மாட்டாள்! நாயினா கெட்டது முழுதும் அம்மாவாலேதான்! சொன்னதுக்கெல்லாம் தலையை ஆட்டி ஆட்டி.. இப்படியே போனால் அவர் தப்பு அவருக்கு எப்போ தான் தெரியறது, மாமா?"

"அது இந்த ஜன்மத்துலே இல்லை! அவரைச் சட்டை செய்யாமல் நம்ப வேலையைப் பார்க்க வேண்டியதுதான். அப்போ, நாளை இரண்டு மணிக்கெல்லாம் நான் ஊருக்குப் புறப்படலாமா?" என்று அவர் மதனைக் கேட்டார்.

"பன்னிரண்டு மணிக்கே புறப்படலாம், மாமா. இடம் இருக்கிறது. எனக்கு நன்ருகத் தெரியும். ஆபீஸ் திறந்ததும் பணத்தைக் கட்ட வேண்டியதுதானே?" என்று மதன் உறுதியாகச் சொன்னுன்.

அதே பிரகாரம், மறு நாள் நீலாவையும் பிரேமாவையும் ஹாஸ்டலில் சேர்த்துவிட்டு, பத்மநாபன் தம் கிராமத்துக்குப் போய்விட்டார்.

நீலா வீட்டை விட்டுப் போனது, அவர் அறியாமலே புண்ணியகோடியின் மனத்தில் ஓர் ஏக்கத்தை உண்டாக்கி விட்டது. அடிக்கடி தம் மனைவி மூக்கைச் சிந்தியவாறு இருப் பதையும் அவர் கவனிக்காமல் போகவில்லை. தன்னையும் தன் அண்ணனையும் வீட்டை விட்டுத் தானே துரத்தியதாக நீலா பழி சாற்றியதும் அவருடைய மனத்தை உறுத்த ஆரம்பித்தது. உண்மையில் அவரா துரத்திஞர்? என்ன பேதைமை! உலகெல் லாம் அவர் மனத்தை அறிந்துகொண் டிருக்க, அவருடைய குழந்தைகள் மட்டுந்தாஞ தெரிந்துகொள்ளாமல் போக வேண்டும்! அவர் படும் பாடெல்லாம் யாருக்காக? எந்தப் பாவி யின் கொள்ளிக் கண்ணே தம் குடும்பத்தின்மீது விழுந்துவிட்ட தென்றும், அதற்கு அந்தப் பாதகன் கிருஷ்ணன் கருவியாகத் தோன்றிஞ னென்றும் அவர் பூர்ணமாக நம்பிஞர்.

விளையாட்டுப்போல், நீலா வீட்டை விட்டு அகன்று பத்துத் தினங்கள் ஆகிவிட்டன. இருந்தாற்போல் இருந்து, 'குழந்தை' யைப் பார்க்க வேண்டும் என்ற ஏக்கம் அவருக்குப் பீரிட்டுக் கொண்டு வரும். ஆனல், மமதை தடை போட்டுக் குறுக்கே நிற்கும். தற்செயலாக நீலா தென்பட மாட்டாளா என்று அவர் பலதடவை அவளுடைய ஹாஸ்டல் வழியாகப் போன தும் உண்டு. ஆனல் பயன் இல்லை.

பிறகு ஒரு நாள், ஹாஸ்டலுக்குள்ளேயே சென்று, பார்த்து விடுவது என்ற தீர்மானத்தோடு அவர் போய்க்கொண் டிருந்த போது, ஒரு ஜவுளிக்கடை வாசலில் புதுச்சேரியார் மகன் வேணுகோபாலன், ராஜதோரணையோடு நின்றுகொண் டிருப்

பதைக் கண்ட அவர், கடைமுன் மோட்டார் வண்டியை நிறுத்தச் செய்து, கீழே இறங்கினார். "என்ன தம்பி, என்னைத் தெரியுமா?" என்று அவர் வேணுகோபாலனை அணுகினார்.

"வாங்க, வாங்க" என்று அசட்டுச் சிரிப்புடன் புண்ணியகோடியை வரவேற்றாலும், அவர் இன்னார் என்பது வேணுவுக்குத் தெரியவில்லை.

"ஆமாம், நீ கடலூரிலே இருப்பதாக நாயினா சொன்னாரே?" என்றார் புண்ணியகோடி உட்கார்ந்துகொண்டு.

"அங்கேதான் இருந்தேன். இங்கே வந்து இரண்டு மாதம் ஆச்சுது" என்று வேணுகோபால் இழுத்தான். தன்னை இன்னும் யார் என்று அவன் ஊகித்துக்கொள்ளவில்லை என்பதை உணர்ந்த புண்ணியகோடி, தாமே அறிமுகப்படுத்திக் கொள்ள ஆரம்பித்தார். "நானும் நாயினாவும் ரொம்ப நாளத்து சிநேகிதர்கள், அப்பா. நீ புதுச்சேரியிலேயே இருந்துட்டே. ஏழெட்டு வருஷத்துக்கு முந்தி பார்த்தது. புண்ணியகோடின்னு கேள்விப்பட்டிருக்கயா?" என்றார்.

"ஓ, தெரியுமுங்க, தெரியுமுங்க! வியாபார விஷயமாக என்னை ஊரெல்லாம் நாயினா சுத்தச் சொன்னதுலே, நம்ப சொந்தக்காரங்களை நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியாமல் போயிட்டுது. ஆனால், பேரைச் சொல்லிட்டால், உடனே கண்டுப்பேன்."

"என் பையன் செய்தவேலை உனக்குத் தெரியும் அல்லவா?"

"தெரியுமுங்க...கடலூரிலே என் சிநேகிதன் பிரகாசம் எல்லாத்தையும் சொல்லி யிருக்கான். அவன் கல்யாணத்துக்கு மதன்கூட வந்தானே!"

"அந்தப் பயலுடைய அப்பன் செஞ்ச தீங்குதான் இவ்வளவும்! என்னைப் பத்தி ஏதாவது சொன்னானா?"

"உங்கள் பேச்சையே எடுக்கவில்லை."

"எடுக்கிறதுக்கு என்ன இருக்குது! எல்லாம் என் காசைத் தின்று பிழைத்ததுங்க. போனது போயிட்டுது. இனிமேல் நடக்கிறதை அல்ல கவனிக்கணும். நான் சொல்றேன்னு

கோவிச்சுக்காதே! இந்தக் காலத்துப் பிள்ளைங்க பெத்தவங் களைச் சட்டை செய்யருங்களா? ஒரு துரும்பாவல்ல நினைக்கி ருங்க!''

வேணுகோபால் சிரித்தான். "எனக்கு அந்த வழக்கம் இல்லைங்க!''

"நீ சொல்றதைக் கேட்கறதுக்கே எனக்கு ஆனந்தமாய் இருக்குது, தம்பி! பெரியவங்க, நல்லதைத்தானே சொல் ருங்க? பெத்த குழந்தைகள் மேலே அவங்களுக்குப் பகையா!— எனக்கு ஒரு மகள் இருக்கிருள். தெரியுமல்ல?'' என்று சொல்லும்போதே, லட்சங்களோடு லட்சங்கள் கலந்து, நீலா வும் வேணுகோபாலனும் மணமக்கள் ஆகக்கூடும் என்ற எண் ணம் அவருக்கு உதித்தது.

"ஊம், படிப்புலே ரொம்பக் கெட்டிக்காரி என்று பிரகாசம் சொல்லி யிருக்கிருன்."

"படிப்புலே மட்டுமா? எல்லாத்துலேயும்! என் குழந்தை யைப்பத்தி நான் எப்படிச் சொல்லிக்கொள்றது? ஒரு தடவை பார்த்தால்தான் தெரியும். அகத்தின் அழகு முகத்திலே என் பது அவளுக்குத்தான் தகும். இப்பொழுது ஹாஸ்டலில் சேர்ந்திருக்கிருள்."

"ஏன்?''

"அதுதான் இந்தக் காலத்துக் குழந்தைகளுடைய போக்குன்னு சொல்றேன். பரீட்சை இரண்டு மாசம் இருக் குது. அதுக்குள் நல்லாப் படிச்சு, எல்லாருக்கும் முதல்லே தேறணுமாம். படிக்கிறதுக்கு வீட்டை விட ஹாஸ்டல்தான் சௌகரியமாம்! நான் என்னத்தைச் சொல்றது?''

"அதுவும் உண்மைதான்'' என்று வேணு ஒப்புக்கொண் டான்.

"நான் படித்தவன் அல்ல தம்பி. படிப்பு விஷயம் எனக் குத் தெரியாது. ஆனால், படிப்பில்லாமலே, நானும் உங்க நாயினாவும் எவ்வளவோ வேலையைச் செஞ்சிட்டோம்!'' என்று புண்ணியகோடி புன்முறுவலித்தார். "சரி, இந்த ஊரிலே

இருந்தே, நம்ப வீட்டுப் பக்கம் வராமல் இருந்திட்டயே!'' என்று கேட்டார்.

“ஒரு வாட்டி பார்த்தால்தானே வருவதற்கு?''

“சரி, இப்போதான் பார்த்தாயிட்டுதே. போகலாம், வா. நான் வேறே இல்லே, நாயினு வேறே இல்லே. நாயினு பட்டணம் வந்தால் என்னைக் காணுமல் போகவே மாட்டார்; தெரியுமா? என்ன யோசிக்கிறே?''

“எனக்கு டிரைவர் கிடையாது. என் காரிலே உட்கார்ந்திடுங்க. உங்களதை டிரைவர் ஓட்டிக்கொண்டு வரட்டும்'' என்று வண்டியின் கதவைத் திறந்து, புண்ணியகோடியை உட்கார வைத்து, வேணு தன் காரை நடத்தினுன்.

வீட்டுக்கு வந்ததும், புண்ணியகோடி தம் மனைவிக்கு வேணுகோபாலனை அறிமுகப்படுத்தினுர். ஒன்றும் தேவையில்லை என்று முறையிட்ட போதிலும், வேணுவுக்குக் காபி, பலகாரங்களை வழங்கச் செய்தார். உட்கார்ந்தவாறு, வேணு, சுவரில் மாட்டி யிருந்த புகைப்படங்களைப் பார்வை யிட்டான். பிறகு, “மதன் போட்டோக்கள் ரொம்ப இருக்குதே!'' என்ருன்.

“அது ஒரு காலம். என் மகளை அவனுக்குக் கட்டிப் போடுவதாக யோசித்திருந்தேன். ஆனுல் இப்போழுது எல்லாம் தலைகிழாக மாறிப் போயிட்டுது.''

“ஏன், அவர் நல்ல படிப்பாளி ஆச்சுதே! நான் பழகினதுலே அவரண்டை ஒரு குறையும் எனக்குத் தென்படல்லேயே!''

“தம்பி, நீ பெரிய வீட்டுப் பிள்ளை, சூது வாது தெரியாது. வெளுத்ததெல்லாம் பால் உனக்கு. அவனும் அவன் அப்பன் மகனே என்கிறதை நீ மறந்துடாதே! என் ஒரு பிள்ளையை ஊரை விட்டுத் துரத்தின பாவி, அவன் அப்பன்தானே! அவன் என்ன கதிக்குப் போவானே! அந்தக் குடும்பத்து முகத்துலே முழிக்கலாமா? நீயே சொல்லு.''

அநுதாபத்துடன் ஆமோதிப்பதுபோல் வேணு தலையை அசைத்தான். பிறகு, "ஆனால், அவர் நல்ல படித்தவருங்க" என்று சர்டிபிகேட் கொடுப்பதுபோல் சொன்னான்.

"படிப்பு மட்டும் இருந்தால் போதாது, தம்பி. பணம் இல்லாதவன் பிணம்! அந்தச் சங்கதி உங்க நாயினாவுக்குத் தெரியும். எனக்குத் தெரியும். இவங்க என் குடியைக் கெடுத்தது ஒரு பக்கம் இருக்கட்டும். திவால் எடுத்தவங்களாச்சே! இவங்களோடவா நான் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொள்வேன்? இனி இந்த ஜன்மத்தில் இல்லை!" என்று புண்ணியகோடி அழுத்தம் திருத்தமாகக் கைகளை உதறினார்.

வேணு, மெள்ள எழுந்து, குழந்தைப் பருவத்திலிருந்து, தற்காலம் வரையில் எடுக்கப்பட்டிருந்த நீலாவின் புகைப்படங்களை உற்றுப் பார்த்தான். அவன் முகத்தில் உண்டான புன்சிரிப்பைப் பார்த்து, புண்ணியகோடி கேட்டார்; "என்ன தம்பி, சிரிக்கிறே!"

"ஒன்றுமில்லை" என்று வேணு மழுப்பினான்.

"சும்மாச் சொல்லு. காரணம் இல்லாமல் சிரிப்பு வருமா?"

"இல்லை...நம்பளவங்களுலே படித்த பெண்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவங்களெல்லாம் மறுபடியும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. கண் புதைந்து போய், டி. பி. வந்தவங்களாட்டம் உடல் ஒடுங்கிப் போய்..."

அதன்மேல், புண்ணியகோடி 'கல கல' வென்று சிரிக்கத் தொடங்கினார். "நீலா, அப்படி உயிரை விட்டுக்கொண்டு படிக்கிறவள் இல்லை. அப்பா! அவளுக்கு ஒரு வாட்டி படித்தால் போதும். ஆனால், அப்போ யாரும் அவள் வழிக்குப் போகக் கூடாது. என் மகள் அப்பா, அவள்! என் மூளை இருக்குது! என் கோபமும் இருக்குது. அதையும் சொல்லணுமல்ல? அவள் வீட்டை விட்டுப் போனது எனக்கும் இஷ்டம் இல்லை. அவளுக்கு அந்தக் கோபம் தெளியறத்துக்கு ஒரு மாதமாவது ஆகும். நீ ஒரு வாட்டி அவளைப் பார்த்தால் உனக்குத் தெரி

யும். வீட்டுக்கு லட்சுமி யின்னுல் அவளுக்குத்தான் தகும்! கொஞ்சம் பொறு! எனக்கு ஒரு யோசனை வருது" என்று புண்ணியகோடி எழுந்து, பின் கட்டில் இருந்த தம் மனைவியிடம் சென்ருர். வேணுவும் நீலாவின் போட்டோக்களை ஆராய்ச்சி செய்தான்.

இரண்டு மூன்று நிமிஷங்களுக்குள் புண்ணியகோடி மனைவியுடன் திரும்பி வந்தார்.

"தம்பி, உனக்கு ஒரு சின்ன வேலை வைக்கணுமின்னு பார்க்கிறேன். என்னடா இது, வந்ததும் வராததுமா உயிரை வாங்குருனே இன்னு நீ நினைச்சால்..."

"நல்லாச் சொன்னீங்க! நீங்கள் இன்னுரென்று எனக்குத் தெரிந்தப்புறம், நீங்கள் இப்படிப் பேசுவது எனக்குக் கஷ்டமாயிருக்குது. என்னைச் சேஷாத்திரிபோல நினைத்துக்கொள்ளுங்கள்."

"நான் என்ன சொன்னேன், சாரதா?" என்று புண்ணியகோடி தம் மனைவியைப் பார்த்துச் சொன்ஞர். "குலம் வீண் போகுமா? சங்கதி இதுதான் வேணு. நீலாவுக்கு என் மேலே இருக்கிற கோபம் தணிய இன்னும் கொஞ்ச காலம் ஆகும். ஆனுல், அவள் அம்மாவுக்கு அவளைக் காணுமல் இருக்க முடியவில்லை, தவிக்கிருள். நீலாவைப் பார்க்க நீ இவளை ஒரு வாட்டி ஹாஸ்டலுக்கு அழைத்துக்கொண்டு போய் வந்தால் .."

"இதுதானு! இதுக்கா இவ்வளவு தடுமாடறீங்க! நீங்க சும்மா வண்டியிலே உட்காருங்க, ஒரு நிமிஷத்திலே போயிட்டு வந்திடலாம்."

"இந்த மாதிரி இடத்துக் கெல்லாம் நான் போனதே இல்லை, அப்பா..." என்ருள் சாரதாம்பாள்.

"உங்களுக்கு ஒரு பயமும் இல்லை, மாமி. நான் இருக்கிறேன். உங்களை நீலாவண்டை ஒப்பிச்சிடறேன். அவ்வளவு தானே? வாங்க!" என்று சாரதாம்பாளைக் காரில் ஏற்றிக்கொண்டு, வேணுகோபால் ஹாஸ்டலுக்குச் சென்ருன்.

அங்கே ஒரு பெண் சிப்பந்தியுடன் சாரதாம்பாளை நீலா இருக்குமிடத்திற்கு அனுப்பிவிட்டு, புருஷர்கள் காத்திருப்பதற்கு என்று இருந்த இடத்தில் வேணுகோபால் உட்கார்ந்து கொண்டான். ஆனால், பத்து நிமிஷங்கள் ஆகியும் ஒருவரும் வராததனால் அவன் பொறுமையை இழந்தான். எழுந்து முன்னும் பின்னுமாக உலாவ ஆரம்பித்தான்.

சட்டைப் பைகளில் கைகளை விடவே, அன்று குஸுமாவினிட மிருந்து வந்த கடிதம் தென்பட்டது. எடுத்து ஒருமுறை பார்த்துவிட்டு, மறுபடியும் அதைப் பையில் போட்டுக் கொண்டான்.

நீலாவின் போட்டோக்களைப் பார்த்த பிறகு, அவனுக்கு அவளை நேரில் ஒரு தடவை பார்த்துவிட வேண்டும் என்ற அவா பிறந்திருந்தது. சில சமயங்களில் போட்டோக்கள் பொய் சொல்லும் என்பதும் அவனுக்குத் தெரியும்.

இவ்வாறு அவன் மனம் சஞ்சலப்பட்டுக்கொண் டிருக்கும்பொழுது, மாடி மரப் படிகளில் இருவர் இறங்கும் ஓசையோடு, சாரதாம்பாளின் மெல்லிய குரலும் கேட்டது. வேணு, வேகமாக எழுந்து வந்து பார்த்தான். சாரதாம்பாளுடன் வருவது நீலா என்பதை உணர்ந்தான். அவள் தோற்றம் அவனைத் திகைக்கச் செய்தது. தாயார் ஏதோ சொல்ல, அவள் புன்முறுவலோடு கை எடுத்து வந்தனம் செய்தாள். அவளுக்குத் திருப்பி வந்தனம் செய்தானே இல்லையோ, வேணுவுக்கே தெரியாது. அவன் அவளுடைய முகக் கவர்ச்சியில் மயங்கிக் கிடந்தான். அவனுடைய புத்தித் தடுமாற்றத்தை நீலா கவனிக்காமல் போகவில்லை. மலர்ந்த முகத்துடன், "அம்மாவாலே உங்களுக்கு ரொம்பக் கஷ்டம்" என்றாள்.

"ஹும், ஹும், என்ன கஷ்டம்! நாமெல்லாம் சொந்தக்காரங்கள் இல்லையா?" என்று அவன் சமாளித்துக்கொண்டு பதில் சொன்னான்.

"அம்மா எல்லாம் சொன்னாங்க. இந்த ஊர் மானேஜர் திரும்பி வர வரையிலும் இங்கே இருப்பீங்கபோல் இருக்குது?"

"இல்லே, இல்லே. இங்கேயேதான் 'பெர்மனென்ட்.' நாயிஞ பெரிய பிளான் போட்டிருக்கார். பிஸினஸை ரொம்பப் பெருக்கப் போகிருர்."

"பின்னே, என்ன, அம்மா! இனி என்னைக் காண்றதுக்கு உனக்கு ஒரு கஷ்டமும் இல்லை!"

"நான் தினம் வருவதற்குக்கூடத் தயார்."

"வேண்டாம்! வேண்டாம்!" என்று நீலா சிரித்தாள். "அப்புறம் நான் படிப்பது எப்படி? இங்கே இவர்களும் ஆக்ஷேபிப்பார்கள்."

"நிஜந்தான். நிஜந்தான்! நாயிஞவையும் இட்டுக்கொண்டு வரட்டுமா?"

உடனே நீலாவின் முகம் கோவைப் பழம்போல் சிவந்தது. "தயவு செய்து அவர் பேச்சையே என்னிடத்தில் எடுக்காதீங்க!"

"எனக்குத் தெரியாது; மன்னிக்க வேணும்!" என்று வேணு அசடு வழியக் கைகளைப் பிசைந்தான்.

"அய்யோ, பாவம்! எங்கள் வீட்டுச் சங்கதியெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்! நீங்கள் வித்தியாசமாக எண்ணிக்காதீங்க. உங்கமீது குறை சொன்னதாக நீங்க எண்ணிக்கவே கூடாது" என்று நீலா கேட்டுக்கொண்டாள்.

அதன்மேல் விடை பெற்றுக்கொண்டு, நீலாவின் தாயாருடன் வேணு புண்ணியகோடியின் வீட்டுக்குத் திரும்பிஞன். ஆனல் நீலாவால் ஏற்பட்ட மோகம் மாத்திரம் அவனை விட்டு நீங்கவில்லை. அவனை அறியாமல், அவன் மனக் கண்முன் குஸுமாவும் நீலாவும் நின்ருர்கள். அவனுடைய பிரமையில், அவர்களுடைய தாரதம்மியம் காக்கையையும் குயிலையும் ஒத்திருப்பதுபோல் தோன்றியது.

"இதுதான் நம்ம வீடு; இதுதான்!" என்று சாரதாம்பாள் சொல்லிக்கொண் டிருக்கும்பொழுதே, வேணு வண்டியை நாலைந்து வீடுகளுக்கு அப்பால் ஓட்டிக்கொண்டு போய்

விட்டான். பிறகு விழித்துக் கொண்டவன்போல் நிறுத்தித் திரும்பி வந்தான்.

புண்ணியகோடி, அவசர அவசரமாக ஓடி வந்தார். "பார்த்தீங்களா? சுகமாய் இருக்காளல்ல? உடம்புக்கு ஒண்ணும் இல்லையே?" என்று கேட்டார்.

மலர்ந்த முகத்துடன் அவர் மனைவி தலையை அசைத்தாள்.

"ஆனால், உங்கள் மேலே மட்டும் இன்னும் கோபம் தணியல்லை, மாமா" என்றான் வேணு புன்சிரிப்புடன்.

"அது போனால் போகுது. உன்னிடத்தில் மரியாதையாகத் தானே நடந்துகொண்டாள்?"

"அதைக் கேட்க வேணுமா, மாமா? அவள் படிப்பென்ன! குணமென்ன! நான் என்னவோன்னு அல்ல நினைத்தேன்! வாரம் தவறாதே, மாமியை அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டேன்."

"அதற்கு என்ன சொன்னாள்?"

"வந்தனம் செய்தாள். நாலு பேரோடு பழக நீலாவுக்குத் தெரியாவிட்டால் வேறு யாருக்குத் தெரியும், மாமா! உங்கள் மேலே மாத்திரம் ஏன் அவ்வளவு கோபமோ, எனக்குத் தெரியவில்லை.

"சமயம் வர்ர போது அதுவும் தெரியுது. எப்பவும் நல்லதைச் சொன்னால், அது கசக்கத்தான் கசக்கும், தம்பி. பெரியவங்க சொல்றது நல்லதோ கெட்டதோ, போகப் போகத்தான் தெரியும். இளங்கன்னு, பயம் அறியுமா!"

"எனக்கு ஒன்னும் விளங்கல்லை"

"சமயம் வர்ரபோது விளங்கும்படி சொல்கிறேன்... இன்னிக்கு என்னாலே உன் வேலைக்குக் குந்தகம் ஏற்பட்டுட்டுதோ என்னவோ?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லைங்க. பீச்சுப் பக்கம் போய் வருவேன்."

"இவ்வளவுதானே? அப்போ நானும் வரலாமா? சொந்தக்காரனாயிருந்து, நீயும் என் வீட்டு விஷயத்தை யெல்லாம்

தெரிஞ்சுக்கணுமல்ல? எனக்கு வேண்டியவங்க கிட்டே சொல்லித் தீர்க்காட்டி, இந்த மனக் குமுறல் அடங்காதப்பா!'' என்று புண்ணியகோடி வருத்தத்தோடு சொன்னார்.

இருவரும் மணலில், கடற்கரை ஓரமாக உட்கார்ந்து கொண்டனர். நீலக் கடலிலிருந்து குளிர்ந்த காற்று நுட்பமாக வீசிக்கொண் டிருந்தது. புண்ணியகோடி, தனக்குப் பிராண சிநேகிதனு யிருந்த கிருஷ்ணன் செய்த துரோகத்தைப்பற்றித் திருப்பித் திருப்பிச் சொல்லி, தற்காலத்தில் அவர் குடும்பம் அடைந்திருக்கும் நிலைமையையும் தெரிவித்தார்.

"நீயே சொல்லு தம்பி, இந்தப் பரதேசிப் பயல் மகனுக்கா என் பெண்ணைக் கொடுப்பது! அந்தத் துரோகியை இந்தக் குளிர்ந்த வேளையில் நினைத்தால்கூடப் பாவம் வருமே!''

"உண்மைதான்! ஆனுல், நீலாவுக்கு மதன்மேல் என்ன அவ்வளவு மோகம்?''

"மோகமும் இல்லை, கீகமும் இல்லை. வெறும் பிடிவாதம், அப்பா. தான் பிடித்த முசலுக்கு மூணே கால். அதுவும் தவிர வேறு யாரோடும் அவள் அவ்வளவு நெருங்கிப் பழகினதில்லை. இப்பொழுது உன்னேடு பழகினல் புத்தி மாறலாம் அல்லவா? அந்தப் பையன் மதனுக்கு நீ எந்த விதத்தில் சோடை! அவன் சாகிற வரையிலும் உழைத்தாலும் உன் ஒரு மானேஜர் சம்பாதிப்பதை அவனல் சம்பாதிக்க முடியாதே!''

"பணம் கிடக்கிறது, மாமா? அதைப்பற்றி நாயினுவும் நினைக்கவே மாட்டார். எனக்கும் அந்தக் கவலை இல்லை. நான் ஒன்று உடைத்துக் கேட்கிறேன்; கோபித்துக்கொள்ள மாட்டீங்களே?''

"எனக்கு எதுக்காகக் கோபம் தம்பி?''

"நீலாவை எனக்குக் கல்யாணம் செய்து கொடுக்க உங்களுக்கு இஷ்டமா?''

"அதுக்குத் தானேடா ராஜா, இவ்வளவு யோசனையும்!''

"என் மனத்தில் இருக்கிறதையும் சொல்லிடறேன், மாமா. நீலாவைக் கண்டப்புறம், எனக்கு வேறு யாரையும் மணம்

செய்துகொள்ள இஷ்டமில்லை. எனக்கு...'' என்று மேலே வார்த்தைகளைச் சொல்ல முடியாமல் தவித்தான்.

புண்ணியகோடி அவனை ஆனந்தத்தோடு பார்த்தவாறு சொன்னார்; "உன்னை மறுக்க மாட்டாள், அப்பா. உன்னிடத்தில் என்ன குறை இருக்கிறது? ஆனால், அவசரப்படாதே!''

"எனக்குத் தெரியும் மாமா. ஏதோ பெரிய 'வான்' வருகிறதே. 'நூதன கன்னியா வித்யாலய'த்தைச் சேர்ந்தது போல் இருக்கிறது'' என்று வேணு சொல்லிக்கொண்டிருந்த போது மாணவிகள் அதிலிருந்து இறங்கினார்கள்.

வேணு எழுந்து பார்த்தான். வண்டியிலிருந்து தின்பண்டங்களும் இறக்கப்பட்டன. ஒரு நிமிஷத்துக்குள், பின்னோடு வந்த ஒரு வாடகை பஸ்ஸிலிருந்து ஆசிரியர்கள், ஆசிரியைகள் போல் தோன்றிய சில ஆண்களும் பெண்களும் இறங்கினர். அவர்களில் நீலாவும் மதனும் இருப்பதைக் கண்டு வேணு திகைத்து நின்றான்.

## 9

வேணுவின் திகைப்பைக் கவனித்த புண்ணியகோடி, "என்ன தம்பி, அப்படிப் பார்க்கிறே!'' என்று கேட்டார்.

"நூதன கன்னியா வித்தியாலயத்தார் 'பிக்னிக் பார்ட்டி' நடத்துகிறாப்போல இருக்குது. அதற்கு மதன் வர வேண்டியதுதான்; ஆனால் நீலா கூட வந்திருக்கிறாளே!''

"என்னது! நம்மைப் பார்த்துட்டாங்களா?'' என்று புண்ணியகோடி அலறினார்.

"இல்லை, இல்லை! அவர்கள் அந்தச் சவுக்குத் தோப்பைத் தாண்டி உட்காருகிறாப்போலே இருக்குது. இந்தப் பக்கம் திரும்பவே இல்லை. ஆனால் நீலா இங்கே வரப் போவதாகவே சொல்லவில்லையே!'' என்று வேணு விழுங்கித் தவித்தான்.

"அந்தப் பயலுக்கு எவ்வளவு திமிர்! வயதுப் பெண்ணை அழைத்துக்கொண்டு வருகிறதா!''

"வித்தியாலயம் முழுவதும் வந்திருக்குதே! அதிலே என்ன தப்பு! ஆனால், நீலா இதை ஏன் ஒளித்து வைக்கணும்? மதனுக்கு என்னைத் தெரியாதா?"

"அந்தப் பயல் சொல்ல வேண்டாம் இன்னிருப்பான்! உதைத்தா லொழிய அவனுக்குப் புத்தி வராது! சமயம் வந்தால் இரண்டு கொடு, சொல்றேன்! வந்தது வரட்டும்! இதோ பார் வேணு, ஒரே பேச்சு: நீலாவை உன்னிடம் ஒப்பிச்சுட்டேன். இனிமேல் உன் சாமர்த்தியம்."

"நான் பார்த்துக்கிறேன், மாமா. நீங்கள் ஒண்ணு செய்றீங்களா? நான் உங்களை பஸ் ஸ்டாண்டுலே கொண்டு விட்டுடறேன். நீங்க பஸ் ஏறி வீட்டுக்குப் போயிடுங்க. நான் திரும்பி வந்து, இந்த வேடிக்கையெல்லாம் பார்த்துட்டு வரேன்."

"அப்படியே செய். ஆனால், அவர்கள் தலை மறைந்திட்டு தான்னு பார்."

"அவர்கள் எப்பவோ போயிட்டாங்க" என்றான் வேணு. புண்ணியகோடியை, ஒரு மைலுக்கு அப்புறம் இருந்த பஸ் ஸ்டாண்டில் இறக்கி விட்டு விட்டுத் திரும்பினான்.

எல்லோரும் சிற்றுண்டியைச் சாப்பிட உட்காருவதும், வேணு அங்கே தலையைக் காட்டுவதும் ஒரே சமயமாக நேர்ந்தது. நீலாதான் அவனை முதலில் பார்த்தாள்.

"வாங்க, வாங்க!" என்று, சாப்பிடப் போனவள் எழுந்து, அவனை எதிர்கொண்டு அழைத்தாள்.

"ஓ! பெரிய 'பார்ட்டி'போல் இருக்குதே! நான் கொஞ்ச நேரம் நிம்மதியாக இருந்து போக இந்தப் பீச்சுக்கு வர வழக்கம் உண்டு. அய்யோ கடவுளே! நான் ஏதோ தற்செயலாக வந்தேன். நீங்கள் வேறுவிதமாக எண்ணிக்காதீங்க."

"எண்ணிக்கிறதுக்கு என்ன இருக்குது?" என்று நீலா சொல்லிக்கொண் டிருக்கும்போதே, மதனும் விரைந்து வந்து, "வாங்க, மிஸ்டர் வேணு!" என்று வரவேற்றான். ஆனால், வேணு, மதனின் சொல்லைச் செவியில் போட்டுக்கொள்ளாதது போல், "ஏன் இல்லை? உங்களைப் பார்த்து ஒரு மணி நேரங்கூட

ஆகவில்லை. இங்கே 'பார்ட்டி' இருப்பதாக நீங்கள் உங்க அம்மா கிட்டேகூடச் சொல்ல வில்லையே!'' என்று வேணு நீலாவைப் பார்த்துத் தொடர்ந்து சொன்னான்.

நீலாவின் முகம் சிவந்தது. அவள் பதில் சொல்வதற்குள், "இன்னிக்கி 'பிக்னிக்' வைத்துக்கொள்வதுபற்றி இரண்டு மணி வரையிலும் எனக்கே தெரியாது, ஸார். ஏதோ திடீரென்று நினைத்துக்கொண்டார்கள். வருகிற வழியிலே நான் நீலாவை யும் அழைத்துக்கொண்டு வந்தேன்'' என்றான் மதன்.

"இப்பொழுது தெரிந்ததா?'' என்று நீலா குறும்பாகப் பார்த்தாள்.

"மன்னிக்கவும். என் மனத்தில் இருந்ததை நான் சொல்லி விடுகிறேன். 'வேண்டா விருந்தாளி, இவன் எங்கேடா வந் தான்! என்று நினைத்துக்கொண்டால்...''

"நீங்கள் வேண்டிய விருந்தாளிதான். நானல்லவா உங்க ளுக்கு விருந்தளிக்கப் போகிறேன்!''

"இது நல்லா இருக்குதே! மிஸ்டர் மதனுக்கு நீங்கள் விருந்தாளி; உங்களுக்கு நான் விருந்தாளி; அப்புறம் எனக்கு ஒருத்தர்...''

"எல்லாரும் தெரிஞ்சவங்கள், ஸார்! நீங்கள் வந்தது எவ்வளவோ சந்தோஷம்'' என்று மதன் வேணுவை வித்தியா லயத்தின் காரியதரிசி முதலானோருக்கு அறிமுகப்படுத்தினான்.

பிறகு, உல்லாசமாக ஒரு மணி நேரத்தை வேணு அங்கே கழித்துவிட்டுத் திரும்பியபொழுது மதனையும் நீலாவையும் அவ ரவர்கள் இடத்தில் இறக்கிவிட்டான்.

வர வர, வேணு ஏதோ ஒரு சாக்கை வைத்துக்கொண்டு, நீலாவை அடிக்கடி காண யத்தனித்தான். அவளுடைய அரு வருப்பையும் அவன் சட்டை செய்யவில்லை. பரீட்சை முடியும் வரையில், இரண்டு வாரங்களுக்கு, தன்னை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது என்றும், தன் தாயார்கூடக் காண வர வேண்டியதில்லை யென்றும் அவள் கண்டிப்பாகச் சொன்ன பிறகுதான், அவன் அவளைச் சுற்றிக்கொண்டு திரிவதை

கிறுத்தினான். ஆனால், அவனுக்கு ஒரு நாள் போவது ஒரு யுகம் போல் இருந்தது.

நீலாவை மணந்துகொள்ள அவன் எதையும் செய்யத் தயாராக இருந்தான். இவ்வளவு மோகத்தில், அவன் குஸுமாவை மறந்ததில் ஆச்சரியமே இல்லை. அவள் எழுதிய கடிதங்களைக் கிழித்து எறிந்தான். அந்தப் பேதைப் பெண், தனக்கு அவள் இதயத்தைப் பறிகொடுத்து விட்டாள் என்பதை அடியோடு மறந்தான். கடலூர் முழுவதும் குஸுமாவோடு அவன் திருமணத்தை எதிர்பார்ப்பது அவன் மூளைக்கே எட்ட வில்லை. இரவும் பகலும் நீலாவின் நினைவிலேயே மூழ்கிக் கிடந்தான்.

வேணுவின் நிலைமை இப்படியிருக்க, கடலூரில் குஸுமா வேணுவினிட மிருந்து கடிதப் போக்குவரவு திடீர் என்று நின்று விட்டதை நினைத்து ஏங்கித் தவித்தாள். கல்யாணம் ஆவதற்கு முன் அவ்வளவு நட்புக்கொண்டாடக்கூடாது என்று சில தோழிகள் எச்சரித்தது இப்பொழுது அவளுக்கு நினைவு வந்தது. சில வேளைகளில் தன் தாயாருக்கும், தான் வேணுவுடன் சரசமாக நடந்துகொண்டது இஷ்டமில்லை என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் எவ்விதத்திலும் அவள் ஒழுங்கு தவறி நடக்கவில்லையே! தனக்கும் வேணுவுக்கும் ஏற்பட்ட தெய்விகக்காதலை, பிறர் எப்படி அறியக் கூடும்!

அவளுடைய போக்கே ஒரு அலாதிப் போக்கு. ஒருவர் மீது அன்போ வெறுப்போ ஏற்பட்டுவிட்டால், பிறகு அது மாறுவது என்பது இல்லை. ஆனால், சுயமரியாதை அவளுக்குக் கூடப் பிறந்த தன்மை ஆகையால், தான் கட்டுக் கட்டாக எழுதின கடிதங்களுக்கு வேணு பதில் போடாதது அவள் மனத்தை உறுத்தத் தொடங்கியது. அந்த மர்மத்தைத் தெரிந்துகொள்ளத் துடித்தாள்.

ஆகவே, எப்படியாவது சென்னையில் போய்க் குதித்து விட வேண்டும் என்ற ஆத்திரம் அவளைப் பிடித்துக்கொண்டது. பிறகு, சென்னைக்குச் சென்றுவிட்டால் மட்டும் போதாது;

அங்கேயே சில காலம் தங்க வேண்டும் என்ற எண்ணமும் உதித்தது. ஒரு வேளை வேணு தன்னை வஞ்சித்திருந்தால்! நினைக்கும்போதே தேகம் பதைத்தது! அவள், கடலூரில் எப்படித் தலையைக் காட்டுவது! மூளையைக் குழப்பிக்கொண்டாள்: தோழிகளோடு ஆடி ஓடித் திரிவதை நிறுத்தினாள். எப்பொழுதும் தன் அறைக்குள் கவலை தோய்ந்த முகத்துடன் அடைத்துக் கிடந்தாள்.

அவளுடைய விசாரத்தை அவளுடைய தாயார் உணராமல் போகவில்லை. ஒரு நாள் குஸுமா தன் தாயிடம் வந்து, "அம்மா, எனக்குப் பி. ஏ. பாஸ் பண்ண வேணும்னு ஆசையாக இருக்குது. என்னைவிடப் பெரியவங்க ளெல்லாம் படிக்கவில்லையா?" என்று கேட்டாள்.

அவளுடைய தாயார் திடுக்கிட்டுப் போனாள். "நீ ஸ்கூல் பைனல் தேறி, மூணு வருஷம் ஆச்சுதே, குஸுமா!" என்றாள்.

"ஆனால் என்ன? எனக்கு மேலே வயசானவங்கள் இன்னும் ஸ்கூல் பைனல் படிக்கிறாங்களே? உனக்கு எத்தனை பேர் வேணும்?"

"எல்லாம் மறந்து போயிருக்குமே, அம்மா. அப்புறம்..."

"அப்புறமும் இல்லை, கிப்புறமும் இல்லை. அண்ணா சிநேகி தன் மதன் சொல்லவில்லையா? சென்னையிலே அவருடைய 'நூதன கன்னியா வித்தியாலய'த்துலே இரண்டே வருஷத்துலே பி. ஏ. பாஸ் பண்ண வைக்கறாங்களாமே. நான் பட்டணம் போய்ப் படிக்கத்தான் போறேன். அண்ணா ஒண்ணும் சொல்ல மாட்டார். மதனையே சொல்லிக் கொடுக்கச் சொல்வார். நீ மாத்திரம் குறுக்கே நிற்காதே! ஆமாம்."

"அவ்வளவு பெரிய பட்டணத்துலே, நீ எப்படி அம்மா தனியாய் இருப்பே!"

"தனி என்ன? மதன் வீடு வேறே, நம்ப வீடு வேறயா? அண்ணா புதன் கிழமை வரார் இல்லையா? சரி, எல்லாம் அண்ணா கிட்டே சொல்லிக்கிறேன். நீ மட்டும் வம்பு பண்ணாதே!" என்று சொல்லி, அவள் எழுந்து தன் அறைக்குப் போய்விட்டாள்.

பிரகாசம், குடும்ப அலுவல்கள் விஷயமாகக் கடலூரில் ஒரு நாள் தங்க வந்தவன், குஸுமாவின் போராட்டத்தால் மற்றும் இரண்டு தினங்கள் லீவ் வேண்டும் என்று தன் மேல்அதிகாரிக்குத் தந்தி அடித்துவிட்டு, தன் தாயாரோடு வெகு நேரம் ஆலோசனை செய்தான். குஸுமாவை மதனுடைய நூதன கன்னியா வித்தியாலயத்தில் சேர்த்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தான். தாயும் தமையனும் குஸுமாவுக்கு வேணுவால் ஏற்பட்ட ஏமாற்றத்தையும் அதனால் உண்டான விசனத்தையும் நன்கு உணர்ந்தார்கள். ஒரு விதத்தில் பிரகாசத்துக்குச் சந்தோஷமாயினும், குஸுமாவின் மனப் புண்ணுக்கு மேலே படிப்பதைத் தவிர வேறு பரிகாரம் அவனுக்குத் தென்படவில்லை. ஆகவே, உடனே சென்னைக்கு அவன் தன் தங்கையுடன் புறப்பட்டான். மதனின் உதவியால், அவளைக் கன்னியா வித்தியாலயத்தில் சேர்த்து, ஹாஸ்டலிலும் அமர்த்திவிட்டான்.

அவனுக்கு இருந்த கோபத்தில், வேணுவைக் கண்டு, அவனை அவன் காரியாலயத்திலேயே அனைவருக்கும் முன் அவன் வெட்கிச் சாகும்படி அவமரியாதை செய்துவிடுவது என்ற தீர்மானத்தோடு அவன் அங்கே சென்றான். ஆனால், தெய்வச் செயலாக வேணு வெளியூருக்குச் சென்றிருந்ததாலும், அன்று இரவே அவன் ரயில் ஏற வேண்டி இருந்ததாலும், அவனுடைய எண்ணம் நிறைவேறவில்லை.

குஸுமா, மதன் குடும்பத்தாருக்குப் புதிதல்ல. அவளைத் தங்கள் வீட்டோடு வைத்துக்கொள்ள அவர்கள் ஆசைப்பட்ட போதிலும், அக் குடும்பத்தின் சிக்கல்கள் முற்றும் நீங்கவில்லை என்பதை உள்ளூற உணர்ந்த பிரகாசம், அவளை ஹாஸ்டலில் சேர்க்க நேர்ந்தது. ஆனால், குஸுமா வெகு சகஜமாக மதன் வீட்டுக்கு வரப் போக இருந்தாள். புதிதில் சில தினங்களுக்கு, வேலையாள் முத்து, வழி காட்டுவதற்கும் துணையாகவும் அவளைப் பின்பற்றிச் சென்றான். முத்துவுக்குப் பேச இடம் கொடுத்துவிட்டால், சாவி கொடுத்த அலாரம்போல்,

உளறிக்கொண்டே இருப்பான் ஆகையால், இந்தச் சமயங்களில் நீலா தன் தகப்பனாரோடு சண்டை போட்டுக்கொண்டது, பிறகு அவளும் பிரேமாவும் ஹாஸ்டலில் சேர்ந்தது, அப்புறம் நீலாவைப் பார்க்க வேணு நீலாவின் தாயாரை அந்த ஹாஸ்டலுக்கு அழைத்துப் போவது—எல்லாவற்றையும் பாடமாக ஒப்பித்துவிட்டான். இதைக் கேட்ட மாத்திரத்தில் குஸுமாவுக்கு அடிவயிற்றில் தீயை மூட்டினாற்போல் இருந்தது.

"முத்து, வேணுன்னு ஒருத்தர் சொன்னியே, உனக்கு அவரை எப்படித் தெரியும்?"

"ஒரு வாட்டி சின்ன அய்யாவைக் கடலூரிலே இருந்து, அவரு காருலே கொண்டுவந்து விட்டாரு..."

"ஓஹோ!"

"அப்புறம், எத்தினையோ வாட்டி பாத்திருக்கேன், அம்மா. முந்தா நேத்துக்கூட நீலா அம்மாவையும் சின்ன அய்யாவையும் பீச்சுலே யிருந்து இட்டுக்கிட்டு வந்து, அய்யாவை இங்கே எறக்கிட்டு, நீலா அம்மாவை அவங்க ஆஸ்டலுலே எறக்கப் போனாரு."

"ஊ ஹூம்!" என்று சொல்லிக்கொண்டு குஸுமா, முகத்தில் அருவிபோல் பெருகிய வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

"அவர் எங்கே இருக்கார்? உனக்குத் தெரியுமா?"

"அது ரொம்பத் தொலவு அம்மா, உங்களுக்கு அந்த அய்யாவைத் தெரியுமா?"

"ஆம்" என்பதுபோல் குஸுமா தலையை அசைத்தாள்.

"பெரிய கடைத் தெருவைத் தாண்டிப் போகணும், அம்மா......நான் ஓணுமானால் காட்டுறேன்."

"இன்னிக்கு வேண்டாம். நான் போகிறபோது சொல்றேன். நீலா அம்மா சின்ன அய்யாவைக் காண இங்கே வரதில்லே?"

"இங்கே ஏன் வராங்க? அவங்களுக்குத்தான் படிப்பு, சரியாய் இருக்குதே?"

"அந்த அம்மா இருக்கிற இடம் உனக்குத் தெரியுமா?"

"ஏன் தெரியாமே? ஆனால் ரொம்பத் தொலவு, ஒரு மைலு, மூணு மைலு இருக்கும்!"

குஸுமாவுக்குப் புன் சிரிப்பு வந்தது. "மெய்யாலும், அம்மா, நான் இட்டுக்கிட்டுப் போறேன்!" என்றான் முத்து.

"வேண்டாம், வேண்டாம். எனக்கு விலாசம் தெரியும். நாளைக்கு நானே போறேன். பாவம், உனக்கு எதற்குக் கஷ்டம்?"

ஹாஸ்டல் வரவே, அவள் முத்துவை அனுப்பி விட்டு, தன் னிடத்திற்குச் சென்றாள். ஆனால், ஏகாந்தத்தில், மனக் குழப்பம் அதிகரிக்கத்தான் அதிகரித்தது. நீலாவுக்கும் அவளுக்கும் அநேகமாய்ச் சம வயதுதான். நீலாவை அவள் மதன் வீட்டில் இரண்டொரு முறை கண்டு பேசியது உண்டு. அந்தச் சாக்கை வைத்துக்கொண்டு, மறு நாள் அவளைப் பார்க்க உத்தேசித்த தும் நல்லதற்கே என்று குஸுமா தனக்குள் சொல்லிக் கொண்டாள். பிறகு, பெட்டியைத் திறந்து, தனக்கு வேணு எழுதின கடிதங்களை, ஒவ்வொன்றாகப் படித்துப் பார்த்தாள். அவற்றில் பொங்கி வழிந்த காதல் அவள் இதயத்தைப் பட படக்கச் செய்தது. அப்படிப் பட்டவரா அவளை மறந்தார்! மறக்கும்படி என்ன நேர்ந்துவிட்டது!

மறுநாள் ஏதோ யந்திரம்போல் தன் வேலைகளைச் செய்து விட்டு, அவள் சாயங்காலம் வித்தியாலயம் மூடப்பட்ட உடனே, தைரியமாகப் பஸ் ஏறி, நீலாவின் ஹாஸ்டலுக்குச் சென் றாள். கல்லூரிப் பரீட்சைகள் முடிந்து, இரண்டு தினங்கள் ஆகிவிட்டபடியால், தன்னால் நீலாவுக்கு ஒருவிதத் தொந்தரவும் இருக்காது என்ற எண்ணத்தால் அவளுக்குத் தைரியம் மேலும் அதிகரித்தது. ஆனால், நீலாவின் அறையைத் தேடிப் பிடித்து, அவள் உள்ளே சென்றதும், அவளுக்குச் சிறிது அச்சம் ஏற் பட்டு விட்டது. நீலாவின் கம்பீரமான தோரணையும் அழகும் புத்திக் கூர்மையால் முகத்தில் பிரதிபலித்த வசீகரமும், போதும் போதாததற்குத் தன்னை இன்னார் என்று நீலா தெரிந்துகொள்

ளாமல் போனதும், எல்லாம் ஒன்று சேரவே அவளுக்கு நடுக்கம் எடுத்துக்கொண்டது.

ஆனால், நீலா, குஸுமாவின் குழப்பத்தை அறிந்தும், அறியாதவள்போல் பாவித்து, அவளை வெகு மரியாதையுடன் உட்கார வைத்து, "என்னை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?" என்று கேட்டு வைத்தாள்.

"மதன் வீட்டுலே சொன்னாங்க. அண்ணாவைப் பார்க்க நானும் அம்மாவும் கடலூரிலிருந்து வரபோதெல்லாம், அவங்கள் வீட்டுலேதானே தங்குவோம். நீங்கள் மறந்துட்டீங்க போல் இருக்குது ..?"

கடலூர் என்றதும் விஷயத்தைத் தெரிந்துகொண்ட நீலா, "இல்லை, இல்லை! உங்கள் அண்ணா கல்யாணத்துக்குக் கூட மதன் வந்தாரே. ஆனால் நீங்கள் ரொம்ப மாறிப் போயிட்டீங்க!" என்று தன் தவறுதலை ஒப்புக்கொள்வதுபோல் அவள் சொன்னாள். பிறகு, குஸுமா தன் படிப்பு, தன் தாயாரால் தடைப்பட்டுப் போனதைக் குறித்து முறையிட்டுக்கொண்டாள்.

"இப்பொழுது மிஞ்சிப்போனது ஒன்றும் இல்லை. நாங்கள் நாலு வருஷத்துலே படிச்சதை, நீங்கள் இரண்டே வருஷத்தில் படித்துவிடலாம். ஆனால், நீங்கள் இன்னும் கொஞ்சம் முந்தியே வந்திருக்கலாம். இன்னும் இரண்டு மாதத்துக்குள்ளே அந்த வித்தியாலயத்துக்கு லீவ் விட்டு விடுவாங்களே."

"அதற்கு என்ன செய்கிறது? இப்போதானே அம்மா வரம் கொடுத்தாங்க!" என்று குஸுமா சொல்லிக்கொண்டிருக்கும் போதே, நீலாவின் தாயார் சாரதாம்பாள் பிரேமாவுடன் உள்ளே நுழைந்தாள்.

"நீலா!" என்று எதையோ சொல்ல வந்த பிரேமா, அறையில் ஒரு வேற்று முகத்தைக் கண்டதும், பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

"இவங்களும் நம்பளவங்கள்தான், பிரேமா! உனக்குப் பிரகாசம் தெரியாது, அம்மா? மதனோடு படித்துக்கொண்டிருந்தாரே; கடலூர் அம்மா."

"ஆமாம், ஆமாம்!"

"பிரகாசத்தின் தங்கைதான் இந்த அம்மா. இவங்களும் இவங்கம்மாவும் மதன் வீட்டுக்கு எத்தனையோ வாட்டி வந்திருக்காங்களே."

"ஊம் ஊம், எனக்கும் நினைவு வருது. நம்ப வீட்டுக்குக்கூட ஒரு வாட்டி வந்திருக்காங்க. ஆனால், ரொம்ப உயர்ந்திட்டாங்க! என்னால் கண்டு கொள்ள முடியவில்லை" என்றாள் பிரேமா.

"நீயுந்தான் மாறி விட்டே பிரேமா! ஆனால், நீங்கள் மாத்திரம் அன்றைக்கும் இன்றைக்கும் ஒரே அளவுதான்" என்றாள் குஸுமா, நீலாவைப் பார்த்து.

பிறகு சாரதாம்பாள், மரியாதைக்குக் குஸுமாவின் குடும்ப செளக்கியங்களை விசாரித்துவிட்டு, நீலாவைக் கடிந்து கொண்டாள். "நீ இனிமேல் பிரேமாவைத் தனியாக அனுப்பாதே! அவள் நமக்குக் குழந்தையாக இருந்தால், ஊருக்கெல்லாம் குழந்தையா?"

பிரேமா உதட்டைப் பிதுக்கினாள். "உனக்கு வேலை என்ன! நீ ஒரு பண்டைக்காலம்!" என்றாள் நீலா. பிறகு, "நீ சங்கதியைச் சொல்லவில்லையே, பிரேமா?" என்று பிரேமாவைக் கேட்டாள்.

பிரேமா, குஸுமாவையும் நீலாவையும் தயக்கத்துடன் மாறி மாறிப் பார்த்தாள். பிறகு அத்தான் மே மாதம் கட்டாயம் வரராராம். பத்து நாள் இருக்கப் போறாராம்" என்று பரமானந்தத்தோடு சொன்னாள்.

"என் அண்ணா சேஷாத்திரியை உங்களுக்குத் தெரியுமல்ல? விமானப் படையில் சேர்ந்துவிட்டார்."

"எல்லாம் சொன்னாங்க" என்றாள் குஸுமா.

"எங்கள் குடும்பமே ஒரு வேடிக்கையானது."

"குடும்பம் என்னடி செய்யும்? இந்தக் காலம் அப்படிப்பட்டது" பிறகு, தலையைத் தாழ்த்தி, "இந்த வேணு ஒருத்தன், நம்ப கார் தயாராக இருந்தும், நான் இட்டுக்கொண்டு போறேன்னு உயிரை வாங்கினான்!" என்றாள் சாரதாம்பாள்.

"அவர் கீழே இருக்காரா?"

"ஊம்" என்று சாரதாம்பாள் தலையை அசைப்பதற்கு முந்தியே, குஸுமாவுக்குத் தலை ஆட்டம் கொடுத்தது. தொண்டையில் ஏதோ சிக்கிக் கொண்டதுபோல், இருமித் தவித்தாள்.

நீலா எழுந்து ஓடி, குளிர்ந்த ஜலத்தைக் கொண்டுவந்து, குடிக்கக் கொடுத்தாள். நீரைக் குடித்து, எவ்வளவு கனைத்தும் குஸுமாவுக்குத் தொண்டை அடைப்பு நீங்கவில்லை. பிறகு ஒரு விதமாகச் சமாளித்துக்கொண்டு, சாவகாசமாக மற்றொரு தினம் வருவதாகச் சொல்லி, அம் மூவரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு, கீழே இறங்கினாள்.

அவளைக் கண்டதும் வேணு, பிரமித்து, விழிகள் பிதுங்கச் சிலைபோல் நின்றான். அவனுடைய ஆச்சரியம் அவளுடைய துக்கத்தையும் கோபத்தையும் அதிகரிக்கத்தான் அதிகரித்தது. "குஸுமா!" என்றான் அவன் ஈன சுவரத்தில்.

அவள் முறைத்துப் பார்த்தாள். அடுத்த க்ஷணத்தில், அவளுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்துவிட்டது. சத்தம் வெளிவராமல், கைக் குட்டையால் வாயை அடைத்துக் கொண்டாள். பேராபத்தில் இருந்து தப்பிக்கொள்வதுபோல், அவள் விழுந்தடித்துக்கொண்டு வெளியேறினாள். ஆனால், தேம்பலையும் குமுறலையும் அவளால் அடக்க முடியவில்லை.

தற்செயலாக மாடியின் ஜன்னல் அருகே வந்த பிரேமா அவளுடைய பரிதாப நிலைமையைக் காண நேர்ந்தது.

## 10

வேணு, தலை குனிந்தவாறு, விரைந்து செல்லும் குஸுமாவைச் சிறிது நேரம் பார்த்துக்கொண்டே நின்றான். அவளுடைய துக்கம் அவனைப் பாதிக்காமல் போகவில்லை. ஆனால், அவள் சென்னைக்கு வந்திருப்பதும், அதோடு நீலாவைக் கண்டு பேசியதும் அவனுக்கு ஏதேதோ எண்ணங்களைக் கிளப்பி விட்டன.

குஸுமா அவனைப்பற்றிக் குறைகள் சொல்லி யிருப்பாளே! அவளுக்கும் நீலாவுக்கும் பழக்கம் இருந்தது அவனுக்குத் தெரியாமல் போயிற்றே! காலதாமதம் இல்லாமல் குஸுமா இருக்கும் இடத்தைத் தேடிப் பிடித்து, விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவன் ஆத்திரப்பட்டான். ஆனால் அதற்கு முந்தியே நீலாவை விசாரித்தால், எல்லாம் வெளிப்பட்டு விடும் என்று தோன்றியது. வேதனை, விசாரம் என்று ஏற்பட்டால், தன்னை அறியாமல், அவன் தன் வலது முழங் கையைச் சுளுக்கு நீக்குவதுபோல் உதறிக்கொள்வது வழக்கம். இப்பொழுது வலது முழங்கைக்கு அதிக வேலை ஏற்பட்டது. சிறிது ஓசை கேட்டாலும், அவன் மாடிப் படிகளை நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்தான்.

ஆனால் இன்றைக்கு என்று நீலா இறங்கி வர வெகு நேரம் ஆகிவிட்டது. அவர்கள் பாதிப் படிகள் இறங்குவதற்கு முன்னமே வேணு, பொறுமையை இழந்து, "உங்களுக்குக் குஸுமாவைத் தெரியுமா?" என்று நீலாவைக் கேட்டான்.

"மதன் வீட்டில் அவளை இரண்டொரு தடவை பார்த்திருக்கிறேன். நூதன கன்னியா வித்தியாலயத்தில் சேர்ந்திருக்கிறாளாமே? இரண்டு வருஷத்தில் பி. ஏ. பட்டம் வாங்கிக் கொடுத்து விடுவதாக மதன் வாக்களித்திருக்கிறாராம்!"

"அப்படியா சங்கதி? அவர் செய்வார், செய்வார்! குஸுமாவின் அண்ணா பிரகாசமும் மதனும் ரொம்ப ரொம்பச் சிநேகிதம். உங்களுக்குத் தெரியுமல்ல?"

"நல்லாத் தெரியும்."

"குஸுமாவின் தாயாருக்குப் பிளான் போடுறதுலே ரொம்பச் சாமர்த்தியம் உண்டு."

"அவங்களை யெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"கடலூரிலே இரண்டு வருஷம் இருந்தேனே. நீங்கள் பீச்சுக்கு வரலையா?"

"இல்லே. இன்னிக்குக் கொஞ்சம் எழுத்து வேலை இருக்குது. அதை ஒரே மூச்சிலே செய்தால்தான் நன்றாயிருக்கும்."

"பார்த்தீங்களா? ஏமாத்திட்டீங்களே!" என்று சொல்லும் போதே, நீலா வராததும் நல்லதென்று அவனுக்குப் பட்டது. "இந்தப் பெண் குஸுமாவுக்குச் சாப்பாடு மதன் வீட்டிலே தானே?"

"இல்லே, இல்லே, வித்தியாலயத்து ஹாஸ்டலிலே சேர்ந்திருக்காளாம்."

"போகட்டும்" என்று 'கூட'மாகச் சொல்லிவிட்டு, வேணு சாரதாம்பாளை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனான்.

வேணு, வியாபாரத் துறையில் சூட்டோடு சூடாகக் காரியங்களை முடிப்பதால், பல நன்மைகளைக் கண்டிருந்தான். இப்பொழுது, குஸுமா விஷயத்திலும் அதே முறையைக் கையாளுவது உத்தமம் என்று அவனுக்குப் புலப்பட்டது. ஆகவே, அவன் நிதானமாகக் காரை ஓட்டிக்கொண்டு, நூதன கன்னியா வித்தியாலயத்துக்குச் சென்றான். கஷ்டமில்லாமல் குஸுமாவையும் வரவழைத்துக் கொண்டான்.

குஸுமாவின் முகத்தில் துக்கம் குடிகொண்டிருந்தபோதிலும், அவளுடைய பதற்றம் அடங்கிவிட்டது. "நானே உங்களைத் தேடிக்கொண்டு வரவேண்டும் என்று இருந்தேன். நீங்களே வந்தது ரொம்ப நல்லதாகப் போயிட்டுது. இருங்கள்; நான் மதன் வீட்டுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு வருகிறேன். எப்பொழுது வேணுமானாலும் மதன் வீட்டுக்குப் போக எனக்கு அநுமதி உண்டு" என்று ஓர் அசட்டுப் புன்சிரிப்புடன், அவள் உள்ளே சென்று, இரண்டு நிமிஷங்களுக்குள் திரும்பி வந்தாள்.

"சரி, வாருங்கள், போகலாம். உங்களோடு நான் தனியாகப் பேச வேணும். நான் எங்கே வேணுமானாலும் வருகிறேன்!" என்று அவள் சொன்னபொழுது அவளிடம் சுபாவமாக இல்லாத ஒரு முரட்டுத்தனத்தை வேணு உணர்ந்தான்.

"பீச்சுக்குப் போகலாமா?"

"ரெடி! ஆனால் யாரும் இல்லாத இடமாய் இருக்க வேணும்!" அவளுடைய பேச்சின் தோரணை வேணுவைச் சிறிது திகைக்கச் செய்தது.

பீச்சில், ஏகாந்தமான இடத்தில் வேணுவும் குஸுமாவும் அமர்ந்துகொண்டார்கள்.

"நான் எழுதின கடிதங்கள் ஒன்றுகூட உங்களுக்குக் கிடைக்க வில்லையா?" என்று குஸுமா கேட்டாள். வேணு பதில் சொல்ல வில்லை.

"கிடைத்ததா, இல்லையா? இது சொல்வதுகூடவா உங்களுக்கு ஒரு கஷ்டம்?"

"கிடைக்காமல் எங்கே போகும், குஸுமா? அது ஒரு காலம், என் மனதே எனக்குத் தெரியவில்லை."

"எனக்கு விளங்கவில்லையே?"

"விளையாட்டுப் பிள்ளைகளைப்போல் விளையாடினோம். உனக்கும் தெரியவில்லை; எனக்கும் தெரியவில்லை. ஆனால் நாம் தகாத காரியம் ஒண்ணும் செய்யவில்லை."

"அது வேறு வேணுமா? உங்கள் மனத்தில் நீங்கள் பச்சைக் குழந்தை என்று எண்ணிக்கொண் டிருக்கலாம்! ஆனால், என் மனது எனக்கு நன்றாகத் தெரியும். அது அன்னிக்கும் இன்னிக்கும் மாறவே இல்லை!" என்று சொல்லும்போதே அவளுக்கு அழுகை வந்துவிட்டது. விம்மத் தொடங்கி விட்டாள்.

வேணு கைகளைப் பிசைந்தான். ஆனது ஆயிட்டுது; இனி மேல் அதையெல்லாம் மறந்திடணும், குஸுமா! மறுபடியும் சொல்றேன்; என் மனதே எனக்குத் தெரியாமல் போயிட்டுது. உன்மீது எனக்கு அன்பு இல்லாமல் இல்லை. நீ சுகமாக வாழ ணும்னு எப்பவும் கடவுளைப் பிரார்த்தனை செய்வேன்."

"ஆனால், இப்போ நீலாவைக் கட்டிக்கணுமின்னு ஆசை வந்திட்டுது! அவளைவிட அழகியைப் பார்த்தால், நீலாவை மறந்திட்டு, அவளைக் கட்டிக்கப் பார்ப்பீங்க! இதற்காகவா, மானே தேனேன்னு கடிதங்கள் எழுதினீர்கள்!" என்று சொல்லி, குஸுமா தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்தாள்.

"குஸுமா! என்னை மன்னித்து விடு, 'மதன் நல்ல படிப் பாளி. முன்னுக்குவரக் கூடியவன் என்று எல்லாரும் சொல்லு

கிறார்கள். உன் அம்மாவும் அதையெல்லாம் யோசித்துத்தான் அவனண்டை உன்னைப் படிக்க அனுப்பியிருப்பாங்க.''

''மூடுங்கள் வாயை! இந்தச் சூழ்ச்சிகள் எங்கள் குலத்துக்குக் கிடையாது. அன்றைக்குக் கடலூரில் சொன்னதை இப்பொழுதும் சொல்கிறேன். எனக்கு ஒரே முடிவுதான். நீங்கள் கல்யாணம் செய்துகொள்ளாவிட்டால் நான் கடலூர் திரும்ப மாட்டேன்! இந்தச் சமுத்திரம் என்னை ஏற்றுக்கொள்ளும். இது சத்தியம்! சத்தியம்!!'' என்று அவள் தேம்பியவாறு மணலில் கையால் அடித்தாள்.

வேணுவுக்கும் பயம் எடுத்துக்கொண்டது. இந்த நிலைமையில் அவளோடு பேசுவதே பிசகு என்று தோன்றியது. சிறிது நேரம் மௌனமாக இருந்தான். ''இன்னொரு நாளைக்கு இதைப் பற்றிப் பேசிக்கலாம்'' என்றான் அவன்.

''நாள் என்னத்துக்கு? பேசத்தான் என்ன இருக்குது? உங்கள் முடிவைச் சொல்லுங்க!'' என்று அவள் அதட்டலாகக் கேட்டாள். வேணு, பதில் சொல்ல முடியாதவன்போல் தவித்தான். ''தானுப் பழுக்காத பழத்தை...''

''ஒரு பழம் எத்தனை வாட்டி பழுக்கும்? நீங்கள் எழுதின கடிதங்களை யார் பார்த்தாலும் பழமா காயான்னு சொல்லிவிடுவாங்களே!''

''அய்யய்யோ! யாரண்டையாவது காட்டிவிட்டாயா?''

''ஏன் அப்படி பயப்படறீங்க? தான் கட்டிக்கப் போற பெண்ணுக்குக் காதலன் கடிதம் எழுதக் கூடாதா?''

''கல்யாணம் ஆன பிறகு எழுதலாம். பிறத்தியார் பார்த்தாலும் தப்பில்லை. அதுக்கு முந்தி எழுதினது தெரிந்தால், அது அசிங்கமல்ல! நீ எழுதின கடிதங்களையெல்லாம் நான் கிழித்து எறிந்துவிட்டேன். நீயும் கிழித்துப் போட்டுவிடு.''

குஸுமா மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டாள்! ''நான் யோசித்து, யோசித்து, எழுதின கடிதங்களைக் கிழித்துப் போட்டீங்களா!'' என்று அவள் பெருமூச்சு விட்டாள்.

அவளை அறியாமல் அவளுடைய மனத்தில் திடீரென்று ஒரு மாற்றம் ஏற்பட்டுவிட்டது; கைகளைத் தட்டி, ஒட்டியிருந்த மணலை உதிர்த்தாள். "மணி என்ன ஆச்சுது? பாருங்க" என்றாள்.

"7. 15 ஆகுது."

"சரி, என்னை மதன் அண்ணா வீட்டுலே இறக்கி விட்டுடறீங்களா?"

"இப்போ அங்கே என்ன வேலை?"

"நாலு மாதப் படிப்பு வீணாப் போனதாலே, வித்தியாலயம் மூடறத்துக்குள்ளே, அதைக் கத்துக்கப் பார்க்கறேன். ஏழு மணிக்கு மேலே, தினம் எவ்வளவு நேரம் வேணுமானாலும், மதன் அண்ணா சொல்லிக் கொடுக்கத் தயார். ஆனால், எனக்குத்தான் தினம் அவரை நடக்க வைக்க இஷ்டமில்லை?"

"அவர் நடப்பானேன்?"

"நல்லா இருக்குதே! பாடம் முடிய எட்டரை, ஒன்பது கூட ஆயிடும். அதுக்கு மேலே, நான் அவங்கள் வீட்டுலேயிருந்து ஒண்டியாய் வருவேனா! அண்ணாத்தைதான் துணை வருகிறார். அவருக்கும் போக வர இரண்டு நடை ஆயிடுதே?"

"இரவுலே அப்படி வந்தால் ஹாஸ்டலுலே ஒண்ணும் சொல்லமாட்டாங்க?"

"ஏன் சொல்றாங்க? மதன் அண்ணாவைத் தெரியாதா அவங்களுக்கு? நான் அவருக்குக் கூடப் பிறந்தவள் போலேங்கறதும் தெரியும். வித்தியாலயத்து சூபரின்டென்டு அனுமதியே இருக்குதே?"

"அப்போ கவலையே இல்லை."

இதற்குள் மதன் வீடு வர, "நீங்களும் வரீங்களா?" என்று குஸுமா கேட்டாள்.

"இன்னிக்கு வேண்டாம். நான் நாளை சாயங்காலம் கொஞ்சம் பொழுதோடவே உங்க ஹாஸ்டலுக்கு வந்து இட்டுக் கொண்டு போறேன். என்ன?"

"ஊம், வாங்க" என்று குஸுமா உற்சாகம் ஏற்பட்டவள் போல் நடித்து, உள்ளே சென்றாள்.

அன்றைத்தினம் மதன் என்ன சொல்லிக்கொடுத்தானோ, அவள் எதைக் கற்றுக்கொண்டாளோ, குஸுமாவுக்குத் தெரியாது. ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்ததும், அடக்கி வைத்திருந்த துக்கமெல்லாம் கண்ணீர்ப் பிரவாகமாகப் பொங்கி வழிந்தது. தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மினாள். வேணு, தன் கடிதங்களைக் கிழித்து எறிந்ததை எவ்வளவு அலட்சியமாகச் சொன்னார்! அவளுடைய காதற் கடிதங்களுக்கு அவர் வைத்திருந்த மதிப்பு அவ்வளவுதானா!

எழுந்து உட்கார்ந்தாள். ஒரு சக்தி பிறந்தது. ஒன்று, அவரை மணந்து கொள்ள வேண்டியது; இல்லாவிட்டால் அவருடைய வாழ்க்கையைச் சிதற அடித்துவிட வேண்டியது! அதன் பொருட்டு, அவர் எழுதின கடிதம் ஒன்றையாவது திருப்பிக் கொடுக்கக் கூடாது. சமயம் வந்தபொழுது எல்லாவற்றையும் உபயோகப்படுத்திவிடவேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தாள்.

நீலாவின் குடும்பத்துக்கும் மதனின் குடும்பத்துக்கும் தீராப் பகை ஏற்பட்டு விட்டதால், நீலா எவ்வளவு பிடிவாதக் காரியாக இருந்த போதிலும், அவள் இஷ்டம்போல் கடைசி வரையில் நடந்துகொள்ள முடியுமா என்ற சந்தேகமும் குஸுமாவுக்கு உண்டாயிற்று. அதோடு, வேணுவும் தன் சாமர்த்தியத்தால் நீலாவின் மனத்தைக் கலைத்துத் தன் வசப்படுத்திக் கொண்டு விடுவானோ என்ற பயமும் ஏற்பட்டுவிட்டது. இவ் விஷயத்தைப்பற்றி மதன் அண்ணாவிடம் பேசுவதற்கும் அவளுக்கு வெட்கமாக இருந்தது. ஏன்? வேணு, நீலாவோடும் அவளுடைய பெற்றோர்களோடும் நெருங்கிப் பழகுவது மதன் அண்ணாவுக்குத் தெரியாதா? ஆனால் நீலாவினிடத்தில் வேணு கொண்டிருந்த மோகத்தை அவர் அறிந்திருக்க முடியுமா? நினைக்க நினைக்க அவளுக்குக் குழப்பம் அதிகரித்தது.

அன்று மாலை, ஐந்து மணிக்கெல்லாம் வேணு குஸுமாவின் ஹாஸ்டலுக்கு வந்து சேர்ந்தான். அவன் வரவை

ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த குஸுமா, தாமத மில்லாமல் காரில் ஏறிக்கொள்ள வந்தாள்.

"அந்தக் கடிதங்களை எடுத்துக்கொண்டாயா?" என்று வேணு கேட்டான்.

"எந்தக் கடிதங்கள்?"

"நான் உனக்கு எழுதினவைகள்தாம்."

"இல்லை" என்று குஸுமா தலையை ஆட்டினாள்.

"ஏன்? அவைகளை எடுத்துக்கொண்டு வா, போ!"

"அதுங்களைக் கிழிக்க எனக்கு இஷ்டம் இல்லை."

"யாராவது பார்த்திட்டால், ரொம்ப அசிங்கமாப் போயிடும், குஸுமா! உனக்குத் தெரியாது. கொண்டு வா, போ!"

"நான் கொண்டுவர மாட்டேன்!"

"ஏன் கொண்டுவர மாட்டே? உன் எண்ணந்தான் என்ன?"

"அதுங்களைத் திருப்பித் திருப்பிப் படிக்க எனக்கு ஆசை யாக இருக்குது; நான் கிழிக்க மாட்டேன்!"

"உனக்காகவும் தெரியவில்லை; சொன்னாலும் தெரிய வில்லையே! யாராவது பார்த்துட்டால், எவ்வளவு மானக்கேடு! எனக்கு என்ன வந்தது! நான் ஆண்பிள்ளை. உன்னைத்தான் காறி உமியுவாங்க!"

அதையும் லட்சியம் செய்யாமல், "முடியாது!" என்று குஸுமா நிர்ணயமாகச் சொன்னாள்.

வேணுவுக்கு முகம் சிவந்தது. அடக்கி வைத்த கோப மெல்லாம் புடைத்துக்கொண்டு வந்தது. "நீ சீரழிந்து திண்டா டாடுவாய், பார்!" என்று சொல்லி, அவன் காரை 'விர்' என்று ஓட்டிக்கொண்டு போய்விட்டான். குஸுமா, திக்கு முக்காடிப் போனாள். கண்களில் ஆறாகப் பெருகிய நீரைத் துடைத்தவாறு, என்ன செய்வது என்று தெரியாமல், மதனின் வீட்டை நோக்கி நடந்தாள்.

வேணு, தன் சபாவுக்குச் சென்று, சிற்றுண்டி கொண்டு வரும்படி உத்தரவிட்டான். பிறகு டிபன் எடுத்துக்கொள்ளும்

சாக்கில் யோசனையில் ஆழ்ந்தான். குஸுமாவின் துணிச்சலும் முரட்டுத்தனமும் அவனுக்கு ஒருவித பயத்தை உண்டாக்கின.

அப்பொழுது, முதல் முதலாக அவனை மயக்கிய ஒரு வசீகரத்தையும் அவளுடைய தோற்றத்தில் கண்டான். அதுவும் ஒரு விநோதமாக இருந்தது. தன் கடிதங்களை அவள் மதனிடத்தில் காண்பித்தாலும் காண்பிக்கலாம். ஆனால், அதற்கு அவன் அஞ்சவில்லை; ஆனால் நீலாவினிடமே கொடுத்தால்! உடம்பெல்லாம் வியர்த்தது. இதயத் துடிப்பு நின்றுவிடும்போல் இருந்தது. பலாத்காரமாகவாவது, அவள் பெட்டியிலிருந்து தான் எழுதிய கடிதங்களை மீட்டுக்கொள்ள வேண்டும்போல் அவனுக்குத் தோன்றியது.

நீலாவின் நன்மதிப்பையும் அன்பையும் பெற, அவன் எதையும் செய்யத் தயாராக இருந்தான். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன்போல் எழுந்து, காரை ஓட்டிக்கொண்டு, புண்ணியகோடியின் வீட்டுக்கு வந்தான். நல்ல காலமாக அவர் வீட்டில் இருந்தார். ஒரு ஐந்து நிமிஷ நேரம் அவரோடு ரகசியமாகப் பேசினான். புண்ணியகோடிக்கு ஆனந்தத்தால் மனம் பூரித்தது. "நான் தினம் கடவுளுக்கு அதைத்தானே அப்பா வேண்டிக்கிறேன்?" என்று சொல்லி, வெளியே வந்து, மனைவியை அழைத்தார்.

"சாரதா, உன்னோடும், நீலாவோடும் முக்கியமான சங்கதி ஏதோ வேணு பேச வேணுமாம். ஹாஸ்டலுக்குப் போய் நீலாவை அழைச்சுக்கிட்டுப் பீச்சுக்குப் போ. பிறகு வேணு சொல்றதை யெல்லாம் கேட்டுக்கிட்டு வந்துடேன்" என்றார் புன்முறுவலுடன்.

அதன்மேல் வேணு, சாரதாம்பாளுடன் நீலாவின் ஹாஸ்டலுக்குச் சென்றான். இன்றைக்கு வர முடியாதின்னு சொன்னீங்களே?" என்றாள் நீலா சிரித்த முகத்தோடு.

"ஆமாம். ஆனால், நாமெல்லாம் கலந்து பேச வேண்டிய சங்கதி ஒண்ணு வந்திட்டுது" என்றான் வேணு.

"அதென்ன சங்கதி?"

அப்படிச் சொல்லிட முடியுமா? பீச்சுக்குப் போனப் புறம்...'' என்று அவன், நீலாவின் தாயாரைப் பார்த்துப் புன் முறுவலித்து விட்டு, அவர்களுடன் சமுத்திரக் கரைக்குச் சென்றான்.

பீச்சில் ஏகாந்தமான ஓர் இடத்தில் போய் அமர்ந்ததும் நீலா, "என்ன இவ்வளவு யோசனை? அப்படி என்ன ரகசியம் அது?'' என்று கேட்டாள்.

"ரகசியம் ஒன்றும் இல்லை. உன் மனத்துக்கே தெரியாதா?" என்றான் வேணு.

"எனக்கு ஜோஸ்யம் தெரியாதே!'' என்று நீலா சொன்னது, அவனுக்கு முகத்தில் அடித்தாற்போல் இருந்தது. ஆதரவை நாடுவதுபோல், அவன் திரும்பி, அவளுடைய தாயார் சாரதாம்பாளைப் பார்த்தான்.

"என்னம்மா! உன்னைக் கட்டிக்கணுமின்னு வேணு ரொம்ப ஆசைப்படுது!'' என்று அவள் கர்நாடக முறையில் ஆரம்பித்தாள். "இதைவிட நல்ல இடம் எங்கிருந்து கிடைக்கும் சொல்லு. ஒரு விதத்திலும் குறை இல்லை. நீங்கள் புருஷன்—பெண்ஜாதி ஆயிட்டால், என் மனம் எவ்வளவோ குளிரும். அண்ணாத்தை ஓடிப்போன கஷ்டங்கூடக் கொஞ்சம் மறையுமே!'' என்று சொல்லி, ஏங்கினாள்.

ஒரு கணம் ஒரே மௌனம். பிறகு, "உன் பேருலே எதை எதையோ எழுதி வைக்கணுமின்னு நாயினா சொன்னதை எல்லாங்கூட அது ஒத்துக்கிட்டுது'' என்றாள்.

"நாயினா ஏற்பாடுன்னுதான் தெரியுதே. நீ என்னத்தைக் கண்டே, பாவம்! இதோ பாருங்கள், எனக்கு இப்பொழுது கல்யாண எண்ணமே இல்லை. நான் செய்யவேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. ஆகையினாலே தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள். அதோடு நான் உங்களை என் கூடப் பிறந்தவராகவே பாவித்து வருகிறேன். நீங்களும் அப்படியே நினைக்க வேண்டும் என்று பணிந்து கேட்டுக் கொள்கிறேன்'' என்று நீலா கைகளைக் கூப்பி நமஸ்கரித்தாள்.

வேணு, ஒரு கணம் திகைத்துப் போனான். ஆனால், கேட்ட மாத்திரத்தில் அவள் ஒப்புக்கொண்டு விடுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

"இது ஒரே நாளில் முடிகிற சங்கதி இல்லை, மாமி. நீலாவுக்கு மதனுடைய போக்கு இன்னும் தெரியாது. ஒரு தடவை நேரில் பார்த்தால்...."

"பார்ப்பதற்கு என்ன இருக்கிறது?" என்றாள் நீலா, சிறிது பதற்றத்தோடு.

"எவ்வளவோ இருக்கிறது...! தினம் மதன் வீட்டில் இரவு 8-45 வரையில் குஸுமா பரீட்சைக்குப் பாடம் கற்றுக்கொள்கிறாள். பிறகு, தன் ஹாஸ்டலுக்கு மூணு பர்லாங்கு நடக்கிற வரையிலும் மதன் அவளுக்குக் காதல் பாடமும் கற்றுக் கொடுக்கிறார்."

"பொய்! பொய்! அவ்வளவும் பொய்!" என்று நீலா சீறி விழுந்தாள்.

"உள்ளதைச் சொன்னால், இந்த அவதிதான். நான் சொல்வது நிஜம் என்பதை இன்னிக்கு ராத்திரியே வேணுமின்னாலும் ருபிக்கிறேன். நீயும் வா, மாமியும் வரட்டும். கார் விளக்குகளை அணைத்துவிட்டு, ஒதுப்புறமான இடத்திலிருந்து பார்க்கலாம். இல்லாவிட்டால், மூணு பேரும் காரில் உட்கார்ந்துகொண்டு, காரின் முன் விளக்குகளுக்கு எதிரிலே போகலாம். கண் கூச்சத்தால், அவர்கள் நம்மைப் பார்க்க முடியாது. ஆனால் நாம் அவர்களைப் பார்க்கலாம். என்ன சொல்கிறாய்?"

"சரி, அப்படியே போகலாம்" என்றாள். தன் படபடப்பை அவளால் மறைக்க முடியவில்லை. இதழ்களில் ஏற்பட்ட வியர்வையைத் துடைத்துக்கொண்டாள். பிறகு, "அம்மா, ஏதோ விருந்துக்கு என்னை அழைத்துக்கொண்டு வந்து, விட்டுவிடுவதாக எங்கள் வார்டனிடம் சொல்லு. அவர் அநுமதி கொடுத்துவிடுவார்" என்று அவள் தன் தாயினிடம் சொன்னாள்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

முன் ஜாக்கிரதையுடன், புண்ணியகோடி கவலைப்படாமல் இருக்கும்பொருட்டு, தாங்கள் திரும்பி வருவதற்கு சிறிது நேரம் ஆகுமென்று வேணு அவருக்குத் தகவல் கொடுத்துவிட்டு வந்தான். பிறகு, சுமார் ஒன்பது மணிக்கு, ரஸ்தாவில், ஓரமாக மோட்டார் வண்டியை நிறுத்தி, விளக்குகளை அணைத்துவிட்டு, தான் மாத்திரம் இறங்கி, ஒரு சிகரெட்டைப் பிடித்தவாறு குஸுமாவின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். தன் தாயாரைப் பேசாமல் இருக்கும்படி நீலா எச்சரித்தாள்.

ஒரு கால்மணி நேரமாவது அவர்கள் அவஸ்தைப்பட்டிருப்பார்கள். அப்பொழுது வேணு, "வந்துகொண்டிருக்காங்க!" என்று பரபரப்புடன், வண்டியில் ஏறிக்கொண்டு, சட்டத்துக்கு விரோதமாக, கண்களைப் பறிக்கும்படி முன் விளக்குகளுக்கு முழு வெளிச்சத்தைப் போட்டுக்கொண்டு, மோட்டாரை ஓட்டினான். தூரத்தில் வரும் மதனையும் குஸுமாவையும் நீலா கண்டாள். இருந்தாற்போல் இருந்து எதற்கோ குஸுமா சிரித்ததும் அவளுக்கு நன்றாகக் கேட்டது.

இப்பொழுது வேணு வேகமாகவும், அவர்கள்மீது ஏற்றி விடுவதுபோல், அவ்வளவு நெருக்கமாகவும் வண்டியை நடத்தவே, குஸுமா கண் கூசி, கால் தவறி விழப் போனாள். மதன் அவளை இரு கைகளாலும் பிடித்து, விழாமல் தடுத்தான்.

வண்டியை ஓட்டிக்கொண்டே, "தினம் இந்த நாடகந்தான்!" என்றான் வேணு. நீலா பேசவில்லை.

"நாளைக்கும் வரலாமா?"

"வேண்டாம். என்னை ஹாஸ்டலில் இறக்கி விட்டுவிடுங்கள்."

ஹாஸ்டல் வந்தது. நீலா இறங்கி உள்ளே சென்றாள். அடி வயிற்றிலிருந்து கொதித்து வந்த துக்கத்தை அவளால் மறைக்க முடியவில்லை.

# 11

துக்கம், ஏமாற்றம், ஒருவித அவமானம் எல்லாம் ஒருங்கே மனத்தைத் தாக்கவே, நீலாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. பிரேமா, அவளுடைய தாய் மாமன் வீட்டுக்குப் போயிருந்ததும் ஒரு விதத்தில் நல்லதாக இருந்தது. படுக்கையை விட்டு எழுந்தாள். மின்சார விளக்கைப் போட்டுக் கொண்டு, சுவரில் மாட்டியிருந்த மதனின் போட்டோவை உற்றுப் பார்த்தாள்.

பிறகு பெட்டியைத் திறந்து, வெகு சமீபத்தில் எடுக்கப் பட்டு, இன்னும் கண்ணாடி போடாமல் இருந்த அவனுடைய மற்றொரு போட்டோவையும் பார்த்தாள். மதனும் இப்படிச் செய்வான் என்பதை அவளால் நம்ப முடியவில்லை. கண்களில் நீர் ஆறாகப் பெருகிவிட்டது. 'ஒருவேளை வேணுவின் சூழ்ச்சியாக இருக்குமோ? என்ன சூழ்ச்சியாக இருந்தாலும் தன்னை மறக்கும்படி மதனுக்கு எப்படி மூளை கலங்கியது? எந்த விதத்தில் தன்னை விடக் குஸுமா மேலானவள்? துரோகி! மோசக்காரன்! எவ்வளவு வஞ்சகம்! கிருஷ்ணன் மாமாவுக்கு ஏற்ற பிள்ளையா அவன்!'

'ஒருவேளை. பிரகாசம் மதனுக்குப் பிராண சிநேகிதனானகையால், தன் தங்கையை எப்படியாவது மணந்துகொள்ள வேண்டுமென்று கெஞ்சிக் கூத்தாடியதனால் மதன் ஒப்புக் கொண்டிருப்பானோ? அப்படியானால் தன்னிடத்தில் ஏன் அதை மறைத்துவைக்க வேண்டும்? பாவி! பாவி! அவ்வளவு அலட்சியமா! என்னைப் பதர் என்று நினைத்தாயா!' என்று போட்டோவின் முகத்தை இடித்தாள். பிறகு போட்டோவைப் பெட்டியினுள் எறிந்தாள். எழுந்து, அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள். மறுப்படியும் கட்டிலின்மீது உட்கார்ந்துகொண்டாள். துக்கம் கரை புரண்டு ஓடியது. கூந்தலை இரு கைகளாலும் பிய்த்துக்கொண்டு, 'இவனுக்காகவா வீட்டைவிட்டு ஓடிவந்தேன்! அம்மாவையும் நாயினாவையும் தவிக்கவிட்டேனே!' என்று தேம்பிக் கதறினாள்.

என்ன என்னவோ எண்ணங்கள் மனத்தைத் துளைத்தன. கீழே பெரிய கடியாரம் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு அடிக்கும் வரையில் படுக்கையில் புரண்டு புரண்டு, கண்ணீர் சொரிந்த படியே கிடந்தாள். பிறகு அவளையும் அறியாமல் கண்கள் அயர்ந்துவிட்டன.

**கா**லையில், காபி, பலகாரத்துக்குப் போகாததனுல் வேலைக்காரி வந்து, கதவைப் பலமாகத் தட்டியபோதுதான் அவளுக்கு விழிப்பு வந்தது.

ஒன்பது மணி சுமாருக்கு நீராடி, கூந்தலை வாரிக்கொண்டு, புது ஆடையை அணிந்து, மனத்துக்குச் சிறிது நிம்மதியை உண்டாக்கிக்கொண்டிருக்கும் சமயத்தில் வேணு வந்து சேர்ந்தான். அவனை அவள் எரித்துவிடுவதுபோல் பார்த்தாள். அவனும் அவளுடைய சிவந்த கண்களையும், ஓயாது அழுகையால் வீங்கிக் கிடந்த முகத்தையும் கவனித்தான்.

“ஏன் என்னை இப்படிச் சித்திரவதை செய்கிறீர்கள்? அம்மாவைக்கூட ஒரு வாரம் வரையில் வரவேண்டாம் என்று சொன்னேனே. உங்களுக்குப் புண்ணியம் உண்டு. இனி இங்கே வராதீர்கள்! உங்கள் நோக்கம் எனக்குத் தெரிந்துவிட்டது. என் எண்ணத்தையும் உங்களுக்குச் சொல்லிவிட்டேன். மறுபடியும் சொல்கிறேன்: நான் கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை! அதுவும்—” என்று அவள் பேச்சை அடக்கிக் கொண்டாள்.

“நான் என்ன செய்தேன், நீலா!—”

“இன்னும் என்ன செய்ய வேண்டும்? பச்சைப் புண்ணில் கோலை இடுவது போதாதா?”

“என்னை மன்னித்துவிடு. விஷயம் தெரியாமல் வந்துவிட்டேன்” என்று வெகு பணிவுடன் வேணு விடை பெற்றுக் கொண்டு போய்விட்டான்.

**நா**லைந்து தினங்களுக்குள் பிரேமா திரும்பி வரவே, அவளோடு சுற்றி அலைவதில் நீலாவின் மனப் புண்ணுக்குச் சிறிது

சாந்தி ஏற்பட்டது. ஒரு நாள் நீலாவும் பிரேமாவும் ஒரு கடையில் சோப்பு முதலிய சாமான்களை வாங்கிக்கொண்டிருந்தபொழுது, அதற்குச் சமீபத்தில் மாடியிலிருந்த ஒரு பாங்கிக்குள் வேணு நுழைவதைப் பிரேமா பார்த்தாள். உடனே நீலாவிடம் அதை ரகசியமாகச் சொன்னாள்.

"நம்மைப் பார்த்தாரா?" என்று நீலா பதற்றத்தோடு கேட்டாள்.

"இல்லை!"

"சரி, நாம் சீக்கிரம் இதை விட்டுப் போய்விட வேணும். அவர் பெரிய நச்சு. அகப்பட்டுக்கொண்டால் விடமாட்டார்" என்று அவள் பிரேமாவுடன் விரைந்து சென்றாள். நடந்து போய்க்கொண்டிருக்கும்பொழுது, "அவர் நல்லவர் இல்லை" என்று பிரேமா தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள்.

நீலா பிரமித்துத் திரும்பிப் பார்த்து, "ஏன் அப்படிச் சொல்றே?" என்று கேட்டாள்.

"என்னவோ அவர் மூஞ்சியைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை—அப்புறம்—நான் உன் கிட்டே சொல்ல மறந்துட்டேன், நீலா! அன்னிக்கிக் குஸுமான்னு ஒருத்தி உன்னைப் பார்க்க வரவில்லை?—மயக்கம் போட்டுக் கூட கீழே விழுந்தாளே—அவள் அவராலே எவ்வளவு அழுதாள் தெரியுமா?"

"என்ன, என்ன?"

"மயக்கம் தெளிஞ்சு இறங்கிப் போனபோது, அவர் என்ன சொன்னாரோ என்னவோ? விக்கி விக்கி அழுதாள். அதை நினைத்துக்கொண்டால் எனக்கும் அழுகை வருது. ஒரு தடவை திரும்பிக்கூட அவரைப் பார்த்தாள்."

"ஊஹூம்! அவர் கடலூரிலே இருந்தபோது, அவள் குடும்பத்தையெல்லாம் அவருக்கு நன்றாய்த் தெரியுமாம்!" என்று சொல்லும்போதே, நீலாவின் மூளை அநேக விஷயங்களைப் பிணைத்து, வேலை செய்ய ஆரம்பித்தது. வேணு, நீசன் என்ற அபிப்பிராயம் உறுதியானதால், எந்த விதத்தில் மதனின் நடத்தையை ஏற்றுக்கொள்ள முடியும்? அவன் பச்சைக் குழந்

தையா? அல்லது, குடிகாரனு?—குடி வெறியில் ஏதோ செய்து விட்டான் என்று சொல்வதற்கு? இருவரும் பதர்களே! ஆண்களே மோசக்காரர்கள்! என்ற எண்ணமும் அவளுக்கு உதித்தது.

ஒரு நாள் மாலையில் நீலா கல்லூரிப் புத்தகாலயத்தில் வெகு நேரம் படித்துவிட்டு, ஹாஸ்டலுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தாள். அச்சமயம் தற்செயலாக அந்த வழியே காரை ஓட்டிக்கொண்டு போன வேணு, அவளைக் கண்டதும் வண்டியை நிறுத்தி, அவளிடம் வந்து சம்பாஷிக்கத் தொடங்கினுன். நீலாவின் அருவருப்பையும் சட்டை செய்யாமல், தன் இஷ்டத்துக்கு இணங்கும்படி அவளை வற்புறுத்த ஆரம்பித்தான்

"என்னை இமிசை செய்யவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறீர்களா? இல்லாவிட்டால் மூளைப் பிசகா!" என்று அவள் எரிந்து விழுந்தாள்.

"ஐயோ! நான் ஏன் உன்னை இமிசை செய்கிறேன், நீலா! நீ என்ன சொன்னுலும் கேட்கிறேன். நாயினு வேண்டாமென்ருல், உங்கள் மாமாவை வைத்துக்கொண்டு வேண்டியதையெல்லாம் எழுத்து மூலமாக...."

"போதும்! போதும்! நான்தான் எனக்குக் கல்யாணம் வேண்டாம் என்று அடித்துக்கொள்கிறேனே! ஐயோ! அதோ மதன் வருகிருர்" என்னும்போதே, அவளுடைய கைகள் அவளை அறியாமலே, ஆடையிலிருந்து கூந்தல் வரையிலும் சீர்ப்படுத்திக்கொண்டன. பிறகு, "அவரைக் கண்டு கொள்ள எனக்கு இஷ்டமில்லை. நீங்கள் போய் வாருங்கள்" என்று விரைந்து நடந்தாள். ஆனுல் வேணுவும் பின் தொடர்ந்தான்.

எதிரில் வெகு தூரத்தில் மதன் வந்துகொண்டிருக்கும் போதே அவளுக்கு உண்டான பரபரப்பை வேணு கவனியாமல் போகவில்லை. அதன் அறிகுறியும் அவனுக்கு விளங்காமல் இல்லை. ரத்தக் கொதிப்பு உண்டாயிற்று. அவனுக்கு முட்டுக்கட்டை மதன் ஒருவன்தான். சந்தேகம் இல்லை.

அவனை எப்படியாவது ஒழித்து விடவேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தான். மதன் நெருங்க நெருங்க, நீலாவின் வேகமும் அதிகரித்தது; ஆனால் தலை நிமிர்ந்து பராமுகமாகச் சென்றாள். மதன் வெகு சமீபத்தில் வந்துவிட்டான்; நீலாவின் செருக்கையும் வேணுவின் தாபத்தையும் உணர்ந்தான். "நீலா!" என்று அழைத்தான்.

ஆனால், நீலா காதில் ஒன்றும் படாததுபோல் நடித்து நடந்தாள். அப்பொழுது, மதன் திடீரென்று அவள் முன் நின்று, "என்ன சங்கதி, நீலா?" என்று கேட்டான்.

நீலாவின் கண்களில் தீப்பொறி பறந்தது. "பெண்களை வழி மடக்குவதுதான் உங்கள் பிழைப்பா!" என்று உறுமினாள்.

மதனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. முகம் வெளுத்தது. மறு கணத்திலேயே, சினத்தால் முகம் செங்குரங்கைப்போல் சிவந்துவிட்டது. "என்ன உளறுகிறாய்!" என்று கர்ஜித்தான். அவனுடைய முகமாற்றம் நீலாவையும் ஒரு கணம் பிரமிக்கச் செய்தது.

வேணு குறுக்கிட்டு, "மரியாதையாகப் பேசய்யா!" என்றான்.

மதனுக்குக் கோபம் மேலும் அதிகரித்தது. "உமக்கு மரியாதை என்ன என்பது தெரியுமா? தெரிந்தால் எங்கள் பேச்சில் தலையிட்டுக்கொள்ள மாட்டீரே!"

"நான்ஸென்ஸ்! நான் மணந்துகொள்ளப் போகும் பெண்ணை நீ வழி மடக்குவதும் அல்லாமல்...."

"அய்யோ! அய்யோ! நானா! உங்களை மணந்துகொள்வதை விட இந்தக் கடலில் விழுந்து சாகலாமே! எவ்வளவு தைரியம்! என்னை யார் என்று நினைத்தீர்கள்? நானும் குஸுமா அல்ல. ஜாக்கிரதை! தொலைத்துவிடுவேன்!" என்று நீலா சக்தி ஸ்வரூபமாகக் கர்ஜித்தாள்.

வேணுவுக்கு அடி வயிற்றில் இடி விழுந்தது. இனி அவள் எட்டாப் பழம் என்று தெரிந்துகொண்டான். பற்பல

உணர்ச்சிகள் அவனைத் தாக்கின. அவைகளில் கோபாவேசமே சுடர்க் கொடி எடுத்தது. புத்தி மயங்கியது. விஷயம் முழு தும் தெரியாமல், வேணுவையும் நீலாவையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்த மதனை, "பிச்சைக்காரப் பயலே! எல்லாம் உன்னாலேதான்!" என்று இருந்தாற்போல் இருந்து அடி வயிற்றில் ஓங்கி உதைத்தான். மதன், சுருண்டு விழுந்தான். ஆனால், "ஐயோ!" என்று அலறிக்கொண்டு, நீலா அவனுக்குச் சகாயம் செய்ய ஓடி வருவதற்குள், ஒரு கணத்தில் அவனே எழுந்து, வேணுவைத் துரத்திக்கொண்டு போய், வேணு கலகலத்துப் போகும்படி ஒரு குத்து விட்டான்.

இருவரும் கை கலந்தனர். மதன் கல்லூரியில் குத்துச் சண்டை பயின்றவன் என்பது வேணுவுக்குத் தெரியாததால், தன்னை நையப் புடைக்க அவன் மதனுக்கு வேண்டிய அவகாசத்தைக் கொடுத்தான். விஷயம் தெரியாமல், அடிவயிற்றில் புண்பட்ட மதனை வேணு அடித்துக் கொன்றுவிடுவானோ என்ற பயத்தால், நீலா கூக்குரலிட்டுக்கொண்டு ஓடி வந்தாள்; ரஸ்தாவின் மீது கிடந்த ஒரு வாழைப்பழத் தோலின்மீது காலை ஊன்றவே, தடார் என்று சறுக்கிக் கீழே விழுந்தாள். வேணு மதன் சண்டையை வேடிக்கை பார்க்க வந்த கும்பல் இப்பொழுது நீலாவிடத்துக்கு ஓடியது.

சத்தத்தைக் கேட்ட மதன், வேணுவை விட்டு விட்டு, பதைக்கப் பதைக்க அவளிடம் ஓடி, மெள்ளத் தூக்கி விட்டான். ஆனால் நீலாவால் நிற்கவும் முடியவில்லை. இடுப்பில் ஏதோ எலும்பு பிசகிவிட்டது என்பதை மதன் கண்டுகொண்டான். வலி பொறுக்க மாட்டாமல் பல்லைக் கடித்துக்கொண்டு வாய் திறவாமல் நீலா அழுதுகொண்டிருந்தாள்.

ரஸ்தாவில் போய்க்கொண்டிருந்த ஒரு மோட்டார் வண்டியை நிறுத்தி, அவளை அதில் போட்டுக்கொண்டு, மதன் பெரிய ஆஸ்பத்திரிக்கு விரைந்தான்.

இவ்வளவு அமளி நடந்தும், வேணு அவர்கள் பக்கம் திரும்பிப் பார்க்காமல், தன் முகத்தைத் துடைத்துக்கொண்டு, வண்

டியில் ஏறிக்கொண்டு போய்விட்டான். எலும்புப் பிசகு என்று கண்டு பிடிக்க வெகுநேரம் ஆகவில்லை. பிறகு, சிகிச்சை செய்ய, அதற்காகப் பிரத்தியேகமாக இருந்த இடத்துக்கு அவள் எடுத்துச் செல்லப்பட்டாள். மதன், 'கடவுளே!' என்று வாடிய முகத்துடன் வெளியே காத்துக்கொண்டிருந்தான். எல்லாப் பொறுப்பையும் தானே எடுத்துக்கொண்டு, புண்ணியகோடி மாமாவுக்குத் தெரிவிக்காமல் இருப்பது பெரிய தவறென்று அவனுக்கு அப்போது தோன்றியது; உடனே டெலிபோன் இருக்கும் இடத்துக்கு ஓடினான். புண்ணியகோடியும் அவர் மனைவியும் வீட்டில் இல்லை. அதன்மேல், நீலா காலில் அடிபட்டு பெரிய ஆஸ்பத்திரிக்கு வந்திருப்பதாகவும், அவர்கள், வீட்டுக்குத் திரும்பியதும், உடனே ஆஸ்பத்திரிக்கு வர வேண்டும் என்றும் தகவல் சொன்னான். பிறகு நீலா இருந்த இடத்திற்கு ஓடி வந்தான். சிறிது நேரத்துக்கெல்லாம், நீலா வெளியில் கொண்டு வரப்பட்டாள். சிகிச்சை செய்த பாகத்துக்கு மாத்திரம் உணர்வை இழக்க மருந்தை ஏற்றியிருந்ததால், அவளுக்குத் தன் நினைவு இருந்தது. மதன், நீலா படுக்கையில் அமர்த்தப்பட்டாள் என்று தெரிந்ததும், ஒரு முறை அவளைப் பார்த்துவிட்டுப் போவதாகத் தயங்கித் தயங்கி, நர்ஸைக் கேட்டுக்கொண்டான்.

"ரொம்ப நேரம் இருக்கக் கூடாது!" என்று அவள் எச்சரித்தாள். மதன் நீலாவை அணுகிக் கையை அன்புடன் பிடித்துக்கொண்டு, "பயப்படாதே! ஒரு வாரத்துக்குள் சரியாகிவிடுமாம்; டாக்டர் சொன்னார்" என்றான்.

அவள் அவனை விழித்துப் பார்த்தவாறு இருந்தாள். பிறகு, "அம்மாவுக்கும் அப்பாவுக்கும் வரும்படி டெலிபோன் செய்திருக்கிறேன்" என்றான். அவன் அதைச் சொன்னதுதான் தாமதம். அவளுக்குப் பொங்கி வந்த கோபத்தைச் சொல்லி முடியாது! "உங்களை நான் செய்யச் சொன்னேனா? தயவு செய்து வெளியே போங்கள், போய்விடுங்கள்!" என்று புத்தி ஸ்வாதீனம் இல்லாதவள்போல் அழ ஆரம்பித்தாள். மதன், துக்கம் நெஞ்சை அடைக்க வெளியேறினான். பக்கத்தில் இருந்த நர்ஸ்

மெள்ளச் சமாதானப்படுத்தி, "அவர் யார்?" என்று கேட்டாள்.

"எங்கள் குடும்பத்துக்குத் தெரிந்தவர்...நர்ஸ் அம்மா! என் நாயினுவும் அம்மாவும் வந்தால், என்னைப் பார்க்க விடாதேயுங்கள்!"

நர்ஸ் பிரமித்துப் போனுள். "ஏன்?"

"அப்படித்தான். எங்கம்மா மாத்திரம் தனியாக வந்தால் வரட்டும். ஆனுல், நாயினு வரக் கூடாது!" என்று வெறி பிடித்தவள்போல் இரைந்தாள்.

புண்ணியகோடியும், அவருடைய மனைவி சாரதாம்பாளும் அடித்துப் புடைத்துக்கொண்டு ஓடிவந்தபொழுது, நர்ஸ் புண்ணியகோடியை உள்ளேவிட முடியாது என்று தடுத்துவிட்டாள். புண்ணியகோடியின் நிஜஸ்வரூபம் வெளியே வந்தது. "நீ யார் என்னை நிறுத்துவதற்கு! பெற்ற தகப்பன் தன் குழந்தையைப் பார்க்கக் கூடாதா? என்னை யார் என்று நினைத்தாய்? எட்டிப் போ!" என்று கூச்சல் போட்டார்.

அவர் கூச்சல் போட்டது நீலாவுக்குக் கேட்காமல் போகவில்லை. "நர்ஸ், விடாதீங்க! என்னைப் பாக்கக் கூடாது! விட்டீங்களானுல் கட்டை அவிழ்த்துவிடுவேன்! செத்துவிடுவேன்!" என்று படபடவென்று நீலா தலையில் அடித்துக்கொண்டாள். அதன்மேல் நர்ஸ், "அந்த அறையிலே டாக்டர் இருக்கார். அவரண்டை சொல்லுங்க" என்று கதவை மூடினுள்.

டாக்டர், நர்ஸை வரவழைத்து, விஷயத்தைத் தெரிந்துகொண்டதும், நிதானமாகப் புண்ணியகோடியினிடம் சொன்ஞர்: "அந்தப் பெண் 'ஹிஸ்டெரி'கலாக இருக்கிருள். இப்பொழுது, அவள் மனத்தை இன்னும் கலக்கக் கூடாது. தெரியல்லே? எங்களுக்கும் பொறுப்பு இல்லையா? என் பேச்சைக் கேளுங்கள். நாளைக்குக் காலையிலே வாருங்கள். நான் எப்படியாவது, அந்தப் பெண்ணுக்கு நல்ல வார்த்தை சொல்லி, உங்களைப் பார்க்கவிடுகிறேன். தயவு செய்து போய்வாருங்கள்."

இப்பொழுது, உள்ளே சென்ற நர்ஸ் மறுபடியும் திரும்பி வந்து, "அந்த அம்மாள் இங்கேயே இருக்காங்களாம், அவரை வீட்டுக்குப் போகச் சொல்றுங்க" என்றுள்.

"பின்னே என்ன, ஸார்? தாயாருக்கு மிஞ்சியா? உங்களுடைய குழந்தையின் நலனுக்காகவே நீங்கள் இப்போது பார்க்கக் கூடாது" என்று டாக்டர் கழுத்தைப் பிடித்துத் தள்ளாக் குறையாகப் புண்ணியகோடியை அனுப்பி வைத்தார்.

புண்ணியகோடி முகத்தைத் தொங்க விட்டுக்கொண்டு, கீழே இறங்கி, காத்திருந்த மோட்டார் வண்டியில் ஏறிக்கொண்டார். வண்டி வீட்டுக்கு ஓடியது. ஆனுல் வீட்டில் என்ன இருந்தது? அவர் மனத்திலும் இதயத்திலும் விஸ்தரிக்க முடியாத ஒரு கலக்கம் ஏற்பட்டுவிட்டது. தன் குழந்தை நீலா, என்ன நிலைமையில் இருந்தாளோ? பிழைப்பாளோ, சாவாளோ! அத்தருணத்திலும் தன்னைக் காண்பதற்கு இஷ்டம் இல்லாதபடி அவர் அப்படி என்ன செய்துவிட்டார்! குழந்தையின் மனம் எவ்வளவு ஆழமாகப் புண்பட்டிருக்க வேண்டும்! குற்றமெல்லாம் தன்னுடையதுதாளு? அவர் படும் பாடெல்லாம் எதற்காக, யாருக்காக? வீடு வந்துவிட்டது. இறங்கினுர். சட்டைத் துணியையும் வழக்கம்போல் எடுத்து எறியாமல், ஊஞ்சல் பலகையின்மீது உட்கார்ந்துகொண்டார். பிறந்ததிலிருந்து தம் வாழ்க்கை, திரைப்படச் சுருள்போல், சுழன்று ஓடியது.

இப்பொழுது ஸைகிள் மணி ஓசை கேட்டது. ஒரு தந்திச் சேவகன் உள்ளே நுழைந்து, ஒரு தந்தியைக் கொடுத்தான். பக்கத்து வீட்டுப் பையனை உடனே அழைத்து, அதைப் படிக்கச் சொன்னுர். 'அஸ்ஸாம் மாகாணத்தில் பூகம்பத்தால், மலைச் சாரல்களில் ஒண்டிக்கொண்டிருந்த ஜனங்களுக்கு, சேஷாத்திரி விமானத்தில் ஆகாரத்தைப் போட்டுவிட்டுத் திரும்பும் போது, விமானத்துக்கு விபத்து ஏற்பட்டு, அழியாப் புகழுடன், வீர சுவர்க்கம் அடைந்தான்' என்று இருந்தது தந்தி.

தலையில் இடிவிழுந்தாற்போல் புண்ணியகோடி சாய்ந்தார். சற்றைக்கெல்லாம் எழுந்து, "ஹோ!" என்று கதறி, தேம்பித்

தேம்பி அழுதார். அநாதையாக, அன்போடு ஆதரித்து ஆறுதல் சொல்ல ஒரு காக்கைக் குஞ்சுகூட இல்லாமல் புழுவாய்த் துடித்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் பக்கத்து வீட்டுக்காரர் வந்தார். பரிவோடு சமாதானம் செய்ய முயன்றார். ஆனால் புண்ணிய கோடிக்குச் சமாதானம் எப்படி ஏற்படும்? மற்றும் சிலரும் வந்தனர். இந்தச் சங்கதியை ஆஸ்பத்திரிக்கு உடனே தெரிவிக்கக்கூடாது என்று அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். புண்ணிய கோடி, திக்குத் திசை தெரியாமல் எல்லாவற்றிற்கும் தலையை அசைத்தார். வந்தவர்கள் ஒவ்வொருவராக வெளியேறினர். புண்ணியகோடி, விடிய விடியக் கண் கொட்டாமல் உட்கார்ந்து கிடந்தார். துயரம் கண்ணீரின் எல்லையைத் தாண்டிவிட்டது. காலையில், ஆஸ்பத்திரிக்கு நீலாவின் தாயாரை அழைத்து வரக் கார் அனுப்பப்பட்டது.

இதே சமயத்தில், காலைப் பத்திரிகையில் இருந்து செய்தியைத் தெரிந்துகொண்ட மதனின் குடும்பத்திலும் ஒரே பரபரப்பு ஏற்பட்டது. ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்துக்கே நேர்ந்த ஆபத்தைப்போல் துக்கத்தில் மூழ்கினர். "பாவி மனிதன், கண்ணுகால் தெரியாதே குதித்தானே! இப்படி வந்துட்டுதே!" என்று வேதவல்லியம்மாள் வருந்தினாள்.

"இப்பத்தானா நீலாவும் காலை ஒடிச்சுக்கணும்!—ஐயோ கடவுளே! அந்தம்மா அப்பாவி ஆயிட்டுதே! தைரியம் சொல்லக்கூட யாரும் இல்லையே!—நான் போய் வரட்டுமா, அக்கா?" என்று மதனின் தாயார் அருமிதவல்லி கேட்டாள்.

"போகத்தான் வேணும், அம்மா! ஆனால், அந்தப் பாவி மனிதனை நம்பறத்துக்கு இல்லையே! திட்டித் துரத்தினால் என்ன செய்யறது?"

"நான் போய் வரேன், பெரியம்மா. என்னைத் திட்டிக் கொள்ளட்டும்."

"சரி, போ. அப்புறம் அந்தக் குழந்தை பிரேமா என்ன தவிக்குதோ!"

"நீலா, ஆஸ்பத்திரிக்குப் போனதுகூட அவளுக்குத் தெரியாது" என்று சொல்லிக்கொண்டே, மதன் வெளியே விரைந்து சென்றான். அவனை அறியாமல் அவனுக்குக் கண்ணீர் பெருகத் தொடங்கியது. ஒரு மரத்தடியில் நின்று, முகத்தைத் துடைத்துக்கொண்டபொழுது புண்ணியகோடியின் கார் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்துகொண் டிருந்தது. வண்டியில், சாரதாம்பாள் அம்மாளோடு, பிரேமாவும் உட்கார்ந்திருந்தாள். அவள் எப்படி, எப்பொழுது ஆஸ்பத்திரிக்குப் போனாளோ என்று அவன் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, பிரேமா "அவனைப் பார்த்துவிட்டாள். அத்தையிடம் சொன்னாள். சாரதாம்பாள் அம்மாள் உடனே வண்டியை நிறுத்தச் செய்தாள். மதன் துக்கத்தால் உருகித் தவிப்பதை உணர்ந்தாள். அவன் உயிரெல்லாம் நீலா மேலேதானே!" என்று சொல்லி, சாரதாம்பாள், "வண்டியிலே ஏறு, அப்பா!" என்று அழைத்தாள். மதன் வாய் திறவாமல் மறுத்து, அவர்களைப் போகும்படி சமிக்ஞை செய்தான். டிரைவர் ஆனையப்பன் மதனை உற்றுப் பார்த்தான். "தந்தி வந்தது தெரியுங்களா?" என்று மெல்லக் கேட்டான். "தெரியும், நீ போ!" என்று அவனை அவ்விடத்தை விட்டு விரட்டினான்.

தந்தி என்றதும், சாரதாம்பாள் அம்மாளுக்குத் திடுக்கிட்டது. பிரேமாவுக்கும் ஒன்றும் புரியவில்லை. "என்ன தந்தி?" என்று அவள் கேட்டுக்கொண் டிருக்கும்போதே, வீட்டு வாசலில் காரை நிறுத்தினான்.

## 12

மனைவியைக் கண்டதும், புண்ணியகோடி ஓடி வந்தார். "சாரதா! குடி முழுகிப் போயிட்டுதே! தலையிலே கல்லைப் போட்டுவிட்டானே!"

"என்ன! என்ன! சொல்லுங்களேன்!" என்று, துக்கம் தொண்டையை அடைக்க அவள் கதறினாள். புண்ணிய

கோடி, நாவில் வார்த்தை எழும்பாமல், அழுது தவித்தார். அப்பொழுது பக்கத்து வீட்டு முதலியாரின் மனைவி, சாரதாம்பாளைக் கட்டி அணைத்து, "அம்மா விதி யாரைவிட்டது! விமானம் உடைந்து சேஷாத்திரி விழுந்து..." என்றாள்.

"பிழைத்திருக்கானா, இல்லையா!" என்று சொல்லி நிறுத்தினாள்.

"தவறிவிட்டான்!"

"ஐயய்யோ!" என்று கூக்குரல் இட்டுக்கொண்டு சாரதாம்பாள் தரையில் விழுந்து, புரண்டாள். பிரேமா நெஞ்சம் உடைந்துவிடுவதுபோல் திணறத் திணறத் தேம்பினாள்.

"சாரதா, சாரதா!" என்று புண்ணியகோடி, தம் மனைவியை மெள்ள உட்கார வைத்தார். சாரதாம்பாள் அம்மாளின் மிரண்ட விழிகளில் ஒரே சித்தப்பிரமை. ஒரு கணம் புண்ணியகோடியின் முகத்தைப் பார்த்தாள்.

வாயில்லாப் பூச்சியான அவள் முகத்தில் ஒரு பேய், தாண்டவம் ஆடுவதுபோல் இருந்தது. எங்கிருந்து வந்ததோ அந்தக் கோரத் தோற்றம்! "வாயிலே போட்டுக்கிட்டீங்களா! என் கண்ணனை வாயிலே போட்டுக்கிட்டீங்களா!" என்று பற்களைக் கடித்தாள். "நான் பெத்தது ரெண்டையும் ரெண்டு விதம் ஆக்கிட்டீங்களா! ஊம்! வீட்டைத் துடைத்து, நீங்களே வாழுங்கள்! நானும் போறேன்! போறேன்!" என்று பித்துப் பிடித்தவள்போல் கொல்லைப்புறம் ஓடினாள். அங்கிருந்த ஸ்திரீகள் அவளைக் கட்டிப் பிடித்தனர். பிரேமாவும், "அத்தை! அத்தை!" என்று கதறினாள்.

பிரேமாவின் குரலைக் கேட்டதும், சாரதாம்பாள் அம்மாள் அவளைத் தலையெடுத்துப் பார்த்தாள். அவளைத் தாவி அணைத்துக்கொண்டு, "என் கண்ணே! உன் அத்தானைக் கொன்னுட்டாங்களடி! இனி உன் அத்தானைக் காண முடியாதே!" என்று அலறி அழுதாள்.

அவ்விருவரும், பார்த்தோர் மனம் உருகிக் கரையும்படி குலுங்கிக் குலுங்கி அழுதனர்.

"நான் என்ன செய்தேன்? அந்தக் கடன்காரப் பாவி கிருஷ்ணனல்ல என் குடியைக் கெடுத்தான்! அவன் மகனும் சாகமாட்டானு!" என்று புண்ணியகோடி சபித்துக்கொண்டிருக்கையில், மதன் உள்ளே நுழையப் போவதைக்கண்ட டிரைவர் ஆனையப்பன் ஓடி, அவனைத் தெருவுக்கு இழுத்துக் கொண்டு போய், "இப்போ வராதீங்க! உங்களைத்தான் திட்டிக் கிட்டு இருக்காரு. போங்க, போங்க" என்று துரத்தி விட்டான்.

மதன், என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டுக்குத் திரும்பி வந்து, தன் தாயாரோடும், பெரிய தாயாரோடும் ஆலோசித்தான். "அவருடைய போக்கே ஒரு போக்கு! மனக் குமுறலுலே நாலையுந்தான் சொல்வார். அதையெல்லாம் நாம் கவனிக்கக் கூடாது" என்றாள் வேதவல்லியம்மாள்.

"இப்பவும் சேஷாத்திரி இறந்தது நாயினுவாலேதான்னு அடித்துக்கொள்கிறரே! இதென்ன பயித்தியம்?" என்றான் மதன்.

"பயித்தியம், பயித்தியம் இல்லைன்னு சொல்வதற்கு நாம் யார்? அவர் வயிறு எரியறது அவருக்கல்ல தெரியும்! இப்போ நாம் செய்ய வேண்டிய வேலையைப் பார். இனி அவருக்கு ஆறுதல் அந்தக் குழந்தை நீலா ஒருத்திதான். அவளும் இடுப்பை ஒடித்துக்கொண்டு, விழுந்து கிடக்கிறள். தடாபுடான்னு யாராவது அவள் மனம் உடையும்படி அவளுக்குச் சங்கதியைச் சொல்றதுக்கு முந்தி, இந்தப் பாழும் செய்தியை நாம்தான் அவள் காதுலே போடணும். அந்தப் பொறுப்பு உன்னுது தானேடா அப்பா, மதனு!" என்றாள் வேதவல்லியம்மாள்.

"என்னைக் கண்டால்தான், அவளுக்குக் கோபம் கோபமாக வருகிறதே, பெரியம்மா."

"அவள் என்ன சொன்னலும் பட்டுக்க வேண்டியது தான்! அந்தக் குடும்பத்துக்கு இதைவிடப் பெரிய கஷ்டம் எதுடா வரும்!" என்று சொல்லும்போதே அவளுக்குக் கண்

கலங்கிவிட்டது. "சரி, அமிருதம், நானும் மதனோடு ஆஸ்பத்திரிக்குப் போய் வருகிறேன். நீ வீட்டைக் கவனித்துக் கொள்" என்று தங்கையிடம் சொல்லிவிட்டு, மதனை அழைத்துக்கொண்டு, வேதவல்லியம்மாள் ஆஸ்பத்திரிக்குப் போனாள்.

அவர்கள் போனபோது, நீலா தூங்குவதுபோல் கண்களை மூடிக்கொண்டிருந்தாள்; ஆனால், உண்மையில் தூங்காததால், யாரோ நெருங்குவதை உணர்ந்து, கண்களைத் திறந்து பார்த்தாள். அவள் விழிகளைக் கண்டதும், மதன் மளமளவென்று கண்ணீர் சொரிந்துவிட்டான். சிறிது காலமாகவே மதனின் நடத்தையில் உண்டாகியிருந்த சில மாறுதல்களை அவள் கவனித்து வந்தபடியால், "அழுவானேன்?" என்று கேட்டாள்.

"பெரியம்மா உன்னைப் பார்க்க வந்திருக்கிறாள்" என்று சொல்லும்போதே, மதன் துக்கத்தை அடக்க முடியாமல், தேம்ப ஆரம்பித்தான்.

"அதற்கு இவ்வளவு அழுகை என்ன? பெரியம்மா எங்கே?" என்று நீலா படபடப்போடு கேட்டாள்.

இப்பொழுது, சஞ்சலம் பொறுக்க முடியாமல் இருந்த வேதவல்லியம்மாள் தானே உள்ளே நுழைந்து, "அம்மா! நீலா!" என்று நீலாவின் கைகளைப் பிடித்துக்கொண்டாள். பிறகு, மெள்ளச் சமாளித்துக்கொண்டு, "அம்மா, இந்த உலகத்திலே பிறந்தது இறப்பதற்கே! கஷ்டப்படுவதற்கே! துக்கப்படுவதற்கே!" என்றாள்.

அவளுடைய குமுறலைக் கண்டு திடுக்கிட்ட நீலா, "என்ன சொல்லறே, பெரியம்மா!" என்று கேட்டாள்.

"இருந்தாற்போல் இருந்து, இந்த ஆபத்து உனக்கு வருமின்னு யாருக்குத் தெரியும், அம்மா? எல்லாம் ஆண்டவன் செயல்! இல்லாதபோனால் சேஷாத்திரியின் விமானம் உடைவானேன்! அவன் எரிஞ்சு..."

"என்ன! என்ன!" என்று ஆவேசம் பிடித்து, நீலா எழுந்து உட்கார முயன்றாள். ஆனால், நர்ஸும் மதனும் அவளைத் தடுத்துப் பிடித்துக்கொண்டார்கள்.

"அவன் மாயமாக மறைந்துவிட்டான், அம்மா! பத்தரை மாற்றுத் தங்கம்! சுவர்க்கத்திற்குத்தான் போயிருப்பான்!"

"நிஜத்தைச் சொல்லேன்!" என்று நீலா மதனின் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டு, கெஞ்சி அழுதாள். படபடப்புடன், மதன் அவளுக்கு விவரமாக விஷயங்களைத் தெரிவித்தான்.

"அண்ணு! அண்ணு!" என்று நீலா தேம்பிக் கதறினுள். பிறகு, திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவள்போல், "அய்யோ! நயினு எப்படித் துடிக்கிருரோ! நேற்று என்னைப் பார்க்கக் கூடாதுன்னு துரத்தி அடித்தேனே! அம்மா! நாயினு! நான் இங்கே விழுந்து கிடக்கிறேனே! ஸிஸ்டர், தயவு செய்து டாக்டரைக் கூப்பிடுங்கள்! நான் வீட்டுக்குப் போக வேண்டும்! எங்கம்மாவையும் நாயினுவையும் கட்டி அணைத்து ஆதரிக்க வேண்டும்!" என்று மேலே பேச முடியாமல் 'ஹோ!' வென்று கதறினுள்.

"இப்பொழுது எப்படி அம்மா, நீ நகரமுடியும்?" என்ருள் நர்ஸ்.

"எல்லாம் நகரலாம், எலும்பு ஒடியவில்லை. பூட்டுத்தான் நழுவி யிருந்தது. அதையும் சரிப்படுத்தி ஆகிவிட்டது. டாக்டரே சொன்னுரே. தயவுசெய்து கூப்பிடுங்கள், அம்மா!"

"அவர் வந்திருக்காரோ, இல்லையோ?"

"வந்துவிட்டார் என்று நினைக்கிறேன். நான் அவரைக் கண்டு பேசி வருகிறேன்" என்று மதன் விரைந்து சென்ருன்.

சில நிமிஷங்களுக்குள் மதன் டாக்டரை அழைத்துக் கொண்டு வந்தான். அவரைக் கண்டதும், "டாக்டர்! நான் வீட்டுக்குப் போக வேண்டும், வீட்டுக்குப் போக வேண்டும்!" என்று அழ ஆரம்பித்துவிட்டாள் நீலா. விஷயங்களை எல்லாம் தெரிந்துகொண்ட டாக்டர், "இன்னும் ஒரு நாள் இருந்தால் நல்லது" என்று சொல்லி முடிப்பதற்குள், "என்னுலே முடியாது! முடியவே முடியாது, டாக்டர்!" என்று மேலும் அழத் தொடங்கினுள்.

"சரி, கட்டு அவிழ்ந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நகரக் கூடாது! வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அநுபவமுள்ள டாக்டரை வைத்துக்கொண்டு சிகிச்சை செய்ய வேண்டும்."

"நீங்களே வாருங்கள், டாக்டர்! அப்போதான் எங்கள் நாயினுவுக்கு மனசுக்குச் சமாதானமாக இருக்கும். செலவைப் பற்றிக் கவலையே இல்லை."

"வீட்டில் வசதி இருக்குமா?"

"எங்கள் வீட்டிலே ஒரு ஆஸ்பத்திரி வைக்கலாம்! தயவு செய்து நீங்களே வரவேண்டும்" என்று அவள் கை கூப்பிக் கேட்டுக்கொண்டாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம், ஓர் ஆம்புலன்ஸ் வண்டி கொண்டுவரப் பட்டது. அதில் உதவிக்கு இருந்த சிப்பந்திகளோடு, வேதவல்லியம்மாளும் துணையாக இருந்தாள். வண்டியில் ஏறிக்கொள்ள மதனும் ஆசைப்பட்ட போதிலும், வேதவல்லியம்மாள் அவனைத் தடுத்துவிட்டாள்.

ஆம்புலன்ஸ் வண்டி, நீலாவின் வீட்டு வாசலில் நின்று, அதில் நீலா வந்திருக்கும் சங்கதி தெரிந்ததும், அந்த வீட்டில் ஏற்பட்ட குழப்பத்தை விஸ்தரிக்க முடியாது. எப்படியோ, ஆஸ்பத்திரியில் போட்ட கட்டுகளுக்குப் பங்கம் இல்லாமல், நீலா சுமந்துகொண்டு போகப்பட்டு, ஒரு கட்டிலில் அமர்த்தப் பட்டாள். வேதவல்லியம்மாளுக்கும் புண்ணியகோடிக்கும் மனப் போக்கில் சிறிது ஒற்றுமை இருந்ததால், அவருக்கு அந்த அம்மாள்மீது நீடித்த வெறுப்புக் கிடையாது. கைகளைப் பிசைந்துகொண்டு, "அக்கா! அக்கா!" என்று புலம்பினார்! "நீ ஏன் அம்மா, வந்தே? உனக்கும் ஒண்ணுக்கு ஒண்ணு ஆயிட்டுதின்னல், நான் என்ன செய்வேன், அம்மா?" என்று துக்கம் ததும்பக் கூறிக்கொண்டு, நீலாவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார்.

"இன்னும் கிட்டே வா, நாயினு! அம்மா! நீயும் இப்படி உட்கார்" என்று ஒரு கையால் தன் தாயின் கழுத்தையும்

மற்ெருரு கையால் தன் தகப்பனரின் கழுத்தையும் கட்டிப் பிடித்துக்கொண்டு, "அம்மா! நாயினு!" என்று இரண்டு வயதுக் குழந்தைபோல் பிதற்றிக் குமுறினுள் நீலா.

புண்ணியகோடிக்கு, இதயத்தின் பாதாளத்தில் வெகு காலமாக மூடப்பட்டிருந்த ஒரு ஜன்னல் திடீரென்று திறந்து கொண்டு, ஒளி வீசுவதுபோல் இருந்தது. தானும் தேம்பியழத் தொடங்கினுர். "அம்மா, நீலு! என்னை விட்டுப் போகாதே!" என்று கெஞ்சினுர்.

"போகமாட்டேன் நாயினு! போகவே மாட்டேன்!" என்று, தந்தையின் கழுத்தை இன்னும் பலமாகக் கட்டிக்கொண்டு விம்மினுள். நீலாவின் வருகையால் எவ்வளவு நன்மை ஏற் பட்டது என்பதை உள்ளூற உணர்ந்த வேதவல்லியம்மாள் சந்தடி செய்யாமல் அவ்விடத்தை விட்டு வெளியே சென்ருள்.

மனப்புண்ணை ஆற்ற, காலப் போக்குக்கு மிஞ்சிய மருந்து உண்டா? ஒரு வாரத்துக்குள் அவருக்குச் சற்றுச் சாந்தி ஏற் பட்டது. அகத்திலும் அமைதி குடிகொண்டது. நீலாவும் எழுந்து உட்கார ஆரம்பித்தாள். அவள் சலுகையும் தாயாரை விடத் தகப்பனுருக்கே அதிகமாகச் செலுத்தப்பட்டது. அவருடைய மனம் சின்னபின்னமாக வெட்டுண்டு கிடப்பது அவளை யன்றி வேறு யாருக்குத் தெரியும்!

ஒரு நாள் புண்ணியகோடி தன் அருமைப் புதல்விக்கு கமலாப் பழத்தை உரித்துக் கொடுத்துக்கொண் டிருந்த பொழுது, ஆனையப்பன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து, யாரிடம் கொடுப்பது என்று தெரியாமல் சற்றுத் தயங்கி, பிறகு அதை நீலாவிடம் கொடுத்தான்.

"இதை யார் கொண்டு வந்தது?"

"மதன் ஐயா."

"அவர் ஏண்டா உள்ளே வரவில்லை?"

டிரைவர், பதில் சொல்லாமல் புண்ணியகோடியைப் பார்த் தான். அவருடைய முகத்தில் ஒரு கணத்தில் படர்ந்த அருவருப்பை உணர்ந்த நீலா, "சரி, போய் அவரை நல்ல

இடத்தில் உட்கார வை" என்று டிரைவரை அனுப்பிவிட்டு, அக் கடிதத்தைப் படித்தாள். இதழ்கள் துடித்தன; பெரு மூச்சு விட்டாள்; கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகி விட்டது. புண்ணியகோடி திகில் அடைந்தார். "என்னம்மா, என்னம்மா?" என்று கெஞ்சிக் கேட்டார்.

"ஒன்றும் இல்லை" என்று கண்களைத் துடைத்துக்கொண்டு, "நாயினு! நீங்கள் கிருஷ்ணன் மாமா மீது வைத்திருக்கிற அபிப் பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். அவர் யாருக்கும் கெடுதியைக் கனவிலும் நினைக்க மாட்டார். அதுவும் நம்முடைய குடும்பத்தின் நன்மையை அவர் எப்பொழுதும் விரும்புகிற வரே. மறந்துவிட்டீர்களா, நாயினு? ஷில்லாங்குக்குப் போன போதெல்லாம் தம்மிடம் எவ்வளவோ அன்பு பாராட்டியதாக அண்ணு எழுதவில்லையா? இவ்வளவு வினையும், அவர் அண்ணு வைக் கல்லூரியில் சேர்க்காததனுல் வந்ததுதானே? அவர் போக்கே ஒரு அலாதிப் போக்கு! கொள்கையையும் வாழ்க்கை யையும் அவரால் பிரிக்க முடியாது. கொள்கை என்ருல், அவ ருக்கு அண்ணுவும் ஒன்றே, மதனும் ஒன்றே. நீங்கள் அவரை அறிந்துகொள்ளாமல் கஷ்டப்படுத்தி விட்டீர்கள்! இதைப் படித்துப் பாருங்கள்" என்று அக் கடிதத்தை அவள் தந்தையி னிடம் கொடுத்தாள்.

புண்ணியகோடி கை நடுங்க, அக் கடிதத்தைப் பிரித்து, மௌனமாகப் பின் வருமாறு படித்துக்கொண்டார். 'புண் ணியா! என்ன எழுதுவது என்று எனக்குத் தெரியவில்லை! மதன் போனுல் எனக்கு மற்றவர்கள் இருக்கிருர்கள். ஆனுல் உன் கதி என்ன? என்னுலேயே துயரத்தைத் தாங்க முடியவில் லையே! நீ என்ன செய்வாய்? மனிதனுலே உன் துக்கத்தைத் தீர்க்க முடியாது! ஆண்டவனே உன்னை ஆற்றக் கூடியவன். அடிப்பவனும் அவனே, அணைப்பவனும் அவனே! அவனிடம் சரணுகதி அடைந்துவிடு. மதனுக்கே இந்தக் கதி வந்திருந் தாலும், என் மனம் இவ்வளவு தவிக்காது. இதை நீ நம்பாமல் போகலாம். ஆனுல் என்னை ஆளும் ஈசன் அறிய இது

உண்மை! இந்தக் கொடுமைக்கு நான் எவ்விதத்திலாவது காரணமோ என்ற எண்ணம் எனக்குச் சில சமயத்தில் வரு கிறது. ஆனால், என் மனச்சாட்சிக்கு விரோதமாக நான் ஒன்றும் செய்ய வில்லையே! பாரபட்சமாக நடந்துகொள்ள வில்லையே! புத்தியீனத்தால் ஏதாவது செய்துவிட்டேனே என்று கூட என்னால் நினைக்க முடிய வில்லையே! இப்பொழுதும் என் மனத்தில் தோன்றும் ஒரு கருத்தை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. நீ வேறு விதமாக நினைத்துக்கொள் ளாதே!

'துயரத்திலேயே நாம் உண்மையைக் காண்கிறோம். பிறகு இன்ப மாயை தலை காட்டும்பொழுதே அதை மறந்து, சிறு குழந்தைகள்போல் ஒரு புண் ஆற மற்றொன்றைத் தேடிக் கொள்கிறோம்! இது என்ன வேடிக்கை! ஆனால், சிந்தனைப் பழக்கமுள்ள மனிதன், துயரத்தில் கண்ட உண்மையை எளி தில் மறக்கக் கூடாது. வாழ்க்கையில் இன்பத்துக்கும் துன் பத்துக்கும் மீறிய அமைதியைக் கொடுக்கக் கூடியது அது தான். யோசிக்க, யோசிக்க உனக்கே தெரியும். இரவும் பக லும் உனக்குச் சாந்தி அளிக்கும்படி கடவுளை நான் வேண்டிக் கொண்டே இருப்பேன்.—கிருஷ்ணன்.'

கடிதத்தைப் படித்துவிட்டு, புண்ணியகோடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோது, நீலா மெள்ள, "என்ன, நாயினா! யோசிக் கிறீர்களே? கிருஷ்ணன் மாமாவே ஒரு தினுசு. ஆனால், என்னை நம்புங்கள், அவர் ரொம்ப ரொம்ப நல்லவர்!" என்றாள்.

"ஆமாம், அம்மா, நீ சொல்வதெல்லாம் நிஜமாகத்தான் இருக்கிறது" என்று புண்ணியகோடி ஒப்புக்கொண்டார்.

"மதனை வரச் சொல்லலாமா? நம்ம கஷ்ட காலத்துக்கு அவர் என்ன செய்வார்? அவர் இல்லாவிட்டால் நான் பிழைத் திருக்க மாட்டேனே! அண்ணாவின் விஷயத்தைத் தெரிவிக்க முடியாமல் அவர் எப்படித் தத்தளித்தார் தெரியுமா?" என்று சொல்லும்போதே அவளுக்குக் கண்கள் கலங்கிவிட்டன.

ஒரு நிமிஷத்துக்கெல்லாம் உள்ளே வந்த மதன், புண்ணிய கோடியைக் கண்டதும் குழந்தைபோல் அழ ஆரம்பித்துவிட்

டான். புண்ணியகோடியின் துக்கமும் கட்டுக்கு அடங்காமல் போய்விட்டது. சில நிமிஷங்களுக்குப் பிறகு, அவர் மதனையும் நீலாவையும் தனிமையாக விட்டு விட்டு, எழுந்து சென்றார்.

நீலா ஒரு நிமிஷம் கண் கொட்டாமல் மதனைப் பார்த்தாள். "உங்களுக்கு மனது இவ்வளவு கோழை என்று நான் நினைக்கவில்லை" என்றாள். மதன் பதில் சொல்லவில்லை. ஆனால் அவள், 'நீங்கள்', 'உங்கள்' என்று மரியாதையாகப் பேசுவது அவன் மனத்தை உறுத்தியது. நீலாவோ, தன் அண்ணன் மரணத்தால் மதனுக்கு உண்டான துக்கத்தை நன்கு அறிந்தவள் ஆகையால், அவளுக்கு அவன்மீது பல காரணங்களால் ஏற்பட்ட கோபமும் தணிந்துவிட்டது. அதோடு ஒருவித இரக்கமும் உண்டாகிவிட்டது. 'தன்னைக் காதலிக்காமல், குஸுமாவினிடம் தன் அன்பைச் செலுத்தினதற்காக மதனை வெறுப்பதா? அவனுக்கு இஷ்டம் இல்லாவிட்டால் அவன் என்ன செய்வான்?' என்று ஒரு முறை அவளுடைய மனமே மதனுக்குப் பரிந்து பேசியது. மற்றொரு முறை, வருஷக் கணக்காக வளர்த்து வந்த நட்பை எப்படி உதறித் தள்ளினானோ!' என்ற ஆத்திரமும் வந்தது.

"என்ன, பேசாமல் உட்கார்ந்திருக்கிறீர்களே!" என்றாள் நீலா, மௌனத்தைக் கலைத்து.

"நானா, நீயா?" என்றான் மதன்.

"அன்றைத் தினம் மெரினாவில் - நான் கீழே விழுவதற்கு முன் - உங்களை வெகு அவமரியாதையாகப் பேசிவிட்டேன். நீங்கள் தயவு செய்து என்னை மன்னித்து விடவேண்டும். நடந்தது நடந்து போய்விட்டது. இனிமேல் நான் மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன். நீங்களும் குஸுமாவும் சுகமாக வாழ வேண்டும் என்று நான் தினம் கடவுளை வேண்டிக்கொள்வேன்!"

மதன் துள்ளிக் குதித்தான். "என்ன உளறுகிறாய்?"

"கோபித்துக்கொள்ளாதீர்கள்! நான் உங்கள்மீது ஒரு குறையும் சொல்லவில்லை. எனக்கு அசூயை இல்லை" என்று

சொல்லும்போதே அவளுக்கு அழுகை வந்துவிட்டது. "வேணு உங்களைப்பற்றியும் குஸுமாவைப்பற்றியும் அடிக்கடி சொல்லியிருக்கிறார். நீங்கள் இரவில் உலாவப்போவதைக் கூட ஒரு நாள் காண்பித்தார்" என்றாள்.

"அட ராஸ்கல்! அவனைக் கொன்றாலும் பரவாயில்லை. அந்த அப்பாவிப் பெண்ணுக்கு எங்கள் வீட்டிலிருந்து ஹாஸ்டலுக்குத் துணை போகக் கூடாதா? அப்பொழுது சேஷாத்திரி உனக்குத் துணை போனதெல்லாம் கூடப் பிசகுதான்! ஐயோ! ஐயோ! அது இருக்கட்டும், நீ எப்படி நம்பினாய்! நீ என்னை அவ்வளவு நீசனாக நினைத்துவிட்டாய் அல்லவா! நான் பிரின்ஸிபால் கிருஷ்ணனின் மகன் என்பதை மறக்காதே! நல்லது, என் தகப்பனார் இட்ட வேலையைச் செய்தாகி விட்டது. நான் போய் வருகிறேன்" என்று மதன் எழுந்தான்.

"போகாதே! போகாதே!" என்று நீலா எழுந்து, குழந்தை போல் இரு கைகளாலும் அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு, "எனக்குத் துக்கம் தாங்கமுடியாமல் போய்விட்டது. அசூயை என் புத்தியைக் கலைத்துவிட்டது!" என்று அழத் தொடங்கிவிட்டாள்.

மதன், நீலாவை மெள்ளக் கட்டிலில் படுக்க வைத்தான். "நீ இப்படியெல்லாம் திடீர் திடீர் என்று எழுந்திருந்தால் மறுபடியும் மூட்டுப் பிசகிவிடும். ஜாக்கிரதை!" என்று எச்சரித்தான்.

"அப்போ, நீ போகாதே. எனக்கு நடக்கக் கால் சரியாகிற வரையிலும் இங்கேயே இருந்துவிடு. நாயினா ஒண்ணும் சொல்ல மாட்டார். இப்பொழுது நாயினா என் மனத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டார். என்னை விட்டால் அவருக்கு வேறு யார்?" என்று தழுதழுத்த குரலில் சொல்லிக் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"ஆமாம், இந்த வேணு சங்கதி என்ன? ஏன் குஸுமாவை அழவைக்கிறான்?" என்று கேட்டாள்.

"நீலாவைப் பார்த்ததனாலே."

“சரி, போதும். எனக்கு அப்புறம் கோபம் வரும்—”

“உள்ளதைச் சொன்னால் அப்படித்தான். அவனுக்கும் குஸுமாவுக்கும் கல்யாணம் நிச்சயம் ஆகியிருந்தது. முகூர்த்தம் மட்டும் வைக்கவில்லை. அப்படியிருந்தும் அந்தப் பயல் இந்த ஊருக்கு வந்து, உங்கள் நாயினாவைப் பிடிச்சு, உன்னை எப்படியாவது கல்யாணம் செய்துகொண்டுவிட வேண்டுமென்று தலைகீழாக நின்றான். அதற்காகச் செய்த பித்தலாட்டம் எல்லாந்தான் உனக்குத் தெரியுமே. ஆனால் குஸுமாவை நினைக்கிற போதுதான் எனக்குப் பகீர் என்கிறது.”

“நல்ல பெண்! இவன் இல்லாத போனால், எத்தனையோ பேர் மணந்துகொள்ளத் தயாராக இருப்பார்களே?”

“அந்தப் பேச்சு உனக்குங்கூடத்தான்” என்னும்போது, நீலா அவன் வாயை மூடினாள்.

“காதலர்கள்–கதைகளில்–இதயத்தைப் பறி கொடுத்து விட்டதாகச் சொல்வார்களே, அதைக் குஸுமாவிடத்தில் நேரில் காணலாம்.”

புண்ணியகோடி மெள்ள அவர்களிடம் வந்தார். மதன் சற்று விலகி உட்கார யத்தனித்தான்.

“சும்மா உட்காரு. ஏன் அம்மா, நீலா! நீ எழுந்து நடமாடுகிற வரையிலும் மதன் இங்கே இருந்தால் எவ்வளவோ உதவியாக இருக்குமே. அவனைக் கொஞ்சம் இருக்கச் சொல்லேன்” என்று அவர் கேட்டுக்கொண்டார்.

“சரி” என்று அவள் தலையை அசைத்தாள். மதன், தன் வீட்டுக்குச் சென்று சில அலுவல்களைக் கவனித்துவிட்டு வருவதாக விடை பெற்றுக்கொண்டு போனான்.

நீலா, தன் தந்தையின் முகத்தை மௌனமாகக் கவனித்த வாறே சிறிது நேரம் இருந்தாள். “நாயினா, என் பக்கத்துலே உட்கார மாட்டீங்க?”

“உட்காரரேன், அம்மா! அதைவிட எனக்கு என்ன வேலை!” என்று அவள் பக்கத்தில் அமர்ந்துகொண்டார். அவள் அவருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு, “எங்களுடைய

பேராசிரியர் அடிக்கடி சொல்வது எனக்கு நினைவுக்கு வரு கிறது; சொல்லட்டுமா?" என்றாள்.

"சொல்லம்மா! சொல்லு, சொல்லு!" என்று அவளுடைய கைகளை எடுத்துத் தன் முகத்தில் ஒத்திக்கொண்டார்.

"இந்த உலகத்துலே பொருள் இல்லாமல் வாழலாமாம். ஆனால், அன்பில்லாமல் வாழ முடியாதாம்."

"சரியான உண்மை! உண்மை உண்மை!" என்று அவர் திக்பிரமை பிடித்தவர்போல் நின்றார். அப்பொழுது நீலா தன் தாயாரை உரக்கக் கூவி அழைத்து, "நாயினாவைப் படுக்க வை, அம்மா" என்றாள்.

"ஊம், இது ஒண்ணு பிடித்துக்கொண்டதா! அண்ணு பேச்சை எடுக்காதேயின்னு எத்தனை வாட்டி சொல்லுவேன்."

"நான் எடுக்கவில்லை, அம்மா!"

"சரி, மெள்ள இப்படி வாங்க" என்று சாரதாம்பாள் அவரை அழைத்துச் சென்று, படுக்க வைத்தாள். இப்பொழுது, புண்ணியகோடிக்கு அடிக்கடி சித்தப்பிரமை ஏற்படுவதும், அதைப் போக்க, காலா கால மின்றித் தூங்க வேண்டிய அவசியமும் உண்டாகிவிட்டது.

சில தினங்களுக் கெல்லாம், நீலா எழுந்து நடமாட ஆரம் பித்தாள். அப்பொழுதும், மதன் தன் வீட்டிலேயே இன்னும் சிறிது காலம் தங்கி யிருக்க வேண்டும் என்று புண்ணியகோடி, தாமாகக் கிருஷ்ணன் வீட்டுக்குச் சென்று மதனின் தாயாரை யும் வேதவல்லியம்மாளையும் கேட்டுக்கொண்டார்.

அக்கா, நான் எவ்வளவோ தவறுதல்களைச் செய்தேன்! எனக்குப் புத்தி வந்தது! இனிமேல் நீலாவின் அன்புக்குக் குறுக்கே நான் நிற்க மாட்டேன். என் குழந்தை சுகமாக இருக்க வேண்டும்! மதனை விட்டு அவள் பிரிய மாட்டாள்! என்னை நீங்கள் வேறுபடுத்தக் கூடாது" என்று அவர் வேத வல்லியம்மாளிடம் கெஞ்சினார். தனக்குத் தெரிந்ததை எல்லாம் ஏதோ தன் நண்பன் கிருஷ்ணனுக்கும் எழுதினார்.

ஒரு நாள் மதன் குஸுமாவை அழைத்துக்கொண்டு வந்தான்.

"இதுவரையும் உங்களைக் காணுததற்கு மன்னிக்க வேண்டும். ஆனல் தினம் உங்கள் நிலைமையைக் குறித்து மதன் அண்ணுவைக் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். எனக்குப் பரீட்சை ஒன்று இருக்கிறதல்லவா?" என்று குஸுமா ஒரு புன்முறுவலை வரவழைத்துக்கொண்ட போதிலும், அவள் முகம் சோகமே உருவெடுத்தாற்போல் தோன்றியது.

"என்ன வார்த்தை சொன்னீர்கள்! உங்கள் மனம் எனக்குத் தெரியாதா? உங்களைப்பற்றி அவர் பேசாத நாள் கிடையாது" என்று நீலா மதனைக் காட்டினுள்.

"அண்ணு இல்லாவிட்டால் நான் பிழைத்திருப்பேனு! கூடப் பிறந்தவர்களுக்குக் கூட அவ்வளவு அன்பு இருக்காதே! அவர் கடனை என்னுல் ஒரு நாளும் தீர்க்க முடியாது!" என்ருள் குஸுமா.

"ஆமாம், நான் என்னத்தைச் செய்துவிட்டேன்! நீ ஒரு கவலையையும் வைத்துக்கொள்ளாதே, குஸுமா. பரீட்சை முடியட்டும். அப்புறம் எல்லாச் சிக்கல்களும் நீங்காவிட்டால் கேள்?" என்று மதன் தைரியம் ஊட்டினுன்.

"நான் ஒரு வார்த்தை சொல்கிறேன் உங்களுக்கு; என்னையும் கூடப் பிறந்தவள்போல் நினைத்துக்கொள்ளுங்கள். அது போகப் போகத்தான் தெரியும். நீங்கள் எங்கள் வீட்டிலேயே தங்கிவிட்டால், எனக்கு எவ்வளவோ சந்தோஷமாக இருக்கும்" என்ருள் நீலா.

பிறகு புன்முறுவலோடு சிறிது நேரம் பேசிவிட்டு, குஸுமா விடை பெற்றுக்கொண்டு, ஹாஸ்டலுக்குச் சென்ருள்.

**நூ**தன வித்தியாலயமும் அதைச் சேர்ந்த ஹாஸ்டலும் ஒரு முக்கியமான ரஸ்தாவை ஒட்டி இருந்தன. அந்த ரஸ்தா வழியாக வேணு அடிக்கடி மோட்டார் வண்டியை வேகமாக ஓட்டிக்கொண்டு போவதைக் குஸுமா பார்த்தது உண்டு.

ஆனால் அவன் எழுதிய கடிதங்களைத் திருப்பிக் கொடுக்க மறுத்ததிலிருந்து வேணு ஹாஸ்டல் பக்கமே வருவதில்லை. சொல்லப்போனால் ஹாஸ்டலண்டை வரும்போது, வண்டியை மேலும் சிறிது வேகமாக நடத்தினான் என்றே சொல்ல வேண்டும். அப்படிப்பட்டவன் இன்றைக்கு ஹாஸ்டல் ஓரமாக வண்டியை நிறுத்தி வைத்தது அவளுக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது. காரில் அவன் இல்லை. எங்கே போயிருப்பான்? தன்னைத் தேடிக்கொண்டு, ஹாஸ்டலுக்குள் போயிருப்பானோ? அப்படி நினைக்கும்போதே அவளுக்கு மயிர்க்கூச்சல் எடுத்தது. ஹாஸ்டலில் அவனுக்கு வேறு என்ன வேலை இருக்கக் கூடும்? எதுவாக இருந்தாலும், அவன் கண்ணில் பட அவளுக்கு இஷ்டம் இல்லை.

இரண்டொரு நிமிஷங்களுக்குள் வேணுவும், சுமார் ஐம்பது வயதுள்ள ஒரு ஸ்திரீயும் ஹாஸ்டல் வார்டனும் பேசிக் கொண்டே காரண்டை வந்தனர். குஸுமா நன்றாக மறைந்து கொண்டாள்; வேணு, அந்த அம்மாளை ஏற்றிக்கொண்டு, காரை ஓட்டிக்கொண்டு போய்விட்டான். பிறகு, இரைக்க இரைக்கக் குஸுமா ஹாஸ்டலுக்கு விரைந்து சென்றாள்.

## 13

லேடி வார்டன் குஸுமாவைக் கண்டதும் "அட, ஒரு நிமிஷம் முந்தி வந்திருக்கக்கூடாது! இவ்வளவு நேரம் காத்திருந்து இப்பொழுது தானே அவர்கள் போகிறார்கள்?" என்றாள்.

"யார்?"

"உனக்குத் தெரிந்தவர்களாமே? வேணுகோபாலும் அவருடைய தாயாரும்" என்று புன்சிரிப்போடு லேடி வார்டன் சொன்னாள்.

"வேணுவின் தாயாரா!"

"ஆமாம், அம்மா! உன்னைக் கண்டு பேச வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டுக்கொண் டிருந்தாள். இன்றிரவு மது

ரைக்கு அந்த அம்மாள் போகிறாளாம். ஒரு வாரத்தில் திரும்பி வந்து, உன்னைக் கட்டாயம் பார்ப்பதாகச் சொன்னாள்.''

''வேணுகோபால் ஒன்றும் சொல்லவில்லையா?''

''அவரை அந்த அம்மாள் பேச விட்டால் அல்லவா? மகன் மீது சற்றுக் கடுகடுப்பாகவே இருந்தாள். ஆனால் உன்மீது கௌரவம் இருக்கிறதென்று தெரிந்துகொண்டேன்'' என்றாள் சிரித்துக்கொண்டு.

''சரி, வந்தபோது பேசிக்கொள்கிறேன்'' என்று சொல்லி விட்டுத் தன் அறைக்குச் சென்றாள். அடக்கி வைத்திருந்த உணர்ச்சியெல்லாம் பொங்கி வழிந்தது. உடம்பெல்லாம் வியர்த்துவிட்டது. பதற்றம் எடுத்துக்கொண்டது. முகத்தைத் துடைத்துக்கொண்டாள். எதுவாக இருந்தாலும் ஒரு வாரத் துக்குள் தெரிந்துவிடப் போகிறது. ஆனால் ஒரு வாரம் எப்படிக் காத்திருப்பது! ஒன்றும் தோன்றவில்லை. படிப்பது என்பது முடியாத காரியம். தனிமையால் பயித்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது.

மறுநாள் காலையில் சுமார் ஒன்பது மணி இருக்கும். குஸுமா பாடத்தைப் படிக்க மனம் ஓடாமல், ஏதோ பத்திரி கையைப் பார்த்துக்கொண்டு, ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். பத்திரிகையிலும் கவனத்தைச் செலுத்த முடியவில்லை. ரஸ்தாவில் வருகிறவர்களையும் போகிறவர்களையும் பார்த்துக்கொண் டிருந்தாள்.

இந்தச் சமயத்தில் ரஸ்தாவின் திருப்பத்திலிருந்து வேணு வின் மோட்டார் வண்டி, அவளுடைய ஹாஸ்டல் புறமாக வந்து கொண்டிருந்தது. இப்பொழுது இருந்தாற்போல் இருந்து ஒரு நான்கு வயதுக் குழந்தை, ரஸ்தாவின் ஒரு புறத்திலிருந்து மற் றொரு புறத்துக்குக் கன வேகமாக மோட்டார் வண்டிக்குக் குறுக்கே ஓடியது. ஒரு பர்லாங்குக்குச் சத்தம் கேட்கும்படி, வேணு பிரேக்கைப் போட்டு, வண்டியை ஒரு பக்கமாக ஒதுக் கினான். வண்டி குழந்தையின்மீது ஏறாவிடினும், அதை வெகு தூரத்தில் தூக்கி எறிந்துவிட்டது. குஸுமா அலறிப் புடைத்

துக்கொண்டு இறங்கி, தெருவுக்கு ஓடினாள். தாய் ஓடிக் குழந்தையை வாரி எடுத்துக்கொண்டாள். அதற்குள் கும்பல் கூடிவிட்டது. கும்பலில் இருந்த சில துஷ்டர்கள் வேணுவின் மீது கை வைத்துவிட்டார்கள். “ஐயோ! அவருடைய பிசகு இல்லை! குழந்தையே குறுக்கே ஓடி வந்தது, அடிக்காதீர்கள்!'' என்று கதறிக்கொண்டு குஸுமா அவர்களைத் தடுத்து, வேணுவை மறைக்க முயன்றாள். அவள்மீதும் சில அடிகள் விழுந்தன.

“அவ்வளவு வேகமாய்ப் போவானேன்! அவுங்க பாட்டன் வீட்டு ரோட்டா?'' என்று ஒரு முரடன் ஓங்கி ஒரு குத்து விட்டான். “ஐயோ! வேண்டாம்! வேண்டாம்!'' என்று அவள் வேணுவின் முன்னால் நின்றுகொண்டு கெஞ்சினாள்.

“உன் புருசனா?'' என்றான் ஒருவன். “இல்லை, அப்பா. நான் இந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறேன். ஐயோ! அடிக்க வேண்டாம், அப்பா! வாயிலே ரத்தம் வருகிறதே! ஐயய்யோ! செத்துப்போயிடுவார்போல் இருக்கிறதே!'' என்று 'ஹோ' வென்று அழும்போதே, வேணு மூர்ச்சை போட்டுக் கீழே சாய்ந்துவிட்டான். இப்பொழுது கும்பலில் பெரியவர்களாக இருந்த இரண்டொருவர் முன் வந்து, “அட, அவன் மேலே மெய்யாலும் தப்பு இல்லாமல் இருக்கலாண்டா. எட்டிப் போங்கடா! அடப் பாவிங்களா, இந்தப் பெண்ணையும் அடிச்சிட்டாங்க, அப்பா! நீ ஏம்மா இதுலே வந்து பூந்தே!'' என்று அவர்கள் எல்லோரையும் விலக்கினார்கள்.

இப்பொழுது, அடிபட்ட குழந்தையுடன் அதன் தாயார் வந்தாள். குழந்தைக்கு அதிக அடி இல்லாததால் அது நடந்து வந்தது. “குழந்தைக்கு ஒரு பயமும் இல்லை, பார்த்தீங்களா? ஆனால், இவரைக் கொன்றுவிட்டாங்களே!'' என்று விம்மிக் கொண்டு, “யாராவது ஒரு டாக்ஸியைக் கூப்பிடுங்களேன்! இவரை உடனே டாக்டரண்டை இட்டுக்கொண்டு போக வேண்டுமே!'' என்று நெஞ்சம் உடைந்து விடுவதுபோல் குஸுமா பரிதவித்தாள். வழியே சென்ற ஒரு டாக்ஸி நிறுத்தப்

பட்டது. திணறிக்கொண்டிருந்த வேணுவை எல்லோரும் சேர்ந்து வண்டியில் அமர்த்தினார்கள். பிறகு, அடிபட்ட குழந்தையையும் அதன் தாயையும்கூட வண்டியில், தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, டாக்டர் வீட்டுக்கு விரைந்தார்கள்.

டாக்டர், முதலில் வேணுவைப் பரிசோதித்துப் பார்த்தார். "உள்ளூற நல்ல அடி விழுந்திருக்கிறது."

"பிழைப்பாரா?" என்று குஸுமா அழுதாள்.

"பயித்தியமாகப் பேசுகிறாயே, அம்மா. இன்னும் இவ்வளவு அடி விழுந்தால்கூடச் சாகமாட்டார்! ஒரு வாரம் அசையாமல் ரெஸ்டும் சிகிச்சையும் இருந்தால் சரியாகப் போய்விடுகிறது" என்று அவர், வேணுவுக்கு ஒரு 'இன்ஜெக்ஷனை'க் கொடுத்தார். குழந்தைக்கு அதிர்ச்சியைத் தவிர வேறு அடி இல்லாததால், ஏதோ மாத்திரைகளைக் கொடுத்து, அந்தனுடைய தாயாரை அனுப்பிவிட்டார். பிறகு குஸுமாவுக்கும் வேண்டிய சிகிச்சையைச் செய்தார்.

"ஒரு வாரம் இங்கேயே இருக்க வசதி கிடைக்குமா, டாக்டர்?"

"இங்கே பெட் ஒன்றும் கிடையாதே. உங்களுக்கு வீடு இல்லையா?" என்று அவர் சிறிது ஆச்சரியத்தோடு கேட்டதற்குப் பதில் சொல்லாமல் எதையோ நினைத்துக்கொண்டவள் போல், "இதோ வந்துவிட்டேன்" என்று டெலிபோன் புஸ்தகத்தை எடுத்து, புண்ணியகோடியின் எண்ணைத் தேடிப் பிடித்து, அவள் பேசினாள்.

"யார் பேசுகிறது? நீலாவா? அம்மா! ஒரு ஆபத்து ஏற்பட்டு அவர் நினைவில்லாமல் கிடக்கிறார்!"

"யார்?"

"வேணு! குத்துயிராய் அடித்துவிட்டார்கள்!—"

"என்னது!" என்று டெலிபோனில் குரல் மாறியது.

"மதன் அண்ணாவா? அண்ணா! அவரை அடித்துப்

போட்டுவிட்டார்கள்! எனக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை! நீ இங்கே வர மாட்டாயா?''

''பயப்படாதே, அம்மா! இதோ வருகிறேன், என்னோடு நீலாவும் வருகிறாள்.'' பேச்சு முடிந்தது.

குஸுமாவின் முகத்தில் தெளிவு படர்ந்தது. மெதுவாகக் கண்களைத் திறந்துகொண்ட வேணுவைப் பார்த்து, ''என்ன செய்கிறது? என்னைத் தெரிகிறதா?'' என்று அன்போடு அவள் கேட்க, வேணு குழந்தைபோல் அழ ஆரம்பித்தான். ''குஸுமா! குஸுமா!''என்று அவள் கைகளைப் பிடித்துக்கொண் டான். மயக்கம் ஒருவாறு தெளிந்துவிட்டது. இப்பொழுது, மதனும் நீலாவும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வருகையால் உண்டான நன்றி, குஸுமாவுக்கு அழுகையாகத் தோன்றியது. வேணுவும் எல்லோரையும் தெரிந்துகொண்ட போதிலும், மயக்க மருந்தால், உண்டான ஒருவித போதையினால், இன்னும் அவன் பேச்சில் பிதற்றல் இருந்தது. ''குஸுமா! அம்மா உன்னைப் பார்க்க வந்தாள். நானும் வந்தேன். இப்போதுகூட உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். குஸுமா! என்னை மன்னிக்க மாட்டே? மாட்டே? ஓ! உன்னையும் அடித்துவிட்டார்களா! ராஸ்கல்ஸ்! உனக்கு நல்ல காயமா?''

''எனக்கு ஒன்றுமே இல்லையே! மதன் அண்ணுவும் நீலா வும் சங்கதி தெரிந்ததும் ஓடி வந்திருக்கிறார்களே, தெரிய வில்லையா?''

''தெரியுது, தெரியுது. தேங்க்ஸ், தேங்க்ஸ்!'' என்றான். மதன், அவனுடைய கரங்களை உருக்கத்தோடு பிடித்துக் கொண்டபொழுது, ''தெரிந்துகொள்ளாமல் போனேன்! தெரிந்துகொள்ளாமல் போனேன்! உன்னைத்தான், குஸுமா! என்னை மன்னித்துவிடு, என் குஸுமா இல்லை? மன்னிக்க மாட்டே?'' என்றான் வேணு.

நீலாவும் மதனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண் டனர். ''நீயும், ஐயோ, நீங்களும் என்னை மன்னிக்க வேண்

டும்'' என்றாள் நீலா, குறும்புத்தனம் நீங்காததுபோல.

"இங்கேயுமா சண்டை?" என்றான் மதன்.

பிறகு குஸுமாவையும் வேணுவையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு, அவர்கள் தங்கள் இடத்துக்குச் சென்றார்கள். குஸுமா, வேணுவின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லாததுபோல் நடந்துகொண்டாள். தலை போகிற விஷயம் ஒன்றும் இல்லாததால், வேணுவுக்கு நடந்த விபத்தைப்பற்றி அவனுடைய பெற்றோர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற தீர்மானத்துக்கு அவர்கள் வந்தார்கள்.

குஸுமாவின் பணிவிடைகளின் மூலம், வேணுவுக்குச் சீக்கிரமாகவே சுபாவமான ஆரோக்கியமும் பலமும் வந்து விட்டன. ஒரு வாரத்துக்குப் பிறகு, அவனுடைய தாயார் அவனைப் பார்க்க வந்தபொழுது, அவனுக்கு ஹிம்சை ஏற்பட்டதா என்று நினைக்கக் கூட அவளால் முடியவில்லை. ஆனால், அதிலும் அந்த அம்மாள் ஒரு நன்மையைக் கண்டாள்.

இல்லாவிட்டால் குஸுமாவின் பெருந்தன்மை அவனுக்கு எப்படித் தெரியும்! "ஏண்டா, வேணு, இந்தப் பத்தரை மாத்துத் தங்கத்தை அழ வைக்க எப்படிடா மனது வந்தது!"

"அம்மா! என்னைச் சும்மாப் புண்படுத்தாதே! செத்த பாம்பைத் திருப்பித் திருப்பியா அடிப்பார்கள்! குஸுமா வாயைத் திறக்க மாட்டாளே. உன் உபத்திரவமல்ல பெரிதாய் இருக்கிறது!" என்று அவன் நொந்துகொண்டான்.

"சரி, எப்பொழுது முகூர்த்தத்தை வைக்கிறது?"

"எனக்கென்ன தெரியும்? உன் பாடு, குஸுமாவின் பாடு" என்றான் வேணு. குஸுமாவின் முகம் சிவந்தது.

"அவளுடைய பரீட்சை முடியட்டும், மாமி" என்றாள் நீலா.

"இன்னும் ஒரு பத்து, பன்னிரண்டு நாள்தானே, மாமி. கஷ்டப்பட்டதெல்லாம் ஏன் வீணாகப் போக வேண்டும்?"

என்று மதனும் சேர்ந்து சொன்னான். அதன் மேல், அந்த அம்மாள் அதற்கு இணங்கி, வேணுவை ஊருக்கு அழைத்துக் கொண்டு போனாள்.

## 14

புண்ணியகோடியின் குடும்பத்தில் உண்டான கொந்தளிப்பு ஒருவாறு அடங்கிக்கொண்டு வர, அதே சமயத்தில் அஸ்ஸாம் மலைச்சாரல்களிடையில் ஆரம்பித்த ஒரு சம்பவத்தின் வேகம், நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போயிற்று. உடைந்து சின்னபின்னமாய்ப் போன விமானத்திலிருந்து அதை ஓட்டிய சேஷாத்திரி இறந்துவிட்டான் என்று உலகம் நினைத்தது. ஆனால் அவனோ சாகாமல், கனவிலும் நினைக்கக் கூடாத சங்கடங்களை அநுபவித்துக்கொண்டிருந்தான். இனி விமானம் நிலைக்காதென்று தெரிந்ததும், அவன், 'கடவுள் விட்ட வழி! காற்றுப் போன போக்கு!' என்று 'பாரச் சூட்'டில் இறங்கி விட்டான். அது காற்றில் மிதந்துகொண்டே போய், ஒரு பள்ளத்தாக்கில் இறங்கியது. உடலில் ஒரு கீறல்கூட இல்லாமல் அவன் புல்லாந் தரையை மிதித்தான்.

கீழே நின்றவன் அண்ணாந்து பார்த்தான். அடிவயிற்றில் தீ மூட்டியதுபோல் 'பகீர்!' என்றது. நான்கு பக்கங்களிலும் சுவர் வைத்தாற்போல் செங்குத்தாக மலை ஓங்கி நின்றது. உயரத்தைக் கண்டுகொள்ளும் அநுபவத்திலிருந்து, அது ஆயிரம் அடிக்கு மேல் இருக்கும் என்பதைத் தெரிந்து கொண்டான்.

மலையை ஒட்டி, நாலா பக்கத்திலும் நூறடி உயரத்துக்குக் காடு அடர்ந்திருந்தது. அதற்கு மேல் கல்லும் பாறையுமே தென்பட்டன. அந்தப் பாதாளத்தில் மிருக சஞ்சாரங்கூட இராதோ என்ற சந்தேகம் அவனுக்கு வந்துவிட்டது. அதை விட்டு வெளியேற வழி இராது என்ற கிலியும் பிடித்துக்கொண்

டது. இதை விட, விமானத்தோடு உயிர் துறந்திருக்கலாமே என்று தவித்தான். சிறிதும் பழுது ஏற்படாத கைக் கடிகாரம், பிற்பகல் மூன்று மணி என்பதைத் தெரிவித்தது. ஆனால் ஏதோ வெளிச்சம் இருந்ததே தவிர எங்கும் வெயில் என்ற குறியையே காணோம். இருட்டுவதற்கு முன், இரவைக் கழிக்க வழி தேட வேண்டும் என்பதை உணர்ந்தான். 'பாரச்சூட்'டிலிருந்து, கயிறு, துணி, இன்னும் உபயோகப்படுத்தக் கூடிய சில சாமான்களையும் கத்தியால் அறுத்து எடுத்துக்கொண்டு, சிறிது தூரத்தில் தனியாக நின்ற ஒரு மரத்தண்டை போனான். இப்பொழுது ஒரு கிளிக் கூட்டம் பறந்து வந்து, சீதாப் பழம் போன்ற ஒருவிதக் கனியைக் கொத்துவதைக் கண்டான். பிறகு, அவனும் அவ்விதப் பழம் ஒன்றைத் தேடிப் பறித்துத் தின்று பார்த்தான். அதனுடைய இனிமை, அவ்வளவு துன்பத்திலும் ஒருவித ஆனந்தத்தைத்தான் கொடுத்தது! பிறகு மரத்தின்மீது ஏறி, ஒருகால் தூங்கிவிட்டாலும் தவறி விழாமல் இருக்கும்படியான கிளைகளைத் தேடி, வேண்டிய பத்திரங்களைச் செய்துகொண்டான். அவன் நினைத்தவாறு சீக்கிரமே இருள் சூழ்ந்துகொண்டது.

பறவைகளின் ஓலமும், வண்டுகளின் ரீங்காரமும் நீங்க, வேறொருவித சத்தமும் அவனுக்குக் கேட்கவில்லை. கடவுளைப் பற்றி நினைக்கும் வழக்கம் அவனுக்கு இல்லை. ஆனால் சிறு பையனாக இருந்த பொழுது, தன் தாயார் பூஜை செய்கையில் அவனும் கைகளைக் கூப்பி வணங்கியது உண்டு. அந்த நினைவு இப்பொழுது வந்தது. அவனை அறியாமல் அவன் நாவில், "முருகா, முருகா!" என்ற சத்தம் எழும்பியது. அடைக்கலம் புக, தனக்கு வேறு யாரும் இல்லை என்ற உணர்வும் நம்பிக்கையும் உறுதி யாயின. ஒரு தைரியம் வந்தது. அதோடு ஒரு பொறுமையும் உண்டாகியது. பசியாலும் பனியாலும் அவஸ்தைப் பட்டுக்கொண்டு, எப்படியோ மரத்தின்மீது இரவைக் கழித்தான்.

இப்படிப் பல இரவுகளும் பகல்களும் கழிந்தன. பசியின்

கொடுமை இருந்தால், கிளிகள் உண்ணும் பழவகைகளைக் கவனித்து, அவைகளையே தானும் பறித்துத் தின்பான். பழங்களைப் புசிப்பது, ஓடையில் நீரைக் குடிப்பது, இரவில் மரத்தில் தொத்திக்கொள்வது, இவ்வாறே நாட்கள் ஓடின.

ஏதோ குருட்டுக் கணக்கே தவிர, சரியாக இவ்வளவு நாட்கள் என்று அவன் கணக்கிடவில்லை. ஒரு நாள் போலஃ இடி முழக்கம்போன்ற உறுமல் ஒன்று கேட்டது. அவனுக்கு மயிர்க்குச்சிட்டது! மலைஅடிவாரத்தில் குகைகள் இருக்க வேண்டும் என்று நினைத்தான். ஒரு விருட்சத்தின் கிளைகள் அலங்கோலப்பட்டு ஆடும் ஓசை, அவனை அண்ணாந்து பார்க்கச் செய்தது. அவன் என்றும் காணாத காட்சியைக் கண்டு, ஸ்தம்பித்து விட்டான். ஒரு பிரம்மாண்டமான பாம்பு, ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்துக்குத் தாண்டிக்கொண்டிருந்தது! அவன் பிறந்தது முதல் அவ்வளவு பெரிய பாம்பைக் கண்டதே இல்லை! அதன் தலையே ஓர் அடிப் பருமன் இருந்தது. அவனை உற்றுக் கவனிப்பதுபோல் அது தலையைக் கொக்கைப்போல் உயர்த்தியது.

சேஷாத்திரி ஓட்டம் பிடித்தான். நீரோடை மறையும் குகையண்டை வந்த பிறகு அவன் திரும்பிப் பார்த்தான். பாம்பும் மரத்தை விட்டு இறங்கவில்லை; மூச்சுத் தெறிக்க அத்திசையை நோக்கியவாறே சில நிமிஷங்கள் நின்றான். பிறகு தற்செயலாகத் திரும்பவே, தனக்குப் பின்னே ஐம்பது அடி தூரத்தில், புலியைப்போன்ற ஒரு பெரிய மிருகம் வாலை ஆட்டிக்கொண்டு அவன்மீது பாயத் தயாராக இருப்பதை உணர்ந்தான்! கதி கலங்கிற்று! புத்தி மயங்கியது! திடீரென்று நீரோடையில் குதித்தான்! அது அம்பைப்போல் அவனைப் பாதாளத்துக்கு அடித்துக்கொண்டு போயிற்று!

இதே தருணத்தில் சென்னையில் கண்ணயர்ந்த புண்ணியகோடி, உளறிக் கூக்குரலிட்டுப் புலம்பினார்! நீலா, அவளுடைய தாயார், மதன் மூவரும் ஓடிவந்து, அவரை எடுத்து உட்கார வைத்து, "என்ன! என்ன!" என்று பரிவோடு கேட்டார்கள்.

புண்ணியகோடி, பரிதாபப்படும்படி அழுதுகொண்டு, "பெரிய புலி, அம்மா! சேஷாத்திரி மேலே பாய வருது! போக வழியில்லாமல் குழந்தை தத்தளிக்கிறான்!" என்று மேலே பேச முடியாமல் அவர் விம்மினார்.

"அவ்வளவு நிஜமாக இருந்தது. அம்மா! ஐயோ! சேஷாத்திரி! என் கண்ணே!" என்று குலுங்கிக் குலுங்கி அழுது தவித்தார். எல்லோருடைய கண்களிலும் நீர் பெருகி விட்டது. நீலா, கண்களைத் துடைத்துக்கொண்டு, தன் நாயினுவின் பக்கத்தில் உட்கார்ந்து, தட்டிக் கொடுத்து, நல்ல வார்த்தைகளைச் சொல்லிச் சமாதானப்படுத்தினாள்.

குகையில் இழுத்துக்கொண்டு போகப்பட்ட சேஷாத்திரியை, உடலில் மூலைக்கு மூலை கற்கள் மோதியதால் உண்டான வலி, சில நிமிஷங்களுக்கே பாதித்தது. பிறகு அவனுக்குப் பிரக்ஞை இல்லாமல் போய்விட்டது. அவனுக்கு நினைவு வந்த பொழுது அவன், தான் புல்லாந் தரையில் விழுந்து கிடப்பதை உணர்ந்தான். பல மலைவாசிகள் அவனைச் சூழ்ந்துகொண்டிருந்தனர். அடிபட்ட மணிக்கட்டுக்கு ஒருவன் எதையோ வைத்துக் கட்டிக்கொண்டிருந்தான். இனி வெயிலைக் காண முடியாது என்று இருந்தவனுக்கு, மாலை வெயிலின் இன்பம் பரமானந்தத்தைக் கொடுத்தது.

அவன் எழுந்து உட்கார முயன்றான். மலை வாசிகள் அன்போடு உதவி புரிந்தனர். அருகில், குகைத் துவாரத்திலிருந்து ஓடி வந்த அருவியையும் சேஷாத்திரியையும் மாற்றி மாற்றிக் காண்பித்து, அவர்களுடைய பாஷையில் சொன்னதையெல்லாம் தான் தெரிந்துகொண்டதாகச் சேஷாத்திரி தலையை அசைத்தான். பிறகு, அவர்கள் அவனை மெள்ளத் தங்கள் இருப்பிடத்துக்குச் அழைத்துச் சென்றனர். அன்றிரவு, என்றும் மறக்காத முறையில் அவர்கள் அவனுக்கு அவ்வளவு அன்போடு பணிவிடை செய்தனர்.

மறுநாள் காலையில், சேஷாத்திரிக்குப் பிரயாணத்துக்கு வேண்டிய தென்பு ஏற்பட்டு விட்டது. தான், ஷில்லாங்குக்குப்

போக வேண்டும் என்பதை அவர்களுக்கு அவன் தெரிவித்தான். கடிகாரம் உடைந்துவிட்ட போதிலும், தங்கச் சங்கிலி, கையோடு இருந்ததால், அதை அவன் அவர்களுக்கு வெகுமானமாகக் கொடுத்தான். பிறகு ஒரு ரயிலடிக்கு வழிகாட்டச் சொல்லி, ஷில்லாங்கை அடைந்தான்.

சேஷாத்திரி, வீட்டில் நுழைந்தபோது பிரின்ஸிபால் கிருஷ்ணன் ஒருகணம் பிரமித்துச் சிலைபோல் நின்றுவிட்டார். பிறகு, "நீயாடா, அப்பா!" என்று அவர் பரமானந்தத்தோடு அவனைக் கட்டி அணைத்துக்கொண்டார்.

"மறு பிறப்படா, குழந்தை! எல்லாம் கடவுளின் கிருபை! அவர் கருணையை என்னென்று சொல்வது!" என்று அவன் உடம்பை யெல்லாம் தடவிக் கொடுத்தார். "ஆமாம், மூடர்கள்! நன்றாகத் தெரியாமல், இறந்ததாக எப்படிச் செய்தியை வெளியிட்டார்கள்?"

"அவர்கள்மீது தப்பு இல்லை, மாமா! உண்மையில் நான் இறந்தவனே, பிழைத்து வந்துவிட்டேன்!" என்று அவன் தன் அநுபவங்களை விவரமாக எடுத்துச் சொன்னான்.

"என்ன ஆச்சரியம்! வாழ்க்கை இதைவிட விசித்திரமாக இருக்க முடியுமா! ஆஹா! புண்ணியகோடி எவ்வளவு ஆனந்தப்படுவான்! இதோ பார், இனிமேல் ஊரை விட்டு நகராதே. உனக்கு இடது மணிக்கட்டு உடைந்ததும் நல்லதுக்குத்தான். இனி உன்னை விமானப்படையில் சேர்க்க மாட்டார்கள். தெரியுமா?"

"மலை வாசிகள் இந்த வைத்தியத்தில் நிபுணர்கள், மாமா. அது சரியாகப் போய்விடும்."

"என்ன சரியாகப் போனாலும், அது ஓச்சம் ஓச்சமே. நீ விமானத்தை ஓட்டலாம். ஆனால் விமானப் படைக்குத் தகுதி என்று எந்த டாக்டரும் உனக்கு 'ஸர்டிபிகேட்' கொடுக்க மாட்டார்."

"ஆமாம்" என்று சேஷாத்திரி ஒப்புக்கொண்டான்.

பிறகு, சேஷாத்திரியின் தேக நிலைமை விமானப் பிரயாணத்துக்குத் தகுதியாக இருந்தது என்பதை, ஒரு டாக்டர் மூலம்

அவர் தெரிந்துகொண்டார். பிறகு புண்ணியகோடிக்குத் தந்தி சேர்ந்த சில மணி நேரத்துக்குள், விமானமும் சென்னையை அடையும்படியாகப் பிரயாணத்தை ஏற்பாடு செய்துகொண்டு, சேஷாத்திரியுடன் அவரும் விமானம் ஏறிவிட்டார்.

சென்னையில் விமானத்தை விட்டுப் பிரின்ஸிபால் கிருஷ்ணனும் சேஷாத்திரியும் இறங்கினபொழுது, சேஷாத்திரி, அன்பு வெள்ளத்தில் ஆழ்த்தப்பட்டுத் திணறினன். அவ்விரு குடும்பங்களோடு—தங்களுக்குச் சேஷாத்திரியை முன் பின் தெரியாவிடினும்—குஸுமாவும் வேணுவுங்கூட வந்திருந்தார்கள். தந்தை ஒரு பக்கம், தாய் ஒரு பக்கம், தங்கை ஒரு பக்கம் அவனைப் பிடித்து, ஆனந்த பரவசப்படும்பொழுது, பிரேமா அவன் சட்டையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அழுவதை அவன் கவனித்து, "இங்கே அழக்கூடாது, பிரேமா!" என்று அன்பு ததும்பச் சொல்லிக் கண்களைத் துடைத்தான். வீட்டுக்குப் போகும்போது, வண்டியில் அவன் பக்கத்தில் பிரேமா உட்கார்ந்துகொண்டாள். வீட்டை அடைந்ததும், அடக்கி வைத்திருந்த களிப்பெல்லாம் ஆரவாரத்தோடு கிளம்பியது.

சிறிது சிற்றுண்டி முடிந்ததும், அனைவரையும் உட்கார வைத்து, ராமாயணக் கதை சொல்வதுபோல் சேஷாத்திரி தன் வரலாறுகளைத் தெரிவித்தான். ஆதிகாலம்போல் கிருஷ்ணனின் குடும்பம் முழுவதும் அங்கே கூடியிருந்தது. கிருஷ்ணனின் வேலையாள் முத்து, ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு, சந்தோஷம் பொறுக்க மாட்டாமல் சிரித்தவாறே இருந்தான்.

"நம்மெல்லோரையும் விட, உண்மையில், முத்துவுக்குத்தான் அதிக சந்தோஷம்" என்றார் கிருஷ்ணன். உடனே வெட்கப்படுவதுபோல், தன் மலர்ந்த முகத்தை இரு கைகளாலும் முத்து மூடிக்கொண்டான்.

"இப்பொழுதுதான் கல்யாண வீட்டைப்போல் இருக்கிறது" என்றாள் வேதவல்லியம்மாள்.

"போல என்ன? கல்யாண வீடுதான், அக்கா! நான் என்ன பிளான் போட்டிருக்கிறேன், தெரியுமல்ல. முத

வில் குஸுமாவின் கல்யாணம்; இரண்டாவது நீலாவுது. மூன்ருவது, பிரேமாவுது. என்னுடைய பிளான், அப்பா, இது. நீலா என்ன சொல்லுகிருளோ?'' என்ருர் புண்ணியகோடி.

“அதென்ன? எல்லாம் நீலா சொன்னபடிதாளு?''

ஆமாம், கிருஷ்ணு! இப்பவும் அப்படித்தான், இனிமேல் எப்பவும் அப்படித்தான். எனக்குப் பாடம் கற்பித்தவள் அல்லவா அவள்?''

“சும்மா இரு, நாயிஞு!'' என்று நீலா சலித்துக்கொண்டாள்.

“சரி, அம்மா, சரி, அம்மா. கிருஷ்ணு, மேலே என் ரூமுக்கு ஒரு நிமிஷம் வாயேன், ஒரு வார்த்தை சொல்லவேணும்.''

“சரி, வருகிறேன்'' என்று புண்ணியகோடியுடன் கிருஷ்ணன் மாடிக்குச் சென்ருர். அறைக்குள் புகுந்ததும், புண்ணியகோடி கிருஷ்ணனுக்குச் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கப் போனுர்.

“இதென்னது! சே, சே!'' என்று கிருஷ்ணன் அவரைப் பிடித்துத் தடுத்தார்.

“கிருஷ்ணு! நான் செய்ததையெல்லாம் மறந்துவிடு. நான் ஒரு பேதை. முத்துவும் நானும் ஒன்று. பணம் சம்பாதித்தால் ஆகிவிட்டதா? குழந்தை நீலாவுக்குத் தெரிந்ததுகூட எனக்குத் தெரியாமல் போய்விட்டதே! உன்னைப்போல் நான் அறிவாளியல்ல. உன்னைப் படாத பாடு படுத்திவிட்டேனே! நீ எப்படி மறக்கக் கூடும்?''

“போனதைப்பற்றி நான் நினைப்பதே இல்லை. அதையெல்லாம் எப்பவோ மறந்துவிட்டேன், புண்ணியா!''

“நிஜமாகவா! என்ருல் நம்ப முடியவில்லையே! நான் கொஞ்ச நஞ்ச இமிசையா செய்தேன்! உன்னைப் போன்றவர்களுக்கு, கொள்கை, உயிருக்கும் மேலானது என்பது இப்பொழுதுதானே தெரிந்தது. அதையும் என் குழந்தைதான் ரூபிக்கவேண்டி இருந்தது! கடைசியாகக் கேட்கிறேன், கிருஷ்ணு! என்மேல் உனக்குக் கோபமே இல்லையா?''

“இல்லை, இல்லை! ஏன் நம்பமாட்டேன் என்கிருய்!''

புண்ணியகோடி ஒரு கணம் தன் நண்பனின் முகத்தைப் பார்த்தார்; கண்ணீர் ஆறாய்ப் பெருக, மறுபடியும் கிருஷ்ணனின் கால்களைப் பிடிக்கப் போனார்.

"ஊஹூம்! இப்படிச் செய்தால்தான் எனக்குக் கோபம் வரும்" என்று அன்போடு புண்ணியகோடியைத் தூக்கி, தோள் மீது கையைப் போட்டுக்கொண்டு, கிருஷ்ணன் அவரைக் கீழே அழைத்துக்கொண்டு வந்தார்.

சீக்கிரமாகவே, புண்ணியகோடி ஏற்பாடு செய்திருந்தபடி மூன்று திருமணங்களும் வெகு சிறப்போடு நடைபெற்றன என்று சொல்ல வேண்டுமா என்ன?

முற்றும்

DR. T. P. M. LIBRARY
170642
MADURAI